KALKI
27.8.2000
ரூ. 5.00

கல்கி



‘எதற்கும் அஞ்சமாட்டேன்!’’

— மனம் திறக்கிறார் ரோஜா

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

டெபாசிட் திரட்டும் முகாம்

சேலம்

ஸ்ரீ வாசவி வசந்த மண்டபம்
37, முதல் அக்ரஹாரம், சேலம்-635 001.
தொலைபேசி : 265460

நாள் : 23 & 24 ஆகஸ்ட், 2000
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

கரூர்

நாரதகான சபா
1, காந்தி சாலை (தெற்கு)
பழைய பேருந்து நிலையம் அருகில், கரூர்-639002
தொலைபேசி : 60678

நாள் : 25 ஆகஸ்ட், 2000
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

காலம்	வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம்	
	மாதத்திற்கு	காலாண்டிற்கு
12 மாதங்கள்	-	10.59%
24 மாதங்கள்	-	11.10%
36, 48, 60 மாதங்கள்	12.00%	12.12%

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

[illegible]

தமிழ்நாடு விடுதலைப் படைத் தலைவர் பேட்டி



கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் வீரப்பனைப் பின்னணியில் இருந்து இயக்குவோர், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இந்தத் தமிழ்நாடு விடுதலைப் படையை உருவாக்கியவர் புலவர் கலியபெருமாள். வயதாகி விட்டதாலும் குழுவில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும் இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருக்கும் அவரைப் பெண்ணாடத்தில் சந்தித்தோம். இதுவரை நேரில் சந்திக்காவிட்டாலும் வீரப்பனைத் தலைவராக ஏற்கவும் முன்நிறுத்தவும் தயாராயிருந்தார் கலியபெருமாள்!

வீரப்பன்தான் தலைவர்!



“தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கவும் தமிழ் தேச விடுதலைக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதம் தாங்கிய அமைப்புதான் தமிழ்நாடு விடுதலைப் படை. நன்றாக வளர்ந்து வந்த இயக்கம்தான். 1985-ல்தான் முதல் கருத்து முரண்பாடு வருகிறது. இந்த வருஷத்தில் ஈழத் தமிழர் மாநாட்டை நாங்கள் நடத்தினோம். மாநாட்டு முடிவில் தமிழ்நாடு உள்ளிட்ட எல்லா தேசிய இன விடுதலைக்கும் பாடுபடுவது என்ற தீர்மானத்தை முன் வைத்தார் பொன்பரப்பியில் கொல்லப்பட்ட தமிழரசன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) என்று வைத்துக் கொண்டு தமிழ்நாடு விடுதலையை வற்புறுத்த வேண்டாம். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் தேவையில்லை என்றேன். ஏற்கவில்லை. இயக்கத்தின் பணப் பிரச்னையைச் சமாளிப்பதற்காக வங்கிகளில் கொள்ளையடிக்க வேண்டும் என்றார்கள். நான் இதற்கும் முரண்பட்டேன். எல்லாவற்றுக்கும் ஆயுதம் ஏந்துவோம் என்றார்கள். தேவைப்படும் போது மட்டும் ஆயுதம்

எடுப்போம் என்றேன். இந்த முரண்பாடுகளால் இயக்கத்திலிருந்து வெளியேறினேன். வெளியேறினேன் என்றாலும் கொள்கையிலிருந்து பின்வாங்கவில்லை. வயதாகி விட்டதாலும் தலைமறைவு வாழ்க்கையை இனி வாழ முடியாது என்பதாலும் நேரிடையாக ஈடுபடாமல் அவர்களுக்கான ஆலோசனை வழங்குதல் உள்ளிட்டப் பணிகளை செய்து வருகிறேன்.''



''ஒன்றுபட்டுள்ள ஜனநாயக நாட்டில் தனித் தமிழ்நாடு தமிழ் தேசம் என்றெல்லாம்...''

''பொறுங்கள்... எது ஒருமைப்பாடு? காவிரியில் 250 டி.எம்.சி தண்ணீரைத் திறந்து விட சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டும் கர்நாடகம் திறந்து விட்டதா? பெரியார் அணை பிரச்னை முடிந்து விட்டதா? பெங்களூரில் திருவள்ளுவர் சிலையைத் திறக்க முடியவில்லை. பிறகு என்ன தேசிய ஒருமைப்பாடு இருக்கிறது? காவிரி தண்ணீர்ப் பிரச்னை என்று வந்தால் கர்நாடகாவில் அனைத்து அரசியல்வாதிகளும் ஒற்றுமையாகி விடுகிறார்கள். ஆனால் தமிழகத்தில்...!''

''அதற்காக ஒரு நடிகரை கடத்தி வைத்துக் கொண்டு வீரப்பன் மிரட்டுவது தான் சரியானது என்கிறீர்களா?''

''இவ்வளவு நாளும் வாயை மூடிக் கொண்டு பூச்சாண்டிக் காட்டியவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்ததும் கர்நாடகாவிலிருந்து இப்போது ஓடி வருகிறார்களே... காவிரிப் பிரச்னையைத் தமிழக கர்நாடக அரசியல்வாதிகள் அரசியல் லாபத்துக்காக இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு நடிகரைக் கடத்தி வைத்துக் கொண்டு கோரிக்கை வைக்கும் போது தீர்வுக்கு ஓடி வருகிறார்கள். இதுதான் தேவை. தீர்வுதான் முக்கியம். அப்படியென்றால் இது சரியான வழிதானே!''

''சரி, இதைப் போலவே தமிழகத்தைச் சேர்ந்த ஒரு முக்கியத் தலைவரையோ நடிகரையோ கர்நாடகத்தினர் யாராவது பிடித்து வைத்துக் கொண்டு மிரட்டினால்...?''

''முடியாது. நிச்சயம் முடியாது. மக்கள் ஆதரவு இல்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. வீரப்பன் செய்தாரென்றால் அவர் வைத்திருக்கும் கோரிக்கைகளில் நியாயம் இருக்கிறது. உண்மை இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் ஆதரவு இருக்கிறது.''

''சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்திருக்கிற சுமார் நூற்றைம்பது பேர் கொண்ட உங்கள் அமைப்பினரை சுமார் எட்டு கோடி தமிழர்களின் பிரதிநிதியாக எப்படி ஏற்க முடியும்?''

''ஒவ்வொன்றாக வருகிறேன். சட்டமா? எது சட்டம்? இன்றைக்கு ஜெயலலிதா இவ்வளவு சொத்தைக் குவித்து வைத்திருக்கிறார். இது எப்படி வந்தது என்று எல்லோருக்கும் தெரியும். இப்போது வழக்கு நடக்கிறது. முடிவில் என்ன தண்டனை கிடைத்துவிடும் என்று நினைக்கிறீர்கள்? இதே போல்தான் கருணாநிதியும். அவர் குடும்பத்துக்கும் ஏகப்பட்ட சொத்துக்கள். இதெல்லாம் எப்படி வந்தது? உங்கள் சட்டம் இவர்களை ஒன்றுமே செய்யப் போவ

வீரப்பனை தமிழ்ப் போராளியாக முன்நிறுத்தும் முயற்சிகள் குறித்து சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் சி.வி. நரசிம்மனிடம் கேட்டோம்:

தமிழக நலனிலும், தமிழ் மக்களின் நலனிலும், அதிக அக்கறை இருப்பதாக காட்டிக் கொள்ளும் வீரப்பன், பிணைக்கைதியாக ஒருவரை கடத்திச்சென்று, அவரை விடுவிக்க, தனது கோரிக்கைப் பட்டியலை நிறைவேற்றும்படி மிரட்டுவது சட்டப்படி கிரிமினல் குற்றமாகும்.

தமிழக மக்களுக்கு நன்மை விளைவிக்கும் எந்தக் கோரிக்கையானாலும், அதை நிறைவேற்றுவதற்கு இது வழியல்ல.. வீரப்பன் செய்திருப்பது விவேகமல்ல. இந்தியத் தண்டனை சட்டப்படி ஒருவரைக் கடத்தி பிணைக்கைதியாக வைத்து கொண்டு, அச்சுறுத்துவது கடுமையான தண்டனைக்குரியது.

முக்கியமாக கர்நாடக மக்கள்

தில்லை. ஏதாவது ஒரு அரசியல்வாதி சட்டத்தால் தண்டனையைப் பெற்றார் என்று கூற முடியுமா? இதைச் சொல்லுங்கள். பிறகு சட்டத்தைப் பற்றிப் பேசலாம்.

"வேறென்ன கேட்டீர்கள்? தமிழர்களின் பிரதிநிதிகளாக எங்களை எப்படி ஏற்பது என்றுதானே... இன்று ஏற்றுக் கொண்டு விட்டார்கள். வீரப்பனை மக்கள் தலைவனாக; தமிழினத் தலைவனாக எல்லோரும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். வரும் தேர்தலில் வீரப்பன் தலைமையில் யாராவது தேர்தலில் நின்றால் அவர்தான் முதல்வர். இது நிஜம்; நிச்சயம்; உண்மை. ஏனென்றால் ராமதாசோ, கோபால்சாமியோ, வீரமணியோ, சாதிக்காத ஒன்றை வீரப்பன் சாதித்திருக்கிறார்."

" 'ஒரு சிறு பொறி காட்டுத் தீயாக மாறும்' என்று மாவோ சொல்லுவார். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது."

"தமிழ் மக்கள் நலன்தான் முக்கியம் என்கிறீர்கள். ராஜ்குமார் கடத்தலால் கர்நாடக தமிழர்கள் எப்போது என்ன நடக்குமோ என்ற பீதியில் இப்போது இருக்கின்றனர். சில இடங்களில் தமிழர்கள் தாக்கப்படுகின்றனர்..."

ஆமாம். ஒரு லட்சியத்தை நோக்கிச் செல்லும் போது இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும். சில இழப்புகளை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

"தமிழ் தேச விடுதலை மீட்பு என்றெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்? தமிழகம் என்ன அடிமைப்பட்டா கிடக்கிறது?"

"ஆளும் கட்சிக்காரர்கள் இன்று மக்கள் நிலங்களைக் கொள்ளையடிக்கிறார்கள். அரசியல்வாதிகளின் பினாமிகள் ஒரு பக்கம் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டை ஏழை நாடாக மாற்றிய பெருமை நமது அரசியல் தலைவர்களைச் சாரும். இதை மீட்பது தான். இவர்களிடமிருந்து மக்களை மீட்டு தமிழகத்துக்கு விடுதலை கொடுப்பதுதான் எங்கள் நோக்கம். மண்ணுரிமை பாதுகாத்தால்தான் தன்னுரிமை காக்க முடியும்."

— செ. ஏக்நாத்

படங்கள் : **ஜரிஸ்**

வீரப்பன் படம்: **நன்றி நக்கீரன்**

விரோதம் வளர்க்கிறார் வீரப்பன்!



தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தமிழர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே காவிரி நதிநீர்ப் பிரச்னை ஒரு உணர்ச்சியூட்டும் பிரச்னையாகத் தொடர்ந்து நீடித்து வருகிறது. இப்படியிருக்க, வீரப்பன் தனக்குப் புதிய இமேஜ் தேடிக்கொள்ள தமிழ்த்தீவிரவாதி என்ற போர்வையில் கர்நாடக வி.ஐ.பிகளைக் கடத்துவது, மேலும் சிக்கலை உண்டாக்கும். இருமாநில மக்களின் மனத்திலும் வரலாற்று ரீதியாக நீண்டகால விரோதத்தை ஏற்படுத்தக்கூடும். இது இந்தியாவின் ஒற்றுமைக்குக் கொஞ்சமும் உகந்தது அல்ல. வீரப்பன் தமிழர்களுக்கு நல்லது செய்வதாக எண்ணிக் கொண்டு, மிகப்பெரிய கெடுதலைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. இந்தக் கடத்தல் விவகாரத்தில் கர்நாடகத் தமிழர்களின் தலைக்குமேல் மிகப்பெரிய கத்தி தொங்கிக் கொண்டிருப்பதை எண்ணி எல்லோரும் பதைபதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கவலை வீரப்பனுக்கும் வந்தால் மட்டுமே, அவனிடம் மாற்றம் வந்திருப்பதாக எடுத்து கொள்ள முடியும். இல்லையெனில் வீரப்பன் குற்றப்பட்டியலில் ராஜ்குமார் கடத்தல் மிகப்பெரிய குற்றமாக இடம்பெற்றுவிடும்.

— வியோ

அடங்காதக் காளையை அடக்கும் வீரனுக்குக் கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் வீர விளையாட்டு நம் முன்னோர்களுடையது. காளையைக் கயிற்றில் கட்டிப் போட்டு, சுற்றி நின்று அடக்கி மார்தட்டிக் கொள்ளும் நவீன விளையாட்டு நம்முடையது!

வட்ட வடத்தில் காளை மாடு சுற்றிப் பாயும் அளவிற்கு நீளமான நைலான் கயிற்றில் மாட்டைப் கட்டி விடுவார்கள். அந்தக் காளை மாட்டைப்பிடித்து மடக்குவதற்காக 9 பேர்கள் கொண்ட குழு களத்தினுள் இறங்கும். விழாக் கமிட்டியால் பரிசுத் தொகை ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கும். 30 நிமிட நேரத்திற்குள் இந்தக் குழு காளை மாட்டை அடக்க வேண்டும். அடக்கி விட்டால் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை அந்தக் குழுவினருக்கு வழங்கப்படும். மாடு பிடிபடாமல் 30 நிமிட நேரத்தைக் கடத்திவிட்டால் மாடு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு பரிசுத் தொகை மாட்டின் உரிமையாளருக்கு வழங்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் பரவலாக இந்த வடமாடு மஞ்சுவிரட்டு நடைபெறுகிறது. அண்மையில் திருப்புத்தூருக்கு அருகில் தென்கரை கிராமத்தில் நடைபெற்றது.

வடமாடு மஞ்சுவிரட்டு விழாக் கமிட்டித்

மஞ்சு விரட்டில்

தலைவர் சுப்பிரமணியனைச் சந்தித்தபோது—

"இன்று இதுவரை ஒன்பது மாடுகள் களத்தில் இறங்கி விளையாடியுள்ளன. இதில் நான்கு மாடுகள் பிடிபட்டுவிட்டன. ஐந்து மாடு







மேட்ச் பிக்ஸிங்!

செய்தி, படங்கள் :
கி. சிங்காரவடிவேல்

கள் பிடிபடவில்லை. சுமார் 20 மாடுகளும் 16 மாடு பிடிக்கும் குழுவினரும் கலந்து கொண்டுள்ளனர். மாடு ஒவ்வொருமுறை களத்தில் இறங்கும்போதும் பரிசுத் தொகை ரூ.701/- என்று அறிவித்து வழங்குகின்றோம். இந்தப் பரிசுத் தொகை மஞ்சுவிரட்டு நடத்து பவர்களைப் பொறுத்து மாறும். பல இடங் களில் தங்க நாணயங்கள்கூட பரிசாக வழங்குகின்றார்கள்..." என்றார்.


"நாங்க எல்லா ஊர்களிலும் நடக்கும் வடமாடு மஞ்சுவிரட்டில் கலந்து கொள் வோம். 25 நிமிடம் வரை மாட்டை உசுப்பிவிட்டு அலையவிட்டு களைப் படையச் செய்வோம். கடைசி 5 நிமிடத்தில் பிடித்து மடக்கிவிடுவோம். ரொம்ப வேக மான மாடாக இருந்தால் கடைசிவரை மடங் காது. சமயத்திலே எங்கள் மீது பாய்ஞ்சு விடும்" என்றனர் பலவான்குடி சுப்பிர மணியன் குழுவினர்.


"மேலூரர் டொங்கான் வந் திருக்காரு... அவரை இறங் கச் சொல்லுன்னா..." என்று பார்வையாளர் கள் திடீரென்று சத்தமிட, அந்தத் திசையில் திரும்பியபோது அவர் இறங்காமல் பார்வை யாளராக இருந்துவிட்டார்.

"மேலூரர் டொங்கான் நல்லா மாடு பிடிக் கிறவரு... இவரு களத்திலே இறங்கினாலே மாடு பிடிபட்டுவிடும். அதனாலே மாடு கொண்டு வர்றவங்க இவரைக் களத்திலே இறங்க விடாம தனியா கவனிச்சிருவாங்க..." என்றனர் அருகில் இருந்தவர்கள். கிராமத்து விளையாட்டிலேயும், "மேட்ச் பிக்ஸிங்"கா!















வாழ்க்கையின் தீவிர நெருக்கடிகளில் சிக்குண்ட பிறகும், காய்ந்து வெடித்து விடாதபடி, படைப்புத் திறனுக்குத் தொடர்ந்து தண்ணீர் ஊற்ற முடிவது சிலரால் மட்டுமே. அத்தகையவர்களின் எழுத்துக்களில் ஈரமும், ஆழமான வேரோட்டமும் இருப்பதை வாசகர்களால் கண்டு கொள்ள முடிகிறது. அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2000ல் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருப்பவர்களும் அது போன்றவர்களே!

இவர்களைப் பற்றி...

"இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழிலும், ஆங்கிலத்திலும் ஓரளவு எழுதி வருகிறேன்." என்று சொல்லும் வெ. ஜானகி அசைடு ஆங்கிலச் செய்திப் பத்திரிகையில் (இப்போது வெளிவரவில்லை) உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். "அசைடு பத்திரிகையில் பணியாற்றியபோது தரமான தமிழ்ச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட இனிய அனுபவத்தை மறக்க முடியாது" என்கிறார். இவர் எழுதத் தொடங்கிய 1974–ஆம் ஆண்டும், கல்கியில் பரிசு பெற்றதை நினைவுகூர்கிறார். தற்போது நாவல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறார்.

"இதுவரை ஐந்து கதைகளே எழுதியுள்ளேன். என்னை ஓர் எழுத்தாளர் என்றே சொல்ல முடியாது" என்று சுயமாய் தன்னை தரிசனம் செய்து கொள்ளும் எஸ். சம்பத்குமார், பிங்காக்ஷன் என்ற புனை பெயரில் எழுத விரும்புகிறார். இவர் ஒரு தரமான டாகுமெண்டரி தயாரிப்பாளர். 'காவல் தெய்வம்' என்ற பெயரில் தமிழக கிராமங்களில் புகழ்பெற்ற சுடுமண் சிலைகளைப் பற்றி இவர் தயாரித்த விவரணைப் படம் சைப்ரஸ் சர்வதேசப் பட விழாவில் (1987) முதல் பரிசு பெற்றிருக்கிறது. இது போன்ற பதினைந்திற்கும் அதிகமான விவரணைப் படங்களைத் தயாரித்திருக்கும் சம்பத்குமார் தற்போது லண்டனில் வசித்து வருகிறார். கடந்த பத்தாண்டுகளாக பிபிசி,சென்னை தமிழ்ப் பிரிவின் ஆசிரியராக பணியாற்றியிருக்கிறார். அடுத்த ஆண்டு சென்னை திரும்பியதும் நிறைய எழுதுவதும், வாசிப்பதும்தான் முழு நேர வாழ்க்கை என்று சபதம் செய்கிறார்.

திருவண்ணாமலை மாவட்டம் நாட்டேரி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்தாளுனராகப் பணியாற்றி வரும் செய்யாறு தி.தா. நாராயணன், "வேலைப் பளுவின் சுமை அழுத்தும் போதெல்லாம், கல்கி, ஜெயகாந்தன், தி.ஜா., என்ற பட்டியலில் அடைக்கலம் புகுந்தேன்"என்கிறார். விவசாயிகளின் பிரச்னைகளைத் தொடர்ந்து எழுத விரும்புகிறாராம்.

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புப் போட்டியில் 'உயிர்களைத் தேடித் தேடி' எனும் இவரது நாவல் ரூபாய் 25 ஆயிரம் பரிசு பெற்றதைப் பெரிய வெற்றியாகக் கருதும் நாராயணனுக்கு, மனைவியும், பிள்ளைகளும்தான் முதல் வாசகர்களாம்.


— விஜயா

ஸ்ரீ:

ஸ்ரீமத் நடனகோபால நாயக்மை நம:

மதுரை ராணி சாரீஸ் சுங்குடிப் புடவைகள்

சென்னையில் தனி ஷோரூம்



"ராணி சாரீஸ்"

"RANEE SAREES"

MADURAI

SPECIAL QUALITY

COLOURS ARE GUARANTEED

FOR DHOBI WASH

COPY RIGHT REGD. A-52846/95

COPY RIGHT REGD. A-52846/95

காப்பி ரைட் ரிஜிஸ்டர் நம்பர் உள்ளதா
என பார்த்து வாங்கவும். மற்றவை நம் தயாரிப்பு அல்ல.

**எங்களிடம் மதுரை சுங்குடிப் புடவைகள்
ஸ்பெஷல் சுந்தர் காட்டன் சாரீஸ், மற்றும்
அனைத்து காட்டன் புடவைகளும், மற்றும்
100% காட்டன் வேஷ்டி, துப்பட்டாக்களும்
சுடிதார் மெட்டீரியல்களும் கிடைக்கும்**

Reduction sale from 31.8.2000 to 9.9.2000

RANEE SAREES

EXCLUSIVE SHOPEE

***Shop. No. 23, "Gold Crest Complex" 1st Floor,
54 - 55, North Usman Road, Panagal Park,
* opp: Saradha Vidhyalaya School
(Near Petrol Bunk) T. Nagar,
Chennai - 600 017.
✆ 8217308, 8217309***

மனசுக்குள் மண்வாசம்

திருநெல்வேலியில் இருந்து சேரன்மகாதேவி நோக்கி பேருந்து போய்க்கொண்டிருக்கிறது. ஜன்னலுக்கு வெளியே தாமிரபரணியின் தயவில், நெல்லும், வாழையும் கண்களைக் குளிர்ச்சியால் குளிப்பாட்டுகின்றன. இதற்குள் இருபது நிமிடப் பயணம் முடிந்துபோய்விட "பத்தமடையெல்லாம் எழுந்து வாங்க" என்கிறார் நடத்துனர். சில நொடிகளில் பாய்களுக்குப் புகழ்பெற்ற பத்தமடை கிராமத்தில் பேருந்து நிற்கிறது.

இறங்கி ஊருக்குள் நடக்கிறோம். சின்னச் சின்ன ஓட்டு வீடுகள், மாடி வீடுகள். ஒவ்வொரு வீட்டிற்குள்ளிருந்தும் குறிப்பிட்ட இடைவெளிவிட்டு, தாளகதியோடு ஒலிக்கும் பாய்த்தறிகளின் தட், பட் சத்தம். எதிர்ப்படுகிற எல்லோரும் நம்மை ஏற்றுமதியாளர்கள் என்று எண்ணிவிடுகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்த பாய்களைப் பார்க்க அழைக்கிறார்கள். ஒருவர் மட்டும் நீங்க பத்திரிகைதானே? என்கிறார். அவர் எழுபத்தைந்து வயது பீர் முகமது.



• பீர் முகமது

"பத்தமடைன்னு சொன்னால் எல்லோருக்கும் பாய்தான் நினைவுக்கு வரும். ஆனால் உலகம் முழுக்க புகழ் பெற்ற சுவாமி சிவானந்தர் பிறந்தது இந்த ஊரில்தான். அவர் பிறந்த வீட்டில் ஆசிர



• ரெடியாகும் கோரைகள்



• இப்ராஹிம் பீவி

மமும் ஐம்பது படுக்கை வசதிகள், நரம்பியல், இருதய நோய், உள்ளிட்ட பத்து சிறப்பு மருத்துவ வசதிகள், அறுவை சிகிச்சை, ஸ்கேன் உள்ளிட்ட அதிநவீன வசதிகளோடு இலவச நினைவு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. மற்றொன்று இங்கே மூச்சு திணறிக் கொண்டிருக்கும் பாய்த் தொழில். அதை நீங்கள் நேரில் பார்த்துத் தெரிந்து



"ரப்மேட் என்று சொல்லப் படும் நாற்பதாம் நம்பர் கோரைப் பாய், மிஷின் தறி, கைத்தறி ஆகியவற்றின் மூலம் தமிழகத்தின் பல பாகங்களில் முடைகிறார்கள். கயத்தாறு, முசிறி, தஞ்சை, சென்னையில் வியாசர்பாடி போன்ற ஊர்களைச் சொல்லலாம். இங்கெல்லாம், முடையும் தடியான பாய்கள் ரூபாய் நாற்பது முதல் நூறு வரைதான் விலை போகின்றன. ஆனால் பத்தமடையின் கலாசாரமே வேறு. கிட்டதிட்ட இருநூறு ஆண்டு காலமாக இங்கு பட்டுப் பாய்கள் நெய்து வருகிறோம்" என்றவரை இடைமறித்து, பட்டுப் பாய்க்கு விளக்கம் கேட்டோம்.

"பட்டுப் பாய்கள் என்றால் மிகவும் மெல்லிய பாய்கள் என்று அர்த்தம். ஒரு கோரையை நான்காகக் கிழித்து முடை

நரசிம்மராவையே சிரிக்க வைத்த நகரம்!

கொள்ள வேண்டும்" என்றார் பீர் முகமது. தமது வீட்டிற்கு அழைத்துப் போனார். வீட்டுத் திண்ணையில் இருந்த தறியில் அவரது மகள், இப்ராகிம் பீவி பாய் முடைவதில் ஈடுபட்டிருந்தார்.

"நீங்கள் முடைவது என்ன வகை பாய்?" என்று நாம் கேட்டதும்,

"நாங்கள் பாய் முடைவதில்லை நெய்கிறோம். பாய் முடைதல் வேறு, நெய்தல் வேறு!" என்றவர் பத்தமடைக்கும், மற்ற பாய் உற்பத்தி செய்யும் ஊர்களுக்கும் உள்ள வேற்றுமையை விளக்கினார்.



• சிவானந்தர் பளிங்கு சிலை

வதுதான் சாதாரண பாய். அதையே எட்டாகக் கிழித்து முடைவது நூறாம் நம்பர் பாய். பதினாறாகக் கிழித்தால் முடைய முடியாது. நெய்ய வேண்டும். அது நூற்று இருபதாம் நம்பர் பாய். முப்பத்து இரண்டாக கிழித்தால் அது நூற்றுநாற்பதாம் நம்பர் பாய். இதைத்தான் சூப்பர்ஃபைன் அதாவது பட்டுப் பாய் என்று சொல்கிறோம். இதுவும் நெய்யப்படும் பாய்தான். இந்த வகைப் பாய்களை மடித்து ஒரு கோட் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம்'' என்றவர் ஒரு பாயை எடுத்து மடித்துக் காட்டுகிறார்.


• மருத்துவமனையின் முகப்பு

''ஒரு கோரையை முப்பத்திரண்டு இழைகளாகக் கிழிப்பது எப்படிச் சாத்தியம்?''

''அதுதான் பத்தமடைக்கு இறைவன் அளித்த வரம். வாழையடி வாழையாக இந்த ஊரில் உள்ள 'லெப்பை' இஸ்லாமிய சமுதாயப் பெண்களுக்கு அல்லா அளித்த அருட்கொடை அது'' என்கிறார்.

பத்தமடையில் பாய் நெய்து வரும் அனைவரும் லெப்பை முஸ்லிம்களாகவே இருந்து வரும் நிலையில், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பெண்களில் சிலரும் இப்போது பாய் நெய்யும் தொழிலுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே பாய் நெய்து வந்த நூற்றுக்கும் அதிகமான முஸ்லிம் குடும்பங்கள் இப்போது பீடி சுற்றும் தொழிலுக்கு மாறி விட்டார்களாம். காரணம், ஒரு பட்டுப் பாய் நெய்ய குறைந்தது ஒரு மாத காலம் ஆகும் நிலையில், அந்த வகைப் பாய் ஒன்று ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை விலை போகிறது. ஆனால் பீடி சுற்றும் தொழில் செய்தால் தினசரி ரூபாய் ஐம்பது ஊதியம் கிடைத்து விடுகிறது என்கிறார்கள்.

அதேபோல் பாய்த் தொழிலில் லாபம் இல்லை என்று அறிந்த ஆண்கள், வெளிநாடுகளுக்குப் பிழைப்புத் தேடி சென்று விட்டார்களாம்.

''பத்தமடைப் பாய் இப்போதைக்குப் பிழைத்திருப்பது பெண்களால்தான். அந்திம காலம் வரை கொஞ்சமும் சலிப்பின்றி பாய் நெய்யும் பொறுமை அவர்களுக்குத்தான் இருக்கிறது. அவர்கள்தான் இதை ஒரு கலையாக மாற்றிக் காட்டியிருக்கிறார்கள்'' என்ற பீர் முகமதுவிடம் அரசுத் தரப்பிலிருந்து உதவிகள், பாதுகாப்பு இல்லையா? என்றோம்.

''1954-ல் லெப்பை கூட்டுறவு பாய் நெய்வோர் சங்கம் தொடங்கப்பட்டது. ஆனால் அந்த சங்கத்தால் பலன் ஒன்றும் இல்லாமல் போய் விட்டது. பத்தமடை இன்று வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் பிராமண மக்களும், பூம்புகார், கைரளி போன்ற நிறுவனங்களும்தான். தென்னிந்திய பிராமண மக்கள் கல்யாணத்திற்குப் பட்டுப் பாய் சீதனமாக வழங்குவதை இன்றும் சாத்திரமாகக் கடைபிடிக்கிறார்கள். சதாபிஷேகம், சஷ்டியப்த பூர்த்தி போன்றவற்றுக்குப் பாய் வாங்குகிறார்கள். பூம்புகார், கைரளி போன்ற நிறுவனங்கள், எங்கள் பாய்களையும், கலைப் பொருட்களையும் வாங்கி விற்பனை செய்து கொடுக்கின்றன. ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள் பத்தமடைக்கே வந்து வீடுவீடாகப் பாய் இருக்கிறதா எனக் கேட்டு வாங்கிப் போவார்கள். ஆனால் கோரை விலை, சாயங்கள்; நெய்யும் கூலி என்று எல்லாம் உயர்ந்துவிட்டது. இதனால் பாயின் உற்பத்திச் செலவு அதிகமாகி லாபம் குன்றந்து விட்டது. எனவேதான் மழை, வெயில் என எல்லா காலத்திலும் பாய் முடைய 'காமன் ஷெட்' கேட்கிறோம். ஒரே இடத்தில்

நூறுபேர் அமர்ந்து நெய்யக் கூடிய வசதியும், அதற்குக் கடனுதவியும் அரசு அளிக்க வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தவரிடம் பத்தமடையில் தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் குறித்து கேட்டோம்.

''முன்பு தாமிரபரணி ஆற்றுக் கோரைகள்தான் எங்களது மூலப் பொருள். ஆனால் இன்று கரூரில் விவசாயிகள் கோரையை வயலில் பயிரிட்டு எங்களுக்குக் கொடுக்கிறார்கள். இன்று இயற்கைச் சாயங்கள் பயன்படுத்துவதை விட்டுவிட்டோம். இந்திய அளவில் நடந்து வரும் கைவினைப் பொருட் காட்சிகளில் கலந்து கொள்கிறோம். அங்கு பார்த்து வரும் டிசைன்களைப் போல அழகுணர்ச்சியோடு புதிய புதிய டிசைன்களையும், எழுத்துகளையும் பாய்களில் உருவாக்குகிறோம்'' என்கிறார்.

பாய் நெய்வதில் 1994ஆம் ஆண்டிற்கான சிறந்த கைவினைக் கலைஞர்கள் தேசிய விருது பத்தமடைக்குக் கிடைத்திருக்கிறது.

இந்து கோயில்கள், மசூதிகள், தேவாலயம், கலை அரங்கம், திரையரங்கம், சினிமா தியேட்டர், மேனிலைப்பள்ளி, பொது நூலகம் என்று நூற்று ஐந்து தெருக்களோடு இன்று பேரூராட்சியாக மாறியிருக்கும் பத்தமடைக்கு, பிரிட்டிஷ் சென்னை கவர்னர் ஆர்சிபால்ட், டாக்டர் ராஜேந்திர பிரசாத், நேரு, ராஜீவ் என இருபதுக்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்கள் விஸிட் அடித்திருக்கிறார்கள்.

நரசிம்மராவ் பிரதமராக இருந்த நேரத்தில், அவரது பெயரைப் பொறித்த பட்டுப் பாயை அவருக்குப் பரிசளித்தபோது அதைப் பார்த்துவிட்டு வாய்விட்டு (?) சிரித்தாராம்!


சென்னாரெட்டி தமிழக கவர்னராக இருந்த போது, ஒரு பாய்ப் பொன்னாடைப் போர்த்தி அவரை பிரமிக்க வைத்திருக்கிறார்கள். இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் முடிசூட்டுவிழா 1953-ல் நடந்தபோது பத்தமடை கூட்டுறவு சங்கம் மூலம் பட்டுப் பாயைப் பரிசாக அனுப்பி இருக்கிறார்கள். அதை இன்று லண்டன் ராயல் மியூசியத்தில் காட்சிக்கு வைத்திருக்கிறார்களாம்.

ஆனாலும் என்ன செய்ய, அரசு கடனுதவி இன்றி, பீடி சுற்றும் தொழிலுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக் கொண்டிருக்கும் பத்தமடை பாய் உற்பத்தியாளர்களின் உழைப்பை, இடைத்தரகர்களும், வியாபாரிகளும் உறிஞ்சுகிறார்கள். 'பத்தமடை பாய்' என்ற உலகம் தழுவிய புகழை மட்டும் இவர்கள் சம்பாதித்துச் சேர்த்து வைத்திருக்கிறார்கள்!

— ஆர்.சி. ஜெயந்தன்
படங்கள் : வெங்கடேஷ்

ஒரு சிட்டிகை எவ்வளவு?

'வாய்க்கு ருசியான பதார்த்தங்களைச் சமைப்பது எப்படி என்று?' தனியார் சேனல்களில் நிகழ்ச்சிகள் நடத்தி பிரபலமானவர் கே. தாமோதரன். இவர் சென்னை வளசரவாக்கத்தில் உள்ள எம்.ஜி.ஆர். ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் உணவுத் தொழில் நுட்பக் கல்லூரியின் முதல்வர்.



ஹோம் ஃப்ரீ ஸ்டைல் குக்கரி சமையல் குறிப்புகள் என்ற புத்தகத்தைச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார் இவர். மற்ற சமையல் புத்தகங்களில் இல்லாத வித்தியாசமாக சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார் தாமோதரன். காய், கனி, மளிகை சாமான்கள், மசாலா வகைகளுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஹிந்தியில் என்னென்ன பெயர் என்று தொகுத்து 'க்ளாசரி' ஒன்றைக் கொடுத்திருக்கிறார். மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் பல சமையல் புத்தகங்களில் ஒரு சிட்டிகை போடவும் என்று மொட்டையாகப் போட்டு வைப்பார்கள். ஒரு சிட்டிகை என்றால் எவ்வளவு? (இரண்டு கிராமாம்.) கைக்குக் கை வித்தியாசப்படலாம். இது போன்ற அளவுகளுக்கான ஒரு வாய்ப்பாடே கொடுத்திருக்கிறார் தாமோதரன்!

— ரமா

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'பெங்களூரில் தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டால் சென்னையில் உள்ள ரஜினி வீட்டை முற்றுகையிடுவோம்' என்று ஜான் பாண்டியன் கூறியுள்ளது பற்றி...?

! பொறுப்பற்ற பேச்சு. இதற்கு நேர்மாறாக முதல்வருடன் ரஜினி நடத்திய அமைதியான சந்திப்பு அவரது பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது.

● பி.கே. சங்கர், சென்னை – 20 •

? பத்திரிகைகளின் தரம் உயர்வதற்கு ஆண்டுதோறும் சிறந்த மாத இதழ், வார இதழ், தினசரி பத்திரிகைகள் ஆகியவற்றுக்கு அரசு பரிசளித்து ஊக்குவிக்க முன்வர வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். தங்கள் கருத்து என்ன?

! பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அரசும் அரசு நிறுவனங்களும் விருது கொடுப்பதும், அவற்றை இவர்கள் ஏற்பதும் தவறு. நடுநிலையை பாதிக்கும் வாய்ப்புகள் மிக அதிகம். அப்புறம் ஜனநாயகத்தில் பத்திரிகைகளின் மதிப்பு என்னாவது! ஜனநாயகம்தான் என்னாவது! தரம் உயர வேண்டுமானால், தரமான இதழ்களுக்கு வாசகர்களின் தொடர்ச்சியான பேராதரவு என்கிற ஒப்பற்ற விருது மட்டுமே உதவும்.

● கே.ஆர். வேலுச்சாமி, அன்னூர்.

? சந்தன வீரப்பனின் சமீபத்திய செயல்...?

! கண்டனத்துக்கும் தண்டனைக்கும் உரிய கிரிமினல் குற்றம்தான். ஆனால் 'வேலியே பயிரை மேய்வது' போன்ற காரியங்களில் ஈடு பட்டதாக நீதிபதியால் கண்டிக்கப்பட்டு தண்டிக்கப்பட்ட முன்னாள் அதிமுக அமைச்சர் பொன்னுசாமி போன்றவர்களைவிட, பகிரங்கமாக சட்டத்தை மீறும் வீரப்பன்கள் மேல்தான்.

● ஆர். ராமசுப்ரமணியன், வடவள்ளி

? மின் வாரியம், ஆர்.டி.ஓ அலுவலகம், விற்பனை வரித்துறை என்று எந்த அலுவலகத்துக்குச் சென்றாலும் லஞ்சம் கொடுக்காமல் எதுவும் நடைபெறுவதில்லை. அப்படி இருக்கும்போது அந்தத் துறை ஊழியர்கள் கேட்பதையெல்லாம் அரசு அள்ளிக் கொடுக்கிறதே நியாயமா?

! அரசு ஊழியர்கள் கூடுதல் சம்பளம் கேட்பதை அநியாயம் என்று சொல்ல முடியாது. லஞ்சம் கேட்பதுதான் வடிகட்டின அக்கிரமம். அதனால் மக்களின் ஆதரவும் அனுதாபமும் அவர்களது கோரிக்கைகளுக்குக் கிடைப்பதில்லை.

மாயாவி வீரப்பனின்



● ஏ. சீனிவாசன், சென்னை – 78 ❐

? ராஜ்குமார் ரசிகர்கள் ஏன் அமைதியாகக் காட்டுக்குள் சென்று தங்களுடைய தார்மிக பலத்தால் நடிகர் ராஜ்குமாரை வீரப்பனிடமிருந்து மீட்கக் கூடாது?

! அதற்கு அவர்கள் தயாராகத்தான் இருந்தார்கள். அவர்களிடையே போலீஸாரும் மஃப்டி உடையில் மறைந்திருக்கக் கூடும் என்ற அச்சம் வீரப்பனுக்கு ஏற்பட்டால், ராஜ்குமார் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கர்நாடக அரசு அஞ்சியது. அதை யொட்டி ராஜ்குமாரின் மனைவியும் இம்முயற்சியைக் கைவிடுமாறு அறிக்கை விடுத்தார்.

● க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? இலங்கையில் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை வாபஸ் பெறுவேன்

டும் என்றும் மீறினால் ரத்தக் களறி ஏற்படும் என்றும் பௌத்த துறவிகள் கூறியுள்ளார்களே? இவர்கள் இப்படிக் கூறலாமா?

! எதிர்க்கட்சிகள், புலிகள், புத்த பிக்ஷுக்கள் ஆகிய முத்தரப்பினரும் வெவ்வேறு காரணங்களுக்காக சந்திரிகாவின் திட்டத்தை நிராகரித்து விட்டனர். யாருக்குமே பரஸ்பரம் விட்டுக் கொடுக்க விருப்பமில்லை. ஆக, அமைதி திரும்புவதில் நாட்டமில்லை. பயங்கரவாதமே ஒருவித சுயநலமாகி தேச நலனைப் பின்னுக்குத் தள்ளுகிறது!

● ஆர்.கே. லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

? மாயாவி வீரப்பனின் மர்ம முடிச்சுகள் எப்போது அவிழும்?

! 'அரசியல்வாதிகள் – அதிகாரிகளுக்கும் வீரப்பனுக்கும் இடையே ஏதோ 'ஒப்பந்தம்' இருக்கிறது; அதனால்தான் அவனை வளைத்துப் பிடிக்காமல் காலதாமதம் செய்து வந்திருக்கிறார்கள்; ஒவ்வொரு நெருக்கடியிலும் விட்டுக் கொடுத்து வருகிறார்கள்..." என்ற மர்ம முடிச்சை நம்பாமல்தான் இருந்தேன். ஆனால் குடியரசுத் தலைவரே இந்த ரீதியில் பேசிய பிறகு...

● ஷோபனாதாசன்,
நாட்டரசங்கோட்டை.

? சமீபத்தில் வியப்பில் ஆழ்த்திய சம்பவம்?

! தமிழ் தெரியாது. கன்னடம் தெரியாது. தெலுங்கு தெரியாது. சம்ஸ்க்ருதம் தெரியாது...! ஆங்கிலம் மட்டுமே தெரியும். ஆனால் மற்ற மொழிப் பாடல்களைப் படு அழகாகப் பாடத் தெரியும் அமெரிக்காவாசியான விஷால் சாபுராமுக்கு. சமபத்தில் அகடமி மினி ஹாலில் ஒரு 'மாக்ஸி' கர்நாடக இசைக் கச்சேரி நிகழ்த்திய இந்த மைக்ரோமினி வித்வானின் வயது எட்டு! இன்னொரு குழந்தை மேதையாக முன்பு அறிமுகமான ரவிகிரண்தான் குரு – அதாவது காஸெட் குரு.

● வி. பரமசிவம், மதுரை – 16.

? வரவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜனதா கட்சி ஐம்பது தொகுதிகளில் போட்டியிடும் என சுப்ரமணியன் சாமி கூறியிருப்பது பற்றி...?

! போட்டியிடும் என்றுதானே சொன்னார்; வெற்றி பெறும் என்று கூறவில்லையே! அளந்துதான் பேசியிருக்கிறார்.





• ஐம்பதுக்கு ஆசை! • வேலி வில்லன்!



• பொறுப்புணர்வு




• ரசிகர்கள் தயார்!

மர்ம முடிச்சுகள் அவிழுமா?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஏ. சீனிவாசன்,
57-H, பாரதிதாசன் சாலை,
கே.கே. நகர், சென்னை - 78

✱ ரூ. 25 பரிசு பெறுபவர்:
பி.கே. சங்கர்,
15/8, மூன்றாவது மெயின் ரோடு,
காந்திநகர்,
சென்னை 600 020



• உச்சநீதிமன்ற மினியேச்சர்

யாத்திரை செல்லும் கண்காட்சி!

மிளகாய் பஜ்ஜியும், டில்லி அப்பளமும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே, எக்ஸிபிஷன் பார்த்துப் பழகிய சென்னை மாநகரத்து ஜனங்கள், 'அட! அப்படியா?' என்று சொல்லும்படியாக, அறிவுபூர்வமான கண்காட்சி ஒன்று சென்னையில் ராணிமேரி கல்லூரி வளாகத்தில் நடக்கிறது. நம் நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் பொன் விழாவை ஒட்டிய கண்காட்சி அது.

டெல்லியிலிருந்து புறப்பட்டு, பாட்னா, கல்கத்தா, கட்டாக், ஹைதராபாத், பெங்களூர் வழியாக சென்னைக்கு வந்திருக்கிறது இந்தக் கண்காட்சி. அடுத்து மும்பை, அலகாபாத்... என்று யாத்திரை தொடரும். சென்னையில், உச்சநீதி மன்றம் பற்றிய இந்தக கண்காட்சியை, ஒரு முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியே துவக்கி வைத்தது ஒரு ஏதேச்சையான நிகழ்வு! அவர் தமிழக கவர்னர் பாத்திமா பீவிதான்!

சுப்ரீம் கோர்ட் தொடங்கி, பல்வேறு மாநில உயர்நீதிமன்றங்களின் மினியேச்சர் மாதிரிகள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. பழங்கால கட்டடக் கலை நுணுக்கங்களைக்கூட நேர்த்தியான மினியேச்சரில் பார்க்கிறபோது ஆச்சரியம்!

நரைத்த விக் வைத்துக் கொண்டு, பழைய கால சினிமாக்களில் வருவார்களே அந்த நீதிபதிகளின் விக், அதை வைக்கிற இருப்புப் பெட்டி, பல்வேறு உயர்நீதிமன்றங்களின் நீதிபதி நாற்காலிகள், உடைகள், அவர் வருகிறபோது, நீதிமன்ற ஊழியர் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு வரும் உபகரணங்கள் என்று பலவித பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

டாகுமென்ட்கள் பகுதியில் ஏகப்பட்ட சுவாரசியங்கள். 'யங் இந்தியா' இதழில் பிரிட்டிஷ் அரசைச் சாடி காந்திஜி எழுதிய கட்டுரைகளுக்காகத் தொடரப்பட்ட வழக்கில் காந்திஜிக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மும்பை உயர்நீதிமன்றத்தில், காந்திஜியின் பாரிஸ்டர் பதிவியை ரத்து செய்து அறிவிக்கும் கடிதம், அரவிந்தர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தீவிரவாதியாய் இருந்த காலத்தில் ஒரு வழக்கில், 'தான் நிரபராதி' என்று எழுத்து மூலம் அளித்த ஸ்டேட்மென்ட், திலகரின் எழுத்துமூலமான வாக்குமூலம் என்று சுதந்தரப் போராட்ட காலத்துக்கே அழைத்துச் செல்லும் சரித்திர சாட்சிகள் பல. 'மோஸ்ட் சென்சேஷனல்' ஐட்டம் ஒன்றும் உண்டு. அது, பகத்சிங்கிற்குத் தூக்குத்தண்டனை வழங்கிய ஆங்கிலேயே நீதிபதி, தீர்ப்பு எழுதிய பேனா, முனை உடைக்கப்பட்ட நிலையில். (மரண தண்டனை தீர்ப்பு எழுதிய பேனாவின் நிப்பை உடைத்து விடுவது நீதித்துறை மரபாம்)

அறிவு பூர்வமான கண்காட்சி, வீரப்பனின் கடத்தல் நாடகம் காரணமாக, போதிய விளம்பரம் இல்லாமலேயே முடிந்து விட்டது பெரும் சோகம்!


— ஜெ[illegible]வி

படம்: செ[illegible]கா

பில்ராத்

மருத்துவமனை

முதன்முதலில்
அதிநவீன லேசர் கருவியுடன்
லேப்ராஸ்கோப்பி
சிகிச்சை



வயிறு

சம்பந்தப்பட்ட அனைத்து
நோய்களுக்கும் ஓர் முழுமையான

தீர்வு

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- குடல் இறக்கம் (Hernia)
- பித்தப்பை கற்கள் (Gall Bladder Stones)
- கர்ப்பப்பை நோய்
- ஓவரியில் கட்டி எடுத்தல் (Ovarian Cyst Removal)
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

♦♦♦

அறுவை இல்லா
மூல வியாதி
சிகிச்சை

சிறப்பு சிகிச்சை :

- ✻ லேசர் சிகிச்சை
- ✻ கிரையோ சிகிச்சை
- ✻ கதிர் வீச்சு சிகிச்சை

B&H BILLROTH HOSPITAL
24 HOURS SERVICE

43, லட்சுமி டாக்கீஸ் சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.



⌘ HARRY POTTER NOVELS

— Why are they successful?

⌘ THE SKELETON'S SLAP EXPERIENCE

IS BITING NAILS A BAD HABIT?

— Hello, Doctor!

Plus Strange Facts, Stories and Fun Puzzles


GOKULAM


SEPTEMBER 2000

The monthly magazine for children

Rs.6/-

47. Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97





2000 ஆகஸ்ட் 27
விக்ரம ஆவணி 11
மலர் : 59
இதழ் : 4

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

அநியாயம் என்கிறார் கருணாநிதி; அக்கிரமம் என்கிறார் நாயுடு!


"அநியாயம்!" என்கிறார் கருணாநிதி. "அக்கிரமம்!" என்று சாடுகிறார் சந்திரபாபு நாயுடு. மத்திய அரசுக்கு ஆதரவு அளிக்கும் கூட்டணிக் கட்சி முதல்வர்கள் இருவரும் அவ்வரசின் தவறான பொருளாதாரக் கொள்கையைப் பகிரங்கமாக எதிர்த்துள்ளார்கள்.

பதினோறாவது நிதி கமிஷனின் சிபாரிசை ஏற்று, மாநிலங்களுக்கு ஒதுக்கும் நிதி உச்சவரம்பைக் குறைத்து விட்டது மத்திய அரசு. இதன் விளைவாக மத்திய அரசின் மொத்த வருவாயில் 37.5 சதவிகிதம் மட்டுமே மாநிலங்களுக்கு வழங்கப்படும்.

இதன்னால் மாநில அரசுகள் பெற்று வந்த வருவாய் கணிசமாகக் குறையப் போகிறது. தமிழக அரசுக்கு மட்டும் மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய தொகையானது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ. 900 கோடி குறைவாக இருக்கும்.

மத்திய அரசைப் போலவே மாநில அரசுகளுக்கும் ஆண்டுதோறும் நிர்வாகச் செலவுகளும் இதர செலவுகளும் அதிகரித்துக் கொண்டேதான் வருகின்றன. அவ்வாறு இருக்க, திடீரென்று 900 கோடி ரூபாய் வருவாய் குறையுமேயானால் அந்த இழப்பை தமிழக அரசு எவ்வாறு ஈடுகட்ட முடியும்!

இவ்விஷயத்தில் ஆந்திர முதல்வரும் தமிழக முதல்வரும் அதிகக் கவலையுடன் குரல் கொடுக்கக் காரணம் இருக்கிறது. இவ்விரு மாநிலங்களும் கடந்த நிதி ஆண்டில் தொழில்



துறையில் கணிசமாக முன்னேறி, மத்திய அரசுக்கும் அதன் மூலம் கணிசமான வரித்தொகை கிடைப்பதற்கு உதவியிருக்கின்றன. ஆனால், சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் இந்த நிதி ஆண்டில் கூடுதலாக உழைத்து, கூடுதலாக முதலீடு செய்து, கூடுதலாக உற்பத்தி செய்து, கூடுதலாக விற்பனை செய்து, கூடுதலாக வரியும் செலுத்திய மாநிலங்களுக்கு மத்திய அரசின் ஒதுக்கீடு மட்டும் சென்ற ஆண்டைக் காட்டிலும் குறைவு என்பது அநீதி.

உழைப்பும் முனைப்பும் தட்டிக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக, மத்திய அரசினால் தண்டிக்கப்படுகின்றன.

இதில் மற்றொரு பெரிய அநீதி என்னவெனில், தற்போதைய ஏற்பாட்டின் மூலம், நாட்டின் பின்தங்கிய மாநிலங்கள் பெறுகிற மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கிறது! அதாவது, இம் மாநிலங்கள் தங்கள் வருவாயைப் பெருக்காவிட்டாலும் பிற உழைப்பாளி மாநிலங்களின் கூடுதல் வருவாயினால் ஆதாயம் மட்டும் பெறுகின்றன.

இந்த ஏற்பாடு ஐம்பதாண்டுகளாக நிலவி வருவதுதான். எல்லா மாநிலங்களுக்கும் சமமான அளவில் முன்னேற வாய்ப்புகள் தரப்பட வேண்டும் என்ற நோக்கில் செய்யப்பட்ட ஏற்பாடு. ஆனால் இதன் மூலம் எந்தவித நற்பயனும் நாம் காணவில்லை. பின்தங்கிய மாநிலங்கள் அதே பின்தங்கிய நிலையில் தொடர்கின்றன. அவற்றை ஆள்வோரும் உற்பத்தியை அதிகரித்து வருவாயைப் பெருக்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை - எப்படியிருந்தாலும் மத்திய அரசின் உதவி கிடைத்துவிடப் போகிறது என்ற தைரியத்தில்.

மாநிலங்களிடையே ஆரோக்கியமான போட்டியும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியும் தடைப்பட்டுப் போய் நிற்கின்றன.

நிதி கமிஷனின் சிபாரிசு, பழைய நேரு கால - ஜனநாயக சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படையிலானது. மன்மோகன் சிங் காலத்துக்குப் பின்பு அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அனைத்து மத்திய அரசுகளுமே நவீன பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டு



விட்டன. தொழில்களுக்கு அரசின் பாதுகாப்பை ரத்து செய்து, சுதந்தரப் பொருளாதாரமும் போட்டா போட்டியும் தழைக்கச் செய்வது இதன் அடிப்படை. இந்நிலையில் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் மட்டும் ஜனநாயக சோஷலிஸ அடிப்படையிலான சிபாரிசுகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதனால் முரண்பட்ட நிதிச் சூழல் உருவாகிறது - சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் தண்டிக்கப்படுகின்றன.

நிதி கமிஷன் அளிப்பவை வெறும் சிபாரிசுகள்தான். அவற்றை அரசு ஏற்றாக வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. இதைத்தான் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு சுட்டிக் காட்டியிருக்கிறார். (இவ்வாண்டு மட்டும் மத்திய அரசு ஒதுக்கீட்டிலிருந்து ஆந்திராவுக்கு 951 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது!) 'இப்படியொரு முடிவை மத்திய அரசு தன்னிச்சையாக எடுத்திருக்கக் கூடாது; தேசிய அபிவிருத்தி கவுன்சிலைக் கூட்டி, கமிஷனின் சிபாரிசுகளை விவாதித்து பிறகு முடிவெடுத்திருக்க வேண்டும்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.


'இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. முதல்வர்கள் மாநாட்டையோ தேசிய அபிவிருத்தி கவுன்சிலையோ கூட்டி விவாதிக்க மத்திய அரசு முடிவு செய்யட்டும். இல்லாவிடில் நானே ஒரு முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி விடுகிறேன்' என்கிறார் நாயுடு.

தமிழக - ஆந்திர முதல்வர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்பது மத்திய அரசுக்கு நல்லது. தொழில் வளம் பெருக்கி, வருவாயை அதிகரித்ததற்காக ஒரு மாநிலம் தண்டிக்கப் படுமேயானால், சம்பந்தப்பட்ட முதல்வர்கள் உற்சாகமிழந்து விடுவார்கள். மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்.

நாட்டின் அன்னியச் செலாவணி வரவுக்குத் தமிழகமும் ஆந்திராவும் இன்று பெரிய அளவில் பங்களித்து வருகின்றன. அதை அங்கீகரித்துச் சிறப்புச் சலுகைகள் அளிக்காமல் போனாலும் அந்த உற்சாகத்தில் வெந்நீர் ஊற்றி வாட வைக்கும் கைங்கர்யத்தை மத்திய அரசு செய்யலாகாது. ○

ஆவதும் அழிவதும்

மக்கள் போடும் மதிப்பெண்கள்!



அமைச்சர் நேரு ஒரு சாதனை செய்து முடித்திருக்கிறார். 1976 முதல் ஒரு வெள்ளி விழா காலத்தை எடுத்துக் கொண்டோமானால், மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கும் பொது விநியோகத் துறையைக் கையில் வைத்திருந்த எந்த அமைச்சரும் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் அந்தப் பொறுப்பை தக்கவைத்துக் கொண்டதில்லையாம். "ஆனால் அந்தப் பொறுப்பை கடந்த நான்கரை ஆண்டுகளாக வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் அமைச்சர்; இது ஒரு சாதனையில்லையா?" என்று கேட்கிறார்கள் அமைச்சருக்கு வேண்டிய உடன்பிறப்புகள்.

அரசாங்கத்துக்கு அவப்பெயரைத் தேடித் தரும் சில துறைகளில் பொது விநியோகத் துறையும் ஒன்று. கிட்டத்தட்ட ஒன்றரை கோடி ரேஷன் கார்டுகாரர்களுக்கு இருபத்தாறாயிரம் ரேஷன் கடைகள் மூலம், மாதத்திற்கொருமுறை கொஞ்சமும் பற்றாக்குறை வராமல் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை வழங்குவது என்பது சாதாரண விஷயமல்ல. இந்தத் துறையோடு சம்பந்தப்பட்டிருக்கும் அனைவரும் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். அவர்களை விழிப் போடு வைத்திருக்க அமைச்சர் இரண்டு மடங்கு விழிப்போடு இருக்க வேண்டும். இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் சர்வ ஜாக்கிரதையுடன் அந்தப் பொறுப்பைக் கையாண்டு முதல்வரிடம் நல்ல பெயர் பெற்றிருக்கிறார் அமைச்சர்.

திருச்சி மாவட்டம், லால்குடிதான் அமைச்சரின் தொகுதி. இந்தத் தொகுதியில் உள்ள புள்ளம்பாடியிலிருந்து நான்கு கி.மீ. தூரத்தில் உள்ள காணக்கிளிய நல்லூர்தான் அமைச்சரின் ஊர். அமைச்சரின் குடும்பம் காலம், காலமாக பலவித பிஸினஸ் செய்து

வரும் குடும்பம். அமைச்சரே கூட, பல காலம் பால் வியாபாரமும், அரிசி வியாபாரமும் செய்து வந்திருக்கிறார். மறைந்த அன்பில் தர்மலிங்கத்தின் சிஷ்யனாக அரசியலில் அடியெடுத்து வைத்து 1989ல் லால்குடி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். முதல் முறை வென்றவுடனேயே அமைச்சர் பதவி. தொடர்ந்து 1991ல் போட்டியிட, தோல்வி. 1993ல் மாவட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் நேரு. அந்தப் பொறுப்புதான் நேருவை இன்னமும் கலைஞரின் இதயத்துக்கருகில் கொண்டு போனது. 1996 தேர்தலுக்கு முன்னர் திருச்சியில் தி.மு.க. மாநாடு நடந்தது. மாவட்டச் செயலாளராக இருந்த நேரு அந்த மாநாட்டை ஜாம், ஜாமென்று நடத்திக் காட்டினார். அப்போது நடை

அரிசியாலே!

பெற்ற வரலாறு காணாத ஊர்வலம், அடுத்த ஆட்சி 'கலைஞரின் ஆட்சிதான்' என்பதை உறுதிப்படுத்தியது.

இப்போது இரண்டாவது முறையாக லால்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் அமைச்சர், தொகுதிக்குச் செய்தது என்ன?

"எவ்வளவோ செய்திருக்கிறார். குறிப்பாகச் சொல்வதானால் மேல்நிலைப் பள்ளிகள் பல கொண்டு வந்தது; பூண்டி - அன்பில் பாலப் பணிகள், கொள்ளிடத்தில் சிறு அணைகட்டி பாசன வசதியைப் பெருக்கியது, எட்டு கோடி ரூபாயில் பல கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்தது, லால்குடி நகரின் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும்விதமாக பை-பாஸ் சாலை போட்டது, புள்ளம்பாடியில் ஐ.டி.ஐ., இதுபோன்ற முக்கியமான பணிகள் தவிர, அனைத்து கிராமங்களுக்கும் பஸ் வசதி, கான்கிரீட் சாலைகள் என்று அசத்தியிருக்கிறார் அமைச்சர்" என்கிறார்கள் உள்ளூர் கழக உடன்பிறப்புகள். இத்தனை நலப்பணிகள் செய்திருந்தாலும், தொகுதியில் உள்ள மக்கள் ஏதோ ஒருவித சலிப்புடன், அமைச்சரின் செயல்பாட்டை விமர்சிக்கின்றார்கள். இதற்கு முக்கியக் காரணம் தொகுதி மக்களின் சில சொந்த விஷயங்களை அமைச்சர் நிறைவேற்றித் தரும் நிலையில் இல்லாததுதான். வேலை வாய்ப்பு, டிரான்ஸ்பர் போன்ற விஷயங்களில், தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் உணவு மற்றும் கூட்டுறவுத் துறையில் தடாலடியாகச் செய்து முடித்தாலும் மற்ற துறைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை அவரால் நிறைவேற்ற முடிவதில்லை என்பதுதான் மக்கள் சொல்லும் குறை. கூட்டுறவு இலாகாவில் கிட்டத்தட்ட ஐந்நூறு பேர்களுக்கு மேல் அமைச்சரால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

பொது விநியோகத் துறையில் அமைச்சர் சந்திக்கும் பெரிய சவால் ரேஷன் அரிசி கடத்திக் கொண்டு போகும் விவகாரம்தான். இதைத் தடுப்பதற்காக உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு போலீஸ் இருந்தாலும் கடத்தல் என்னவோ தினமும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

சமீபத்தில் தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு ரயில் மூலமாக அரிசியைக் கடத்தினார்கள். இதில் அமைச்சரின் சொந்தபந்தங்களுக்கும் தொடர்பு உண்டு என்று அரசல்புரசலாகப் பேச்சு கிளம்பியது. "அந்தக் கடத்தப்பட்ட அரிசியைக் கைப்பற்றி கொண்டு வந்து சாதனை செய்தவர் அமைச்சர். இப்படியிருக்க அவரது உடன்பிறப்புகள் மீது பழி போட்டால் எப்படி?'' என்று கேட்கிறார் கூட்டுறவுத் துறை அதிகாரி ஒருவர். சென்ற மாதம் கூட பத்து லட்சம் மதிப்புள்ள அரிசி கடத்தப்பட்ட போது பிடிபட்டது. ரேஷன் கார்டுகளை வறுமைக்கோட்டுக்குக் கீழ் மற்றும் மேலுள்ளவர்கள் என்று பிரித்து கொடுத்ததும் ஒரு சாதனை என்று சொல்லி மகிழ்கிறார்கள்.

கூட்டுறவுத் துறையைக் கையில் வைத்திருக்கும் அமைச்சர், 25 வருட காலம் நடக்காமல் இருந்த கூட்டுறவுத் தேர்தல்களை நடத்திக் காட்டினார். "அந்தத் தேர்தலில் தி.மு.க. தரப்பு ஆட்கள் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக நடத்தப்பட்ட தில்லுமுல்லுகள் ஏராளம் என்று பட்டியலிட்டார் எதிர்க் கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன்.

நகர்ப்புறங்களில் சிறு வணிகம் செய்யும் மகளிருக்குக் கூட்டுறவு வங்கிகள்

"மரியாதையாப் பேசுங்க!"

வீரப்பனின் கடத்தல் விவகாரத்தில் அவனுக்கு ஆதரவாக தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் முழங்கி வருகின்றன அல்லவா. அந்த வகையில் தனித் தமிழர்



சேனா என்ற அமைப்பை நடத்தி வரும் நகைமுகன் ஒருபடி மேலே போய் "தமிழ் தேசியவாதியாகவே பரிணமித்துவிட்டான் வீரப்பன்" என்று முழங்கியிருக்கிறார்.

"பா.ம.கவில் சேர வேண்டிய அவசியம் வீரப்பனுக்கு இல்லாத போது அவருக்கு இடமில்லை என்று டாக்டர் ராமதாஸ் கூறுவது தனிப்பட்ட முறையில் அவருக்கு கர்நாடக அரசின் தயவு தேவை என்பதையே காட்டுகிறது" என்கிறார் நகைமுகன்.

"கோடிக்கணக்கான தமிழர் உள்ளங்களில் உயர்ந்து நிற்கும் வீரப்பனை நக்கீரன் கோபால் மற்றும் சில ஏடுகள் அவன், இவன்' என்று மரியாதைக்குறைவாக கூப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்றும் எச்சரிக்கை விடுத்தார் நகைமுகன். பத்திரிகையாளர் சந்திப்பில் இப்படி தடாலடி அடித்ததால் ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரே நகைச்சுவைதான்.

— கௌசி

படம்: ராஜன்

மூலம் கடன் வழங்கும் திட்டம் தி.மு.க. அரசின் முக்கியச் சாதனையாக சொல்லப்படுகிறது. மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்க அரசு முடிவெடுத்திருக்கிறது. இப்படி பல்வேறு பணிகள் செய்திருந்தாலும், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழை யாமை மற்றும் ஊழல் போக்கினால் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறார் அமைச்சர்.

ரேஷன் கடை என்பது ஊழியர்களுக்கு பொன் முட்டையிடும் வாத்து. கீழிருந்து மேல் வரை அந்த முட்டையில் பங்கு உண்டு. இந்தச் சங்கிலியை உடைக்க அமைச்சர் தொடர்ந்து முயற்சி செய்தாலும், வெற்றி அடைந்தது சிறிதளவே.

அமைச்சருக்குக் கோபம் வந்தால் வாயில் 'பொன் மொழிகள்' அருவி போலக் கொட்டும். அருகில் யாரும் நிற்க முடியாது. கடு சொற்களைத் தாங்க முடியாத ஊழியர்கள் அமைச்சரைப் பற்றி பத்திரிகையாளர்களிடம், 'ஏதாவது' சொல்லி விடுவது என்பது சாதாரணமாக நடக்கும்' ஒன்று. இது போலத்தான் ஒரு சமயம், அமைச்சர் தவறு செய்த அதிகாரியைப் பிடித்து வாங்கு, வாங்கென்று வாங்க, அந்த அதிகாரியோ வெளியே வந்து, "அமைச்சர் சாப்பாட்டுக்கு நெஞ்சுக் கறி கேட்கிறார். அது இப்போது கிடைக்காது என்றதும் சத்தம் போடுகிறார்" என்று சொல்லி விட்டார். அந்தச் சமயத்திற்குப் பிறகு ஒரு பத்திரிகை அவரை "நெஞ்சுக் கறி" அமைச்சர் என்று மறை முகமாகக் குறிப்பிட்டு வந்தது. இப்போதெல்லாம் அமைச்சர் கோபப்படுவதைக் குறைத்துக் கொண்டு விட்டார்.

'**க**டந்த நான்கரை வருடங்களாக ரேஷன் கடைகளில் அரிசி தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொண்டது பெரிய சாதனை இல்லை. தேர்தல் வருவதால் அடுத்த சில மாதங்கள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும்' என்று முனைப்புடன் இப்போது செயல்பட்டு வருகிறார் அமைச்சர். அடுத்த பத்து மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதாம். இவர் துறையைச் சார்ந்த அதிகாரிகளை முதல்வரே அவ்வப்போது அழைத்து கூட்டம் போடுகிறார். "என்னுடைய சாதனை என்று எதுவும் கிடையாது. 'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்பது போல் பாராட்டுக்கள் அனைத்தும் முதல்வருக்கே" என்று அடக்கத்துடன் கூறிக் கொள்கிறார் தேரு!

— ப்ரியன்

ஸ்ரீராம பக்த ஹனுமான்

மண்ணுலகில் மாந்தரை நல்வழிப் படுத்த, தேவர்கள் சரணாகதி பலிக்க ஸ்ரீமன் நாராயணன் மண்ணுலகிலே ராமனாக அவதரித்தார் என்பது வால்மீகி யின் வாக்கு. பகவானோ தன்னைச் சக்ரவர்த்தித் திருமகனாக - மனித னாகவே கூறிக் கொள்கிறான்!

மனிதனாகவே அவதரித்து, மனித னாகவே 'நடித்து', ஆனால் எந்த மனி தனிடமும் அமைய முடியாத கல்யாண குணங்களுக்கெல்லாம் தன்னை இருப் பிடமாகக் கொண்டு, ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்து காட்டி உலகுக்கே உதாரண புருஷனாகத் திகழ்ந்தான்.

- இது வால்மீகி காட்டும் ராமன்.

பின்னால் ராமகாதையை எழுதிய கம்பர், துளஸிதாஸர் போன்ற வர்கள் ராமனைத் தெய்வமாகவே காட்டினார்கள். இதிலே வால்மீகியும் கம்பரும் கூறாத ஒரு செய்தியை துளஸிதாஸர் கூறுகிறார்:

இலங்கையில் போய் ஹனுமான் சீதை யைத் தேடுகிறான். தேடித் தேடிப் பார்த்து, ஒரு மாளிகையை அடைகிறான். அந்த மாளிகையின் நந்தவனத்திலே துளசிச் செடிகள் நிறைந்திருக்கின்றன. சுவர்களி லெல்லாம் ராம சரித சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அதையெல் லாம் பார்த்ததுமே இது விபீஷணனின் அரண்மனைதான் என்பது ஹனுமானுக் குத் தெரிந்து போய் விடுகிறது. தர்மாத் மாவான விபீஷணன் மூலம் சீதையின் இருப்பிடத்தைக் கேட்டு அறிகிறான் அவன்.

விபீஷணனிடம் போய்த் தன்னை எப்படி அறிமுகப்படுத்திக் கொள்கிறான் ஹனுமான்...? 'நான் கிஷ்கிந்தையிலே யிருந்து வருகிறேன்' என்றோ 'அஞ்சனை யின் புதல்வன்' என்றோ அவன் சொல்ல வில்லை.... 'நான் ராம பக்தன்' என்றுதான் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான்!

அது மட்டுமா...? ஸ்ரீ ராமபிரானின் கருணை உள்ளம், சரணடைந்தவர்களைக் காக்கும் அவன் மாண்பு - இவற்றைக் கூறி, விபீஷணன் ராமபிரானை அடிபணிய வழி வகுக்கிறான்.

சரணாகதியைச் செய்து வைப்பவர் யார்...? ஆசார்யர் அல்லவா? சுவாமி தேசி கன் 'ஹனுமத் ஸமேன குருணா' என்று அவனை ஒரு பரமாசார்யனாகக் கொண் டாடியிருப்பது இந்த வகையிலும் பொருந்துகிறது பாருங்கள்.

துளஸிதாஸர் காட்டும் இந்தக் காட்சி- விபீஷணனைச் சரணாகதிக்கு ஹனுமான் தூண்டுவதாக அமையும் காட்சி - வேறு ராமாயணங்களில் காணப்பட வில்லை.

ஹனுமானை ஆசார்ய ராகக் காட்டும் துளஸிதாஸரைக் காட்டிலும் கம்பர் ஒரு படி மேலே போய்விடுகிறார்! ஹனுமானை மும் மூர்த்திகளுடன் ஒப்பிட்டு, நான்காவது மூர்த்தியாகவே (கடவுளாகவே) சித்திரித்து விடுகிறார்.

நாமும் இன்று ஹனுமானைக் கடவு ளாகவே தானே வழிபடுகிறோம்! கடவுள் தன்மை நிறையப் பெற்ற ஒருவனால் சுலப மாக அந்தப் பகவானைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால்தான் ஸ்ரீ ராமனைப் பார்த்த மாத்திரத்திலேயே ஹனுமானின் உள்ளத்தில் பக்தி ஊற்று பெருக்கெடுக் கிறது. அந்த ஊற்று ஆறாகப் பெருகி அவ னது ஒவ்வொரு செயலிலும் சிந்தனை யிலும் பாய்ந்துகொண்டே இருக்கிறது.

'ராம பக்தி ஸாம்ராஜ்யம்' என்ற கீர்த் தனையில் தியாகராஜர் என்ன சொல் கிறார் என்று பாருங்கள்-

'ராம பக்தியில் திளைக்கும் மகானு பாவர்களைக் கண்ணால் காண்பதே பேரானந்தம்' என்கிறார்.

(ஆ மானவுல ஸந்தர்சனமு
அத்யந்த ப்ரும்மானந்தமே மனஸா)

அப்படிப்பட்ட மஹானுபாவன் ஹனு மானைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்!

இந்த மஹானுபாவனின் வரலாறு வால்மீகி ராமாயணம் தவிர ஆனந்த ராமாயணம், வேங்கடாசல மஹாத்மியம் என்று பல நூல்களில் காணப்படுகிறது.

வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில், அகத்திய முனிவர் ஸ்ரீராமனுக்கு ஹனுமானின் வரலாறு கூறுவதாக ஒரு காட்சி வருகிறது.

என்ன சொல்கிறார் அகத்தியர், ராமனிடம்...?

ராமபிரான் முதலில் தன் உள்ளத்தில் இருக்கும் ஒரு சந்தேகத்தை அகத்தியரிடம் சொல்லி விளக்கம் கேட்கிறான்:

"முனிவர் பெருமானே! வாலிக்கும் ராவணனுக்கும் இருந்த இணையற்ற பலம் ஹனுமானுக்கும் இருப்பதாகவே

கல்யாணபுரம் ஆராவமுதன்

4





''நம்ம மேகநாதனுக்கு டி.வி. சீரியல்ல நடிக்க சான்ஸ் கிடைச்சதுமே கர்வம் தலைக்கேறிப் போச்சு!''

''எப்படிச் சொல்றே...?''

''மேகநாதன் என்ற பேரையே மெகாநாதன்னு மாத்திக்கிட்டான்!''

- பெ. கலாசாமி

நான் நினைக்கிறேன். சௌர்யம், சாமர்த்தியம், பலம், வீர்யம், பாண்டித்யம், நீதி – இப்படி எல்லாமே ஹனுமானிடத்தில் குடி கொண்டிருக்கின்றன. அவனால் அல்லவோ நான் ராவணனைக் கொன்று சீதையை அடைந்தேன்! அவனால்தானே சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் கொண்டு உற்றார் உறவினருடன் என்னால் கூட முடிந்தது! இவ்வளவு பராக்கிரமம் அவனிடமே இருக்க, வாலி – சுக்ரீவன் ஆகிய இருவரிடையே விரோதம் ஏற்பட்டபோது, சுக்ரீவனுக்கு நன்மை செய்யும் பொருட்டு ஹனுமானே ஏன் வாலியைக் கொல்லவில்லை? இதை நினைத்து நினைத்து எனக்கு வியப்பு ஏற்படுகிறது. சிறந்த மேதாவியான ஹனுமானின் செய்கைக்கு அர்த்தம் என்ன என்பதை அடியேனுக்கு நீங்கள்தான் விளக்க வேண்டும்!''

எல்லாம் அறிந்த பரம்பொருளான ஸ்ரீராமனுக்கா தெரியாது காரணம்...? இருந்தாலும் கேட்கிறான். மானுடனாக அவதரித்திருக்கிறான் அல்லவா? ஆதலால் மனித மனத்துக்கேயுரிய சந்தேகத்தை எழுப்பி அவன் அகத்திய முனிவரிடம் கேட்கிறான்.

ஸ்ரீ ராமனின் கேள்விக்கு அகத்தியர் என்ன பதில் அளித்தார் என்பதைப் பார்க்கும் முன் இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் – ஹனுமானைப் பற்றி எத்தனை தூரம் சிந்தித்திருக்கிறான் ஸ்ரீ ராமன்! அவனைக் குறித்து எவ்வளவு உயர்வான அபிப்பிராயம் ஸ்ரீ ராமனின் உள்ளத்தில் இருந்திருக்கிறது!

சரி, அகத்தியரின் பதிலுக்கு வருகிறேன். அவர் ராமனை நோக்கிச் சொல்கிறார்:

''ரகு குல திலகனே! நீ சொல்வது சரிதான். ஹனுமானுக்கு இணையானவர் யாரும் இவ்வுலகில் இல்லை. ஆனால் முன்பொரு சமயம் பெரியோர்கள்

சென்னை மாநகரில் பல இடங்களில் ஹனுமாருக்கு ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் மயிலைப் பகுதியில் சில பிரசித்தி பெற்ற ஹனுமார் கோயில்கள் உள்ளன.

● ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் சம்ஸ்க்ருத கல்லூரிக்கும் லஸ் முனைக்குமிடைய உள்ள ஹனுமார் கோவிலை அறியாதார் இருக்க முடியாது. அவ்வழியே கார் மற்றும் பேருந்து மூலம் செல்பவர்கள், நடந்து செல்பவர்கள் என அனைவரது கவனத்தையும் கவர்கின்றவர் இங்குள்ள ஹனுமார்.

● ஆழ்வார்ப்பேட்டையில் கூட்டுறவு வங்கி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஹனுமார். இங்கு காலையிலும், மாலையிலும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிவதைக் காணலாம்.

● மயிலை கபாலிகுளத்திலிருந்து வெகு அருகில் உள்ள அலர்மேல்மங்காபுரத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலும் பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் ஓர் ஆலயம்.

● மந்தைவெளி மார்க்கெட் அருகே அமைந்துள்ள ஹனுமார் கோவில் (மருதி தெரு) மிகவும் பிரசித்தி பெற்ற மற்றோர் ஆலயம்.

கொடுத்த சாபத்தினால், சிறந்த பலசாலியாக இருந்தபோதும் தன்னுடைய சக்தியையே அறியாதவனாயிருந்தான் ஹனுமான். இது எவ்வாறு நிகழ்ந்தது என்று சொல்கிறேன் கேள்" - இப்படிச் சொன்ன அகத்தியர் ஹனுமானின் கதையை ஸ்ரீராமனுக்குக் கூறினார்:

குழந்தை ஹனுமான் என்ன செய்தான் தெரியுமா...? சூரியன் ஆகாயத்தில் உதயமாவதைக் கண்டான். அதை ஒரு பழம் என்று எண்ணி, ஆகாயத்தை நோக்கி குதித்துச் சென்றான்.

"இந்தக் காட்சியைக் கண்ட தேவர்கள் எல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள். ஏனெனில் வாயு, கருடன் ஆகிய இருவரிடம் மட்டுமே காணக்கூடிய வேகத்தை அந்தச் சின்னஞ்சிறு குழந்தையிடம் அவர்கள் கண்டார்கள்.

"'தனது குமாரன் இத்தனை வேகமாகப் போகிறானே! சூரியனால் அவர் எரிக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது' என்று பயந்து போய், வாயு பகவான் அந்தக் குழந்தையைப் பின்தொடர்ந்து ஓடினார்.

"ஹனுமான் சூரியனைச் சமீபித்த நேரத்தில் சூரியனைப் பிடிப்பதற்காக ராகு வந்தான். சூரியனின் ரதத்தின்மேல் ராகுவைக் கண்ட ஹனுமான், ராகுவின் மீது சீறிப் பாய்ந்தான். தான் பறிக்க வந்த சூரியப் பழத்தை வேறொருவன் (ராகு) பறிக்க முயல்கிறானே என்ற கோபம் குழந்தைக்கு!

"சின்னஞ்சிறு உருவமேயானாலும் ஹனுமான் தன்னை நோக்கிச் சீறிப் பாய்ந்து வருவதைக் கண்டான் ராகு. வெகுவாக பயந்து போனான். ஓடிப்போய் இந்திரனிடம் சென்று முறையிட்டான்.

"உடனே இந்திரன் புறப்பட்டு விட்டான். ஐராவதத்தின் மேல் ஏறி வந்து, தனது வஜ்ராயுதத்தால் ஹனுமானை அடித்தான். குழந்தை அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டது!

"இதைப் பார்த்துக் கொண்டேயிருந்த வாயுபகவானுக்குக் கோபம் வந்து விட்டது. உலகமெங்கும் காற்றே வீசாமல் செய்து விட்டான் வாயு! வாயுவின் இந்த வேலை நிறுத்தத்தினால் ஸகல ஜீவராசிகளுக்கும் அத்தியாவசியத் தேவையான காற்று இல்லாமல் போய்விட்டது. உலகமே மூச்சு விடத் திணறித் தவிக்க ஆரம்பித்தது!

(வளரும்)

அருள்வாக்கு!

தான தர்மம் செய்வது, சந்தியா வந்தனம், யாகம், பூஜை, பரோபகாரம் எல்லாம் நல்லதில் மனதைச் செலுத்தும் பகிரங்க சாதனங்கள். தியானம் என்பதே மிகச் சிறந்த அந்தரங்க நிலை. அதற்கு அநுகூலமாக இருக்கிற மற்ற அந்தரங்க சாதனங்கள் ஐந்து. அவை, அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், சௌசம், இந்திரிய நிக்ரஹம் என்பவை. எவருக்கும், எவற்றுக்கும் கெடுதலே எண்ணாதபடி மனதை அன்புமயமாகச் செய்து கொள்வது அஹிம்சை! . மனம், வாக்கு, காயம் மூன்றையும் உண்மையிலேயே ஈடுபடுத்துவது சத்தியம். அஸ்தேயம் என்றால் 'திருடாமல் இருப்பது என்று அர்த்தம். அதாவது பிறப் பொருட்களில் ஆசையே எழாதபடி வைராக்கியமாக்கிக் கொள்வது. சௌசம் என்றால் தூய்மைப்படுத்திக் கொள்வது.



ஸ்நானம் மடி, ஆசாரம், ஆகாராதிகளின் சுத்தி எல்லாம் சௌசத்தில் அடங்கும். இந்திரிய நிக்ரஹம் என்பது புலன்களை அவற்றின் போக்கில்விடாமல், ஒவ்வோர் இந்திரியத்துக்கும் இவ்வளவுதான் ஆகாரம் கொடுப்பது என்று நிர்ணயமாக வைத்துக் கொள்வது. 'கண் இதைப் பார்க்கக் கூடாது. காது இதைக் கேட்கக் கூடாது. வாய் இதைத் தின்னக்கூடாது. பேசக் கூடாது. உடம்பு இந்தப் பாவத்தைச் செய்யக்கூடாது என்று தடுத்து நிறுத்துவதே இந்திரிய நிக்ரஹம். சாதனை செய்வதற்காக மட்டுமே சரீரம் வேண்டும். சரீரம் உயிர் வாழ்வதற்காக இந்திரியங்களுக்கு எவ்வளவு அதம பட்சம் தீனி கொடுக்க வேண்டுமோ அவ்வளவே கொடுக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

முத்துசாமி, முன் எச்சரிக்கை முத்துசாமி. ரொம்ப கேர்ஃபுல். எதையும் அலசி, ஆராய்ந்து, யோசித்து முடிவு செய்வார். அப்படிப் பட்ட ஆசாமி எப்படி 'டக்' கென ஒரு ஆட்டோவில் ஏறுவார்? ஆட்டோக்காரர்களுக்கு ஏற்கெனவே ரொம்ப நல்ல பேர் என்பது அவருக்குத் தெரியாதா? சுட்ட மீட்டர், சுடாத மீட்டர், நேர்வழி, மீட்டருக்கு மேலே கீழே மரியாதை சண்டை, மெட்ராஸ் பாஷை திட்டு என தினுசு தினுசாக இருக்கும்போது அவர் மீது குற்றம் சொல்லிப் பயனில்லை.

ஆபிசிற்கு லேட்டானாலும் பரவாயில்லை. காலையில் கசடதபற வேண்டாமென, நல்ல ஆட்டோவிற்காக பொறுமையாக காத்திருந்தார். வீரப்பன் மீசை, மாவட்டம் மீசை, அலறும் டேப்ரிகார்டர், சிவப்பு சட்டைக்காரன் இப்படி பலரை தள்ளுபடி செய்த பின் 'மனம் போல ஆட்டோ' கிடைத்தது.

பிரசவம் இலவசம் என்ற வாசகம் கொண்ட ஃபோம் சீட் ஆட்டோ. டிரைவரும் நல்லவனாகத் தென்பட்டான். முத்துசாமிக்கு இன்னொரு நம்பிக்கை. ஆட்டோ டிரைவரோடு நெருக்கமாகப் பேசி பழகிக் கொண்டே சென்றால், இறங்கும்போது மீட்டருக்கு மேல கேட்க மாட்டான். அநாவசிய தகராறும் செய்ய மாட்டான் என்பது.

"வரவர ஆட்டோக்காரங்க ரொம்ப மோசமா போயிட்டாங்க. பிரசவத்துக்கு இலவசமா போகிற உன்ன மாதிரி நல்லவங்க எத்தனை பேர் இருக்காங்க? அதான் பார்த்து ஏறினேன்."

"நீ இன்னா முளுகாமியா இருக்கே?" பட்டென கிண்டலாகக் கேட்டான் டிரைவர்.

"என்ன கேள்வி இது? பிரசவத்திற்கு இலவசம்னு போட்டிருக்கே, அதனால நீ நியாயஸ்தனா இருப்பேன்னு ஏறினேன்."

"புரிஞ்சுது சார்! சும்மா டமாஸ் பண்ணேன்!"

"பயந்திட்டேம்ப்பா!" கொஞ்சம் மூச்சு வந்தது.

"ஆனா நீ, எப்படியும் இன்னிக்கு முளுகாமதான் கிற. எந்த ஏரியாலயும் தண்ணி இல்லியே? ரைட்டா?"

"பாதி ரைட். நான் பாத் எடுக்கல, பட்சன் பாத் எடுத்திட்டேன்!" சொல்லி சிரித்தார் மு.சாமி. "எப்படி நம்ம டமாஸ்?"

"சுன் ஜோக் சார்!"

"சரி பிரசவத்துக்கு இலவசம்னா, ஆஸ்பத்திரி 10 கிலோமீட்டர், 50 கிலோமீட்டர் எவ்வளவு தூரம் இருந்தாலும் காசு வாங்காம கொண்டு போய் விடுவியா?"

"சார் நம்ம வண்டில பிரசவமே இலவசம் சார்! சரியா பாரு. சுன் வண்டி சார்."

"ரொம்ப டமாஸ் பண்ணாதப்பா? நீ என்ன டாக்டரா?"

"மெய்யாலும் சார்! பிரசவம் இலவசம் சார்! வாயும் வவுறுமா பொண்ணு வண்டில ஏறினா, பத்தே நிமிசத்தில தாயும், கொயந்தயுமா எறக்கி விட்ருவேன்!"

"என்னய்யா சொல்றே?"

"மெய்யாலுந் சார்.. ஆனா ஒரு கண்டிசன். கொறஞ்சது ஒன்பது மாசமாயிருக்கோணும்"

"நீ ரொம்ப அளக்கறப்பா!"

பிரசவம் இலவசம்



"அப்ப நம்பாத.
சில கேசு சிசேரியன்
தான்னு பயந்துகினே ஏறும்.
பாத்தா கத்தி கித்தி இல்லாம கன்னா
நார்மல் டெலிவரியா எறங்கும்!"

"ரொம்ப குழப்பற விடு. ஆமா அடிக்கடி கன்னா, கன்னானு ஏதோ சொல்றியே." என்னது?"

"கன் சார். g... u... n... கன் தெரியாது கடுமே. துப்பாக்கி சார். ஒரு தற்காப்புக்குச் சொல்லிக்குவேன். கண்ட பயலுவ கத்திய காட்டி ஆட்டோல கடத்திட்டுப் பூடறாங்களா..."

"ஆமாமாம், ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்."

"போலீசே பயந்துகினு முன்னபின்ன தெரியாத ஆள ஆட்டோல ஏத்தாதன்னு சொல்றாங்க."

"அப்படியா? எங்ககிட்ட, முன்பின் தெரியாத ஆட்டோவில ஏறாதேன்னு சொல்றாங்க."

"எப்பவுமே அவங்க அப்டிதான் சார். கன் தமாசு!"

"பிரசவம் இலவசம்னு சொல்ற

மாதுரி

உன்னைவிடவா?"

"திருப்பிட்டியா? உனக்கு எப்படி சார் சொல்றது? நான் சொல்றது சத்தியம் சார்!"

"என்ன சத்தியம்? எப்படி சத்தியம்? பிரசவமா பாக்கிற நீ?"

"ஆமா. பிரசவம் பாக்கறேன் எப்படின்னு கேளு?"

"எப்படி?"

"இங்கேந்து ரைட்ல ஒடிச்சி லெப்ட்ல உட்டா?"

"கோவிந்தன் ரோட்."

"அப்பால லெப்ட்ல ஒடிச்சி ரைட்ல உட்டா?

"காதர்பாய் தெரு"

"அப்டியே நேரா பூந்து சூலத்தான்டா ரைட்ல உட்டா?"

"ராபர்ட்சன் சாலை!"

"அது கட்சில?"

"ம். ஆ.. குழந்தைங்க ஆஸ்பத்திரி ஆ.. பிரசவ ஹாஸ்பிடல்."

"கரக்ட்டா சொல்லிக்கின. இப்ப நம்ப ஆட்டோல, பேஷண்ட் ஏறினா...ஆஸ்பத்திரி யாண்ட வரும்போது தாயுந் கொயந்தயுமா எறக்கிடுவேன். அப்படியே கொயந்தைக்குத் தடுப்பு ஊசி கிசி போட்டுகினு வூட்டுக்குப் பூட்லாம்!"

இதற்கு மேலும் முத்துசாமியால் தாங்க முடியவில்லை.

"என்னய்யா இப்படி சித்ரவதை பண்றே?"

"சார் காத பொத்திகாம கவனமா கேளு. கட்சில கேஸ் வண்டில ஏறி உக்காந்து இந்த பெல்ட் கட்டிக்கினும். கூட வந்த ஆளு இரை மூடணும். பர்ஸ்டு நன் நாப்பதுல, கோவிந்தன் ரோட்ல உடுவேன். அங்க 713 மினி பள்ளம், 248 குட்டி குழிங்க, 591 படு குழி... உட்டா பத்து குலுக்கு, எட்டு குமுக்கு... பாதிலயே இடுப்புவலி கன்னா செட்டாயி டும் அப்டியே காதர்பாய் தெரு. அங்க மூப் பதுல போனா போதும் தூக்கி தூக்கி அடிக் கும். சலுவான கேகங்க தெரு கோடி வர்ற துகுள்ள சுகப்பிரசவம்.."

"இதென்ன அநியாயம்?"

"அப்டியே நீட்டா ராபர்ட்சன்ல உட்டா பூரா ஸ்பீட் பிரேக்கர். அதுவும் கண்ணுக்குத் தெரியாத மாதிரி- போதாது?"

"ரோட்ல குலுக்கி நிமித்தி எடுத்தா பிரச வம் பார்க்கிற?"

"ஆமா சார். நாட்டு வைத்தியம் போல இது ரோட்டு வைத்தியம். அசோகரெல்லாம் கூட ரோடு போட்டாங்க."

"அசோகரா?"

"அட அந்தப் பெரிய ராஜா சார். ரோடு போட்டாரு, மரம் நட்டாரு... ஆனா இது மாதிரி பிரசவம் பாக்கிற ரோடு யாராச்சும் போட்டாங்க... ம்..? ரோட் ஆஸ்பத்திரி சார்."

"மெட்ராசுல கேஸ் எங்கவாணா ஏறட் டும் சார்... பிரசவத்துக்கு நான் காரண்டி. இது மாதிரி ரோட் எங்க கிடைக்கும் சார்.

"என்னவோப்பா... ஏறும்போது நான் தனித்தனி வாயும், வயிறோட ஏறினேன். என்ன அதே மாதிரி இறக்கிவிட்டுடு. உன் பேர் ரோடு புண்ணியத்தில நல்லபடியா கின் னஸ்ல வரட்டும்."

"தாங்க்ஸ் சார்..."

"நீ கலக்கின கலக்குல உன் பேரைக்கூட கேக்கல... உன் பேர் என்னப்பா?"

"பிரும்மன் சார்!"

வழிமறித்த வாட்ச்மேனின் வாழ்த்து!



தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் கவுன்ஸிலின் புதிய தலைவராகி இருக்கிறார் இப்ராஹிம் ராவுத்தர்.

சொந்த ஊர் மதுரை. அப்பா அபுபக்கர் ராவுத்தர் பெரும் விவசாயி. காங்கிரஸ்காரர். காமராஜருக்கு நெருக்கமானவர். பள்ளிக்கூட நாட்களிலிருந்தே, விஜயகாந்த் நெருங்கிய நண்பர். இரண்டு பேருக்கும் ஏகமாய் சினிமா பார்க்கும் ஆர்வம். மதுரையிலேயே ஒரு படம் விடமாட்டார்கள். சென்னை வந்து விட்டாலோ, திட்டமிட்டுக் கொண்டு ஒரே நாளில் நாலு படம் பார்த்து விடுவார்களாம். விஜயகாந்தைப் பார்த்துவிட்டு "உனக்கு பவர்ஃபுல் கண்கள். சினிமாவுல போனா நல்ல சான்ஸ் கிடைக்கும்'' என்று நண்பர்கள் கூறுவார்கள்.

இப்ராஹிமுக்கு, கவிதை, கதை எழுத ஆர்வம் உண்டு. இருவரும் சுமார் இருபத்திரண்டு வருடங்களுக்குமுன் ஒரு சுபயோக சுபதினத்தில், வீட்டில் சொல்லிக் கொள்ளாமல், ஆம்னி பஸ் பிடித்து சென்னை மாநகரில் வந்து இறங்கினார்கள். சினிமாக் கோட்டைக்குள் நுழைவது அத்தனை சுலபமாக இல்லை. மதுரையைச் சேர்ந்த எக்ஸ்போர்ட் பிசினஸ் நண்பர் மூலம் இயக்குனர் காஜாவின் அறிமுகம் கிடைக்க, விஜயகாந்துக்கு, 'இனிக்கும் இளமை' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. ஒரு கட்டத்தில், விஜயகாந்துக்காகத் தம் கதாசிரியர் கனவுகளை ஒதுக்கி விட்டு, அவருக்குத் துணையாக இருக்கலானார் இப்ராஹிம்.

''தேவர் பிலிம்ஸ் கதை இலாகாவில் என்னை எடுத்துக் கொள்வதுபற்றிப் பேச வரச் சொல்லியிருந்தார்கள். அவர்கள் வரச் சொன்ன நாள் ஒரு புத்தாண்டு. காலையிலேயே போக வேண்டுமே என்று நள்ளிரவு புது வருடக் கொண்டாட்டங்களையெல்லாம் தியாகம் செய்துவிட்டு, நேரத்துக்குப் போனேன். ஆனால், தேவர் பிலிம்ஸ் வாட்ச்மேன் என்னை உள்ளே விட மறுத்துவிட்டார். ஏமாந்து திரும்பினேன். நான் நல்ல நிலைக்கு வந்தபின், தி. நகரில் என் ஆபிசில், மத்தியானத்தில், சாப்பாடு பொட்டலம் வாங்கி, ஏழைகளுக்கு விநியோகிப்பேன். ரெகுலராய்ச் சாப்பாடு வாங்க வந்த ஒரு முதியவர் ஒரு நாள், "ஐயா! நான் தேவர் பிலிம்ஸ் வாட்ச்மேனாக இருந்தேன். உங்களை ஒரு நாள் உள்ளே போகக் கூடாதுன்னு தடுத்திட்டேன். நீங்க பெரிய ஆளாகி, இன்னிக்கு உங்ககிட்ட சாப்பாடு வாங்கிச் சாப்பிடறேன்" என்றார். நான் ஆண்டவனுக்கு நன்றி சொன்னேன்.

"பிறகு நண்பர்களுடன் சேர்ந்து 'தீர்ப்பு என் கையில்' என்று ஒரு படம் எடுத்தேன். ஹிட் ஆனது. இப்போது சுமார் இருபத்தைந்து படங்கள் எடுத்து விட்டேன்.

முன்பெல்லாம் சூப்பர் ஹிட், சராசரிக்கும் மேலே, சராசரி, தோல்வி, படுதோல்வி என்று ஆறுவகையாக ஒரு படத்தின் ரிசல்ட்டைச் சொல்லுவார்கள். ஆனால் இப்போது சூப்பர் ஹிட் இல்லை சூப்பர் ஃப்ளாப். பெரிய ஸ்டார்களைப் போட்டு, பெரிய பட்ஜெட்டில் படமெடுத்தாலும், நன்றாக வியாபாரமாகி விடுகிறது. (வெற்றி, தோல்வி தனிக் கதை). ஆனால் சின்ன பட்ஜெட் படம் எடுத்தால் வியாபாரம் பண்ணவே கஷ்டமாக இருக்கிறது. சின்ன பட்ஜெட் படங்கள் நிறைய வரணும். அப்போது தான் திரையுலகம் ஆரோக்கியமாக இருக்கும். அதற்குத்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார் நம்பிக்கையுடன்.

சந்திப்பு : **மௌலி**

படம் : **சித்ரா சுவாமிநாதன்**

டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ்



மனைவி உயிருடன் இருக்கும் போது அப்படி இப்படி என்று மனத்தை அலையவிடும் பிரபுதேவா அவள் இறந்தவுடன் தன்னைத் திருத்திக் கொள்வதுதான் இறந்து போன மனைவிக்குத் தாம் காட்டும் மரியாதை என்று ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியாக மாறி விடுகிறார். இதுதான் கதை. (அப்பாடா! தொட்டதற்கெல்லாம் ராமன் – கிருஷ்ணன் என்று வசனம் எழுதிய வசனகர்த்தா நம்மை வாழ்த்துவாராக!)

“நோக்கும் ஃபிகர் நம்மை நோக்காக்கால் நாம் நோக்கி என்ன பயன்?” என்று கலர் பார்ப்பதன் அடிப்படைத் தத்துவத்தை குறளோவியமாக விவேக் விளக்குவதென்ன; சங்கீதாவுக்கு லிஃப்ட் கொடுப்பதற்காகக் காரில் ஏறுகிற பிரபுதேவா யதேச்சையாக நியூஸ் பேப்பர் கேட்க, நியூஸ் பேப்பரை காரின் ஸ்கிரீனாக்கி இதே பிரபுதேவா தம்முடைய முதல் இரவை (பகலை?) அரங்கேற்றிய ஸ்டைலை நினைத்துப் பார்த்து பதறிப் போய், மனைவி மீனா பேப்பரைத் தர மறுப்பதென்ன – கதை துளியூண்டு தான் என்றாலும் படம் முழுவதும் காணப்படும் ஹியூமரஸ் டச் அதன் பிரசன்டேஷனை சுவாரஸ்யமாக்கி விடுகிறது. வெல்டன் பாண்டியராஜன் ஸார்! குருப்யோ நமஹ!

ஜொ – லொ காரெக்டர். அதுதான் பிரபுதேவா இந்தப் போடு போடுகிறார் என்று அஸால்ட்டாக பார்த்தால் மனைவி இறக்கும் ஸீனில் மனுஷர் நம்மை உலுக்கி விடுகிறாரே!



“என்ன பிரமாதமான ஹீரோயினாக இருக்கட்டும். இப்பொழுதெல்லாம் தமிழ்ச் சினிமாவில் மூன்று வருடங்களுக்கு மேல் குப்பைக் கொட்ட முடியாது” – நடிப்புத் திறமை இருந்தால் நிச்சயம் முடியும் என்று மேற்படி ஸ்டேட்மெண்ட்டை ஓவர் ரூல் செய்திருப்பவர்களின் பட்டியல் நீளுகிறது : 1. குஷ்பு, 2. மீனா.

‘துருதுரு’ காரெக்டரில் சங்கீதா பஸ்டி அடித்தே அசத்துகிறார் போங்கள்!

வில்லன் கண்டெய்னரில் பெண்களைக் கடத்தி கற்பழிக்கிறார். புதுவிதமான கற்பனை! ஆனால் செக்-போஸ்டில் பிடிபட்ட பிறகும் நியூஸ் பேப்பர்களில் தலைப்புச் செய்திகளில் அடிபட்ட பிறகும் கண்டெய்னரும் வில்லனும் சர்-சர் என்று அனாயாசமாக ஊருக்குள்ளே வலம் வருவதை ரசிக்க முடியவில்லை.


ரேஸ் கோர்ஸில் படமாக்கப்பட்ட குரூப் டான்ஸ் பாடலில் இத்தனை பெரிய எடிட்டிங் எரர் வரலாமா? லெனின் ஸாருடைய எடிட்டிங் என்பதால் நமக்கு ஆதங்கம் சற்று ஜாஸ்தியாகவே ஏற்படுகிறது.

டபுள்ஸ்“க்கு மார்க் போட்டால் டபுள் டிஜிட்டைக் கஷ்டப்பட்டுத் தொடும்!

— கிருஷ்ணா சிதம்பரம்

டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ் டபுள்ஸ்





அண்ணாவின் தீட்டுக் கச்சேரி!

தீப்பிடித்த குடிசைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துவரும்போது சில விஷயங்கள் எனக்குப் பளிச்சென்று விளங்கின. முதன் முதலாகக் குடிசைகள் எரிந்தபோது தி.மு.க. ஆட்சிக்குக் கெட்ட பெயர் வருவதற்காகவே யாரோ சதி செய்கிறார்கள் என்ற பேச்சு இருந்தது. பாஸ்பரஸ் உபயோகித்து குடிசைகள் எரிக்கப்படுகின்றன என்றும் சொன்னார்கள்.

ஆனால் பாஸ்பரஸ் உபயோகப்படுத்தியதற்கான தடயம் எதுவும் கிடைக்கவில்லை. எனவே தீ விபத்து எதேச்சையாக ஏற்பட்டதால்தான் முதலில் சில குடிசைகள் எரிந்தன என்பது புலனாயிற்று. அப்புறம் ஒன்றிரண்டு நாட்கள் கழித்துதான் தொடர்ச்சியாக பல தீ விபத்துகள் நடந்தன.

எரிந்த எல்லா குடிசைகளையும் உள்ளே புகுந்து பார்த்தபோது, அடுப்புக்கு அருகே ஒரே ஒரு சிம்னி விளக்கு மட்டும் இருந்தது. அடுப்பு எரிந்ததற்கான அடையாளமே தெரியவில்லை. சாதாரணமாக ஒரு குடிசை என்றால் உள்ளே ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கயிற்றுக் கட்டில், ஒன்றிரண்டு டிரங்க் பெட்டிகள், கொடியில் புடைவை என்று இருக்கும். தீ விபத்து ஏற்பட்டப் பின் அந்தப் பொருட்கள் நெருப்பில் பாதிக்கப்பட்டதற்கான அடையாளம் தெரியும். புடைவைகள் பாதி எரிந்தும் எரியாமலும் டிரங்க் பெட்டிகளில் புகை படிந்தும் காணப்படும். ஆனால், ஒவ்வொரு குடிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தபோது இந்தத் தடயங்கள் எதுவும் இல்லை. வேண்டுமென்றே குடிசைவாசிகளால் குடிசைகள் எரிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

அரசாங்கம் கொடுக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெறுவதற்காகத்தான் குடிசைவாசிகள் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

முதலில் குடிசைகள்



கிரிமினல்கள் ஜாக்கிரதை! 4

தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திரசேகரன்

எரிந்த போது நஷ்ட ஈட்டுத் தொகையாக அரசு ஒவ்வொரு குடிசைக்கும் 250 ரூபாய் அறிவித்திருந்தது. எரிந்து போன கீற்று, மூங்கில் எல்லாம் ஐம்பது ரூபாய்க்கு மேல் ஆகாது, ஆனால் அவர்களுக்கு 250 ரூபாய் கிடைக்கும் என்பதால் வீட்டிலுள்ள பொருட்களைப் பத்திரப்படுத்திவிட்டு விபத்தை உருவாக்கியிருந்தார்கள்.

அதனால்தான் அண்ணாவைப் பார்த்து "விபத்துக்கு நீங்கள்தான் காரணம்" என்றேன்.

"என்ன சொல்ற.. என்ன சொல்ற...?" என்றார் அண்ணா?

எல்லாவற்றையும் விளக்கிய பிறகு, "அது சரி. இப்ப என்ன பண்ணுவது?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை அண்ணா. நாலைந்து பேர் மீது, அலட்சியமாக இருந்து விபத்து ஏற்படக் காரணமாக இருந்தார்கள் என்பதாக வழக்குப் போடுங்கள். இது போன்ற செயல்களில் இறங்க குடிசைவாசிகள் தயங்குவார்கள்" என்றேன்.

அண்ணா கிருஷ்ணசாமியைப் பார்த்தார். என் ஐடியாவுக்கு முதல்வர் ஓ.கே. செய்து விட்டது அவருக்குப் புரிந்துவிட்டது. முதல்வரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தோம். அதன்பின் ஒன்றிரண்டு நபர்கள் மீது 'நெக்லிஜென்ஸ்' கேஸ் புக் செய்தவுடன் நான்கைந்து நாட்களுக்குள் தீவிபத்துகள் நின்று விட்டன.

எங்கள் குடும்பம் வீர சைவ குடும்பம். சிறு வயதிலேயே தேவாரம், கந்தசஷ்டி என்று மனப்பாடம் செய்து ஒப்பித்தவன் நான். சிதம்பரம் பச்சையப்பா பள்ளியில் படிக்கும்போதுதான் திராவிட இயக்கத்தின் தாக்கம் என்மீது விழுந்தது. கடவுள் மறுப்பு, திராவிட நாடு என்று அவர்களுக்குப் பல கொள்கைகள் இருந்தாலும், என்னைக் கவர்ந்தது அவர்களது தமிழ்ப் பற்றுதான். மேடைகளில், எழுத்தில் அவர்கள் தமிழைக் கையாண்ட விதம் என்னை அவர்களுடன் நெருங்கச் செய்துவிட்டது.

அண்ணாமலையில் படிக்கும்போது, பல்கலைக் கழக வளாகத்தை ஒட்டிய திருவேட்களம் என்ற இடத்தில் பாசுபதேசுவரர் கோயில் திடலில் அண்ணா பேசுவார். நாங்கள் மகுடிக்கு மயங்கிய நாகம் போல் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்போம். பேராசிரியர்கள் சற்று மறைவான இடத்தில் நின்று கொண்டு அண்ணா பேச்சைக் கேட்பார்கள். பேசி முடித்ததும் தில்லை வில்லாளன் வீட்டிற்குச் செல்வார் அண்ணா. நாங்கள் பின்தொடர்வோம். அங்கு சாப்பிட்டுவிட்டு கெம்பு ஸ்டுடியோவுக்குப் போய் விடுவார். சீட்டுக் கச்சேரி துவங்கும். அண்ணா ஸீரியஸாக விளையாடுவதாகத் தோன்றாது. சீட்டு விளையாட்டில் அண்ணா வெற்றி பெற்றதாக எனக்கு நினைவு இல்லை. சிறிது நேரத்தில் எழுந்து விடுவார். சப்பணம் போட்டு அமர்ந்து கொண்டு எழுதத் துவங்கிவிடுவார். 'திராவிட நாடு' பத்திரிகைக்குத் தலையங்கம் தயாராகும். எழுதும்போது பக்கம் போட மாட்டார். அவர் எழுதி முடித்தவுடன் மாணவர்களாகிய நாங்கள் அந்த பேப்பர்களை எடுத்துப் படித்து, பக்க எண்கள் போட்டு, மறுநாள் காலை காஞ்சிபுரம் அனுப்ப ஏற்பாடு செய்வோம்.

தென்னார்க்காடு மாவட்டம் அண்ணா அவர்கள் அடிக்கடி விசிட் செய்த மாவட்டம். இதன் காரணமாக அண்ணாவுடன் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. சுற்று வட்டாரத்தில் தி.மு.க. கூட்டங்கள் எங்கு நடந்தாலும் எங்கள் பல்கலைக் கழக கெடுபிடிகளை மீறி அவற்றில் கலந்து கொண்டு மைல் கணக்கில் நடந்து திரும்புவோம்.

திராவிட இயக்கத்தில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவது பல்கலைக் கழக நிர்வாகத்திற்குப் பிடிக்காது. பல விதங்களில் மாணவர்களைப் பழி வாங்குவார்கள். எனவே மாணவர்கள் வேறு பெயர்களில் உலவி இயக்கப் பணிகளில் பங்கு கொண்டு வந்தார்கள். எனக்கு ஸீனியரான கோதண்டராமன் தில்லை வில்லாளன் ஆனது

"தலைவரே... ஆட்சில பங்கு குடுத்தால்தான் தேர்தல்ல கூட்டணி உண்டுனு மாற்றுக் கட்சித் தலைவர் சொல்றார்..."

"ஆட்சில பங்கு குடுத்துடலாம். ஆனா ஊழல்ல பங்கு தர முடியாதுனு சொல்லிடு!"

- அம்பை தேவா



இப்படித்தான். நான் கூட பிறைசூடி என்ற பெயரில் சில காலம் உலவி வந்தேன்.

திராவிட மாணவர் முற்போக்கு சங்கத்துக்கு எஸ்.டி. சோமசுந்தரம்தான் தலைவர். நான் செயற்குழு உறுப்பினர். 1957 தேர்தலில் போட்டியிடுவது என்று கழகம் முடிவெடுத்தது. அப்போது பல்கலைக் கழகத்தின் வரலாறு மற்றும் அரசியல் சங்கத்தின் சார்பில், பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கை பற்றிய விவாதம் நடந்தது. தி.மு.கவைத் தவிர மற்ற கட்சிகளில் இருந்து பேச பிரதிநிதிகள் வந்து விட்டார்கள். தி.மு.க. சார்பாக யாரும் வரவில்லை. பல்கலைக் கழக நிர்வாகத்தின் மறைமுக மிரட்டல்தான் இதற்குக் காரணம்.

கடைசியில் தோழர்கள் என்னைப் பேசச் சொன்னார்கள். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நான் மேடையேறினேன். ஆங்கில சங்கத்தின் செயலாளராக நான் இருந்ததால் என் பேச்சைக் கேட்க நிறைய மாணவர்கள் வந்திருந்தார்கள். என் பேச்சுக்குப் பிரமாத மான வரவேற்பு.

மறுநாள் பல்கலைக் கழக நிர்வாகம் என்னை ஹாஸ்டலைவிட்டு வெளியேற்றி விட்டது! அழகு சுந்தரம் செட்டியார் அவர்களின் மகன்கள் ராமநாதனும், லட்சுமணனும், தனி வீடு எடுத்து படித்து வந்தார்கள். எனக்கும் இடம் கொடுத்து அவர்கள் உதவி செய்தார்கள். ஸ்காலர்ஷிப் இல்லாமலேயே படிப்பைத் தொடர்ந்தேன்.

அண்ணாவுடன் நெருக்கமாக இருந்த மாணவ பருவத்தில் நான் சிறந்த விஞ்ஞானி யாக வர வேண்டும் என்று அவர் ஆசை வெளியிட்டார்.

ஆனால் நானோ, பௌதீகம் மற்றும் மின்னணுவியலில் (எம்.ஏ). அப்போதெல்லாம் அண்ணாமலையில் M.A. (Physics & Electronics) இருந்தது.

பட்ட மேற்படிப்பு முடித்தவுடன் ஆங்கில இலக்கியம் படிக்கும் ஆசையில் சென்னை வந்து, கிறிஸ்தவக் கல்லூரியின் பேராசிரியர் பாய்ட் ஆதரவுடன் ஆங்கில இலக்கியத்தில் சேர்ந்துவிட்டேன்.

அப்புறம் எங்கள் பிரின்ஸிபால் மற்றும் பேராசிரியர்கள் எனக்குத் தந்தி கொடுத்து வரவழைத்து எம்.எஸ்ஸி (பௌதீகம் மற்றும் ஸ்பெக்ட்ரோகிராப்) வகுப்பில் இடம் கொடுத்தனர்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது அவர் கீழ் விஞ்ஞானியாகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது என் வாழ்க்கையில் கிடைத்த அரிய பேறு. என்



"என் கணவருக்குத் தூக்கத்துல கூட மேடைப் பிரசங்கம் ஞாபகம்தான்!"

"அரசியல்வாதியாச்சே! சொப்பனத்துலகூட சொற்பொழிவாற்றியிருப்பார்!"

"அதுக்காக தூங்கப் போறதுக்கு முன்னாடி தலைமாட்டிலே ரெண்டு சோடா பாட்டிலை வாங்கி வச்சுக்கணுமா?"

— பெ. கலாசாமி

பணிக் காலத்தில் ஏராளமான சவால்களை நான் சந்திக்க நேர்ந்தது. ஒவ்வொரு முறையும் உதவுவதற்கு நல்ல நண்பர்கள் இருந்தனர். என் இறுதிக் கட்ட பணிக் காலத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கோட்டையில் உட்கார்ந்துகொண்டு படாதபாடு படுத்தினார். எல்லாவற்றையும் சமாளிக்க முடிந்தது.

தடய அறிவியல் துறையில் உதவி இயக்குனர் பதவிக்கு வருவதற்கு முன்பாக மதுரை எர்க்ஸின் மருத்துவமனையில் ஆறு வருடங்கள் மருத்துவ பௌதிகராகப் பணி யாற்றியிருக்கிறேன். அண்ணாமலையில் எம்.எஸ்ஸி. முடித்ததும் சர்வீஸ் கமிஷன் எழுதினேன். மதுரை ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்ததாகத் தகவல் வந்தது. ஆனால் பல மாதங்கள் ஆர்டர் வரவில்லை. அந்தக் கட்டத்தில் ஏதோ வேலையாக சென்னை வந்த நான், முதல்வர் காமராஜ் அவர்களைச் சந்தித்தேன்.

"என்ன செய்கிறாய்?" என்றார் காமராஜ். அண்ணாமலையில் படித்த காலத்தில் மாதிரி சட்டசபை நடத்தியபோது காமராஜ் வந்திருந்தார். அப்போதிலிருந்து பழக்கம். திராவிட இயக்கத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவன் நான் என்பதும் அவருக்குத் தெரியும்.

"சர்வீஸ் கமிஷனில் செலக்ட் ஆகியும் போலீஸ் வெரிஃபிகேஷன் செய்யாததால் வேலைக்கான ஆர்டர் வரவில்லை" என்றேன் நான்.

அது என்ன போலீஸ் வெரிபிகேஷன்? அதுக்கு இத்தனை நாட்களா? என்று தொலைபேசியை எடுத்து மருத்துவத்துறை தலைவரோடு தொடர்பு கொண்டார்.

(தொடரும்)

உயிரே கிடுகிடுக்கிறது. அப்பழுக்கற்ற தனது தொழிலில் அழுந்தக் கரை படிந்து விட்டதாக நொடிக்கொருதரம் நடுங்கும் உள் மனசு. நெஞ்சில் நிகழும் கலவர வெக்கை, அனலான மூச்சுக்காற்றாக வெளிவருகிறது. காலைவரையில் சுசீலாவின் கல்யாண விஷயமாக அரக்கப் பறக்க அலைந்த கால்களின் உற்சாகம் தளர்ந்து உதறலெடுக்கிறது. பத்து வருட கல்யாணப் புரோக்கர் தொழிலில் எந்தவிதத்திலும் சோரம் போய் விடாது சிகரமாய் நின்றிருக்க, தனது பையனின் படிப்புச் செலவுக் காசு, மூவாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு சுசீலாவைப் பற்றிய உண்மையை மறைத்து, அரவம்பட்டி கபிலனுக்குப் பெண் பார்க்கிற சங்கதியில், தனது நேர்மை அப்பளமாய் நொறுங்கிப் போன மாயம் எண்ணி மருகுகிறாள் அன்னபூரணி.



'நாளைக்குச் சாயங்காலம் அவனுக்காக அவன் பார்த்திருக்கிற பெண்ணுக்கு நிச்சய தார்த்தம். இந்தச் சமயத்துல பொண்ணைப் பத்தின உண்மையைச் சொன்னா, அந்தப் பய கம்மாயிருப்பானா? ஏற்கெனவே அந்தப் பய பெரிய முன் கோபக்காரன். கடுங் கோவத்துல கைய நீட்டித் தொலைச்சிட்டான்னா..? ஒரு அடிக்குத் தாங்குமா நம்ப ஒடம்பு...? பத்தாம் வகுப்போட படிப்புப் போதும்னுட்டு இருக்காம அதுக்கும் மேல பையனைப் படிக்க வெக்கனும்னு ஆசப்பட்டு கைய நீட்டிப் பணத்த வாங்கச் சம்மதிச்சிட்டு, அய்யோ... ஆத்தாடின்னு இப்ப அலறி என்னத்தச் செய்ய? என்று கிறுகிறுக்கிறாள்.

இந்த ஊரிலிருந்து, நான்கைந்து மைல் தொலைவிலுள்ள ஊரில் சுயமான தொழிலில் ஈடுபட்டிருக்கிற கபிலனுக்கு இந்த ஊரைச் சேர்ந்த சுசீலாவை அன்னபூர்ணி மூலமாகப் பேசி முடிவு செய்யப்பட்டிருந்தது. கல்யாண புரோக்கர் அன்னபூரணி என்றால், சுற்றுப்பட்டியிலிருக்கிறவர்களுக்கு அத்துப்படி. ஆனாலும் என்ன செய்ய? வருகிற வருமானம் சாப்பாட்டுக்கும் சில்லரைச் செலவுகளுக்குமே சரியாக இருக்கிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, கபிலனின் ஊரான அரவம்பட்டிக்குப் போயிருந்தபோது அவனே அன்னபூரணியைச் சந்தித்து, ''அன்னபூரணியக்கா, எனக்கு ஒரு நல்ல பொண்ணா இருந்தாப் பாருங்க அக்கா. பேசி முடிச்சிறலாம்'' என்று கேட்டிருக்க, அவளும் மறுப்பேதும் சொல்லாது உடனுக்குடன் உறுதி சொல்லிவிட்டு வந்திருந்தாள். பத்தாம் வகுப்பில் தேறியிருந்த தனது மகனை மேற்கொண்டு படிக்க வைப்பதற்காக இரண்டாயிரம் ரூபாய் ஒருவர் கடனாகத் தருவதாகச் சொல்லியிருக்க, அது சம்பந்தமாய் அரவம்பட்டிக்கு வந்தவள், அந்த ஆளின் 'நா எதிர்பார்த்தபடி எனக்குப் பணம் வரல அன்னம். வேற எங்கிட்டாச்சும் கடன் கேட்டுப்பாரு' என்ற பதிலால் இடிந்து போய் அவரது வீட்டில் உட்கார்ந்திருந்தபோதுதான், கபிலன் தனக்குப் பெண் பார்க்குமாறு கூறியிருந்தான்.

முள்ளில் ரோஜா

அல்லிநகரம் தாமோதரன்

'மகனின் மேற்படிப்புக்கனவு, வெறும் கனவாகவே கைகூடாது போய் விடுமோ?' என்று நொந்தபடி நார்க்கட்டிலில் படுத்திருந்தவள், கபிலனுக்குப் பெண் பார்க்கிற சிந்தனையில் மனசை மேயவிட்டிருந்தாள். அவனது பொருளாதாரம் கல்வித்தகுதி என அவனுக்கு இணையான பெண்ணைத் தேடி அது வலம் வந்துகொண்டிருந்தது. அப்போதுதான் அவளது யோசிப்பு வீசிய வலையில் அகப்பட்டிருந்தாள் சுசிலா.

ஒரு வருடத்துக்கு முன்பே அவளுக்குத் திருமணம் நடந்திருக்க வேண்டியது... அவளது உறவுக்காரப் பையன் ஒருவனுக்கு அவளைச் சம்பந்தம் பேசி முறைப்படி ஊர்ப் பெரியோர்கள் முன்னிலையில் நிச்சயம் செய்துவிட்டது மட்டுமின்றி, கல்யாணத்தேதி முடிவு பண்ணி அழைப்பிதழும் கொடுத்தாகி விட்டது. கல்யாணத்திற்கு ஒரு வாரமே இருக்கும் நிலையில், மாப்பிள்ளைப் பையன் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டே ஓடிப் போய்விட்டிருக்க, உற்சாகமாயிருந்த சுசிலாவின் வீடு உறைந்து போனது. கல்யாணக் களை, கசக்கி வீசிய காகிதம் போல குலைந்து போனது. வீட்டில் மகிழ்ச்சி செத்து மயான அமைதி. ஊரே இதே பேச்சாய் இருந்தது. இந்த விஷயம் அன்னபூரணியின் செவிகளுக்கும் எட்டிவிட, சுண்டிப் போட்ட நாணயமாய்க் 'கிர்'ரெனத் தலை சுற்றியது அவளுக்கு.

ஓரிரு நாட்கள் கழித்து சுசிலாவின் வீட்டுக்குப் போனாள் அன்னபூரணி. உதிர்ந்து போன இலைச் சருகாய் வீட்டின் உள் ரூமுக்குள் முடங்கிப் படுத்திருந்த அவளை உசுப்பி பலவாறும் சமாதானம் சொல்லித் தேற்றினாள். ஆனால் அவள் சமாதானப்பட்டிருக்கவில்லை.

அன்னபூரணி சுசிலாவுக்காக தொழில் விஷயமாகத்தான் போகுமிடமெல்லாம் ஒரு மாப்பிள்ளையைத் தேடினாள். ஆனால் ஏற்கெனவே ஒருவனுக்கு நிச்சயம் செய்யப்பட்டு கல்யாணப் பத்திரிகையும் விநியோகிக்கப்பட்டு கல்யாணம் அரங்கேறாது போன அவளை ஏற்றுக் கொள்ள எவரும் தயாராய் இல்லை.

இப்படியான நிலையில் நான்கு மாதங்களுக்கு முன்பு, சுசிலாவின் அப்பா அன்னபூரணியைச் சந்திப்பதற்காக அவளது வீட்டுக்கு வந்திருந்தார். முகத்தில் மலர்ச்சியில்லை. மகளின் கல்யாணம் நின்று போன வேதனையை முகமெங்கும் நரைத்து அரும்பியிருந்த தாடி அறிவித்தது. கவிழ்ந்த தலையுடன் வந்து கட்டிலில் உட்கார்ந்தார். 'யம்மா... அன்னபூரணி, ஒந் தகப்பங்கணக்கா என்ன நெனச்சுக்க. சுசிலாவுக்கும் எப்படியாவது ஒரு வாழ்க்கை அமைச்சுக் குடுத்தா ஒனக்குக் கூலியா ரெண்டாயிரம் மூவாயிரம்னு கூடத் தர்றேன்' என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார்.



அவரது அந்த வார்த்தைகள், கபிலனுக்காகப் பெண் தேடி அலைந்து கொண்டிருந்த அவளது மனக்குதிரையைக் கடிவாளமிட்டு நிறுத்தியது. அப்படியே கட்டிலைவிட்டு எழுந்து போன அன்னபூரணி, அரவம் பட்டிக் கபிலனைப் பற்றி சுசிலாவின் அப்பாவிடம் கூறியதுடன் 'அந்தப் பையனையே நம்ப சுசிலாவுக்குப் பேசி முடிச்சிறலாம். அதுக்கு நான் பொறுப்பு. இதுவரைக்கும் ஏந்தொழிலுல பொய்யே பேசினதில்ல. ஆனா ஒங்க பொண்ணுக்காக, அவளுக்கு நிச்சயம் பண்ணிக் கல்யாணம் நின்னுபோன சங்கதிய மறைச்சு, இத நல்லபடியா நடத்திக் காட்டறேன். என்னோட மகன் மேற்படிப்புக்கு மூவாயிரம் ரூவா தேவப்படுது. நீங்க கடனா குடுத்தாலும்

பரவாயில்ல..' என்று சொல்ல,

'இந்தக் கல்யாணம் நல்லபடியா முடிஞ்சா, நீ கேட்டதுக்கும் மேலேயே பணந் தர்றேன் அன்னம்' கண்களில் நீர் வழிய, நெகிழ்வுடன் கூறினார் சுசிலாவின் அப்பா.

அப்போதே, அரவம்பட்டிக்குப் புறப் பட்டுப் போன அன்னபூரணி, கபிலனி டம் சுசிலாவைப் பற்றிச் சொல்ல, அவனும் அடுத்த இரண்டு தினங்களில் தனது குடும் பத்தினருடன் வந்து சுசிலாவைப் பார்த்து, பிடித்துப் போக நிச்சயதார்த்தத் தேதியை யும் குறித்தனர்.



தனது மகளைப் படிப்பாளியாக்குகிற கனவு நனவாய்க் கனிந்து வருவதை நினைக்கையில் தித்திப்பில் திளைத்துக் குளிர்ந்தாள் அன்னபூரணி. இன்று காலை வரையில் அந்தத் தித்திப்பில் தூசு அளவும் துருப்பிடித்திருக்கவில்லை. இன்று சாயங்காலம் அரவம்பட்டிக்குப் புறப்பட்டுப் போய், நாளைச் சாயங்காலம் சுசிலாவை நிச்சயதார்த்தம் பண்ணுவதற் காக வரப்போகிற கபிலன் குடும்பத் தினரைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்த சமயம் அரவம்பட்டியிலிருந்து, வந்திருந்த கபிலனின் உறவுக்காரர் ஒருவர் வீட்டுக்கு வந்தார். 'ஏனம்மா அன்னம்... கபிலனுக்கு நீ பார்த்து வெச்சிருக்கிற பொண்ணு ஏற்கெனவே ஒருத்தனுக்கு நிச்சயம் பண்ணி, மாப்ளப்பய ஓடிப்போய், கல்யாணம் நின்னு போயிருச்சாமே. இந்த விஷயத்த மறைச்சு அந்தப் பொண்ண அவனுக்கு நிச்சயம் பண்ண ஏற் பாடு பண்றீயாமே! இது கபிலனுக்குத் தெரிஞ்சா ரண களமாயிருந் தெரியும்ல. அவனே ஒரு முன்கோபி. முரட்டுப்பயல். பொய் பேசினா புடிக்காது. கூசாமெ அடிதடின்னு எறங்குவான். இந்த ஊர்ல– நான் போயிருந்த கல்யாண வீட்லதான் இதக் கேள்விப்பட்டேன். நீ ஒடனே போயி கபிலன்கிட்ட உண்மையச் சொல்லிடு. ஒருவேளை நிச்சயதார்த்தம் முடிஞ்சப்புறம் உண்மை தெரிஞ்சு, 'ஏற் கெனவே ஒருத்தனுக்கு நிச்சயம் பண்ணின பொண்ணை ஏந்தலையில கட்டப் பாக்குறீங்களே'ன்னு அவனும் நழுவிட்டா...? சுசிலா மனம் ஒடைஞ்சு ஏதாவது ஏடா கூடமாப் பண்ணிக் கிட்டா... அந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா?' என்று வெடித்து விட்டுப் போயிருக்க, அக்கணமே வெல வெலத்துப் போனாள், அன்னபூரணி.

'வேண்டாஞ்சாமி... நம்ப பையன் படிப்பு நின்னாலும் பரவாயில்ல; மத்த வங்க வாழ்க்கையில வெளையாட வேணாம். இப்பவே சுசிலாவைப் பத்தின உண்மைங்கள அந்தப் பயல்கிட்டச் சொல்லி, நாளைக்கு நடக்கப் போற நிச்சயதார்த்தத்த எப்படியும் நிறுத் திறணும். 'என்னை ஏமாத்திட்டியேடிப் பாவி'ன்னு அந்த மொரட்டுப்பய நம்பள அடிக்க வந்தாலும் அசிங்கமாத் திட்டி னாலும் பொறுத்துக்கிற வேண்டியதுதா. வேற வழி?' எனப் பதறியவள் வீட்டை விட்டுக் கிளம்பி அரவம்பட்டிக்குப் போவதற்காக பஸ் நிலையம் நோக்கி நடந்தாள்.

அன்னபூரணி பயணித்த பஸ் அரவம்பட்டியில் நிற்க, அதிலிருந்து இறங்கியவள் கபிலனின் வீட்டை நோக்கி கால்களை வீசிப்போட்டு நடந்தாள்.

கபிலனின் வீடு இருக்கிற தெருவிற்குள் நுழைந்தவளுக்குள் கடும் பயம் நுழைந்து கொண்டது. நெஞ்சுக்குள் 'திடுக்...திடுக்...' இன்னும் சிறிது நேரத்தில் அவனிடம் தான் அநியாயத்திற்கு வசைக்கணைகளை வாரிக் கட்டிக் கொள்ளப் போவது போலவும், அவனது வீட்டாரின் கூச்சலில்

நாராய்க் கிழிபடப் போவது போலவும் பீதி கவ்வ, 'யாத்தாடி, இன்னிக்கு நாஞ் செத்தே!' என நடுங்கியபடி நடந்தவள், அவனது வீட்டு வாசலில் நின்றவாறே உள்ளுக்குள் எட்டிப் பார்த்தாள்.

வீட்டின் முன் அறையில், ஈசிச்சேரில் கபிலன் உட்கார்ந்திருப்பது தெரிய அவளுக்கு முகத்திலறைந்தது போல அதிர்ச்சியாய் இருந்தது. நாளை நிச்சயதார்த்தத்திற்காக அவனது உறவுக்காரர்கள் நிறையப்பேர் வந்திருப்பது தெரிகிறது. வெள்ளையடித்தும், கதவு ஜன்னல்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டுமாய் வீடே கல்யாணக் களையில்!

ஈசிச்சேரில் சாய்ந்திருந்த கபிலன், யதேச்சையாக நிமிர, எதிரில் அன்னபூரணி நிற்பது கண்டு, "என்ன அக்கா, வாசல்லயே நின்னுட்டீங்க? உள்ள வாங்க.."-என்று புன்னகையுடன் அழைத்தான்.

திகிலுற்றபடியே அவனது அருகில் போய் நின்ற அன்னபூரணி, "தம்பீ... ஒங்கிட்ட ஒரு உண்மையச் சொல்ல வந்திருக்கேன். நீங்க கோபப்பட்றக் கூடாது" என்று ஆரம்பித்தவள் சுசீலாவைப் பற்றிய உண்மையைக் கூறிவிட்டு, "மன்னிச்சிருங்க தம்பீ! ஒரு பொம்பளப் புள்ளைய வாழ வெக்கனுங்கற நல்ல எண்ணமும், இந்தக் கல்யாணம் நடந்தா அந்தப் பொண்ணோட அப்பா, என் மகன் படிப்புச் செலவுக்கு மூவாயிரம் ரூபா தர்றதாச் சொன்னதால சொக்கிப்போயி என்னோட சுயநலத்துக்காகவும் இந்த உண்மைங்கள மறைச்சு, அந்தப் பொண்ண ஒங்களுக்குக் கட்டி வெக்கப் பாத்தேன். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல. இதவிட ஒங்களுக்கு வேற ஒரு நல்ல பொண்ணா நானே பாத்துக் கல்யாணம் பண்ணி வெக்கிறேன். நிச்சயதார்த்தத்த வேண்ணா நிறுத்திறலாம்" என்று இறுக்கமான முகத்துடன் அவள் கூற,

அவனது வார்த்தைகளால் எதுவும் சலனப்படாதது போல எழுந்து நின்றான் கபிலன். மலர்ந்த முகத்தில் மாற்றமில்லை.



வாட்ச் வாக்மேன்!

நமக்குப் பிடித்த பாடலை ரிக்கார்ட் செய்துகொண்டு எப்போது தேவையோ அப்போது காதில் மாட்டிக் கேட்டுக் கொள்ள வாக்மேன் வந்ததெல்லாம் பழைய காலம். இப்போது இதற்கு ஒரு வாட்ச் போதும். ஆமாம் படத்தைப் பாருங்கள். இந்த வாட்சைத் தயாரித்திருப்பது காசியோ என்ற நிறுவனம். ஏழாயிரம் ரூபாய் விலைக்கு ஜப்பானில் கிடைக்கும் இந்த வாட்ச்சில் ஒரு மணி நேரத்திற்குப் பாடல்களைக் கேட்கலாம். எப்போது வேண்டுமானாலும் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

— பாரீஸ் பார்த்தசாரதி

"இதுக்குப் போயா இப்படிப் பயந்தீங்க அக்கா? இந்த விஷயத்த நான் ஏற்கெனவே விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிட்டேன். ஏற்கெனவே தீர்மானிச்சபடி நாளைக்கு நிச்சயதார்த்தம் நடக்கும். நீங்க தவறாம வந்துறணும்" என்றவன், வீட்டுக்குள் போய் ஐந்நூறு ரூபாய்த் தாள் ஒன்றை எடுத்து வந்து, அவளது கையில் திணித்தான். "ஒங்க பையன் படிப்புக்கு என்னாலான உதவி. சுசீலாவோட வாழ்வும்; இந்தக் கல்யாணம் மூலமா ஒங்க பையனுக்குக் கிடைக்கப்போற கல்வியும் கெட்டுப் போக நான் காரணமா இருக்க மாட்டேன்."

'இவனா முரடன்?'-நம்ப முடியாது நெக்குருகிப் போனாள் அன்னபூரணி. ●



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.


எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
42, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.
Website : www-Kumbakonamonline.com/vedapadasala

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதார்த்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதார்த்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 457 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 171 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) த்வாதசி ஸமாராதனைக்கு	Rs. 1,500	Rs.15,000
பௌர்ணமி ஆயுஷ்ய ஹோமம்	Rs. 1,000	Rs.10,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரு.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.



இருபத்து மூன்றாம் அத்தியாயம்

படைகள் வந்தன!

தஞ்சை மாநகரம் அன்று முழுதும் ஒரே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. புயலையும் மழையையும் அவற்றினால் நேர்ந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டார்கள். "ஈழங்கொண்ட வீராதி வீரரும் சோழ நாட்டு மக்களின் இதயங்கொண்ட இளவரசருமான பொன்னியின் செல்வர் நாகைப் பட்டினத்தில் புயல் அடித்த அன்று வெளிப்பட்டு விட்டார்; பின்னர் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்; அவரைச் சிங்காதனத்தில் ஏற்றி வைத்துச் சக்கரவர்த்தியாக முடி சூட்டும் நோக்கத்துடன் பெருந்திரளான மக்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள்" என்னும் செய்திகள் முதலில் வதந்திகளாகக் காற்று வாக்கில் வந்தன. பின்னர், நேரில் இளவரசரை நாகைப் பட்டினத்தில் பார்த்தவர்களே வந்து சொன்னார்கள். இந்தச் செய்தி காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன் வெளியிலே அடித்த புயலைப் போலவே தஞ்சை நகர மாந்தரின் உள்ளத்தில் உத்வேகப் புயல் அடிக்கத் தொடங்கியது. தஞ்சை நகரம் என்றும் கண்டறியாத அளவில் இளவரசருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியிலேயிருந்த புறநகரத்தின் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். கூட்டங் கூட்ட

அமரர் கல்கி

மாகத் தெருக்களிலே நின்று பேசலானார்கள். மேள தாளங்கள், தாரை தப்பட்டைகள் முதலிய வாத்தியங்கள் சேகரிக்கப்பட்டன. ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்கள் இந்த விசேஷ சந்தர்ப்பத்தில் தங்கள் ஆற்றல்களையெல்லாம் காட்டி விடுவது என்று எண்ணி ஆயத்தம் செய்யலானார்கள். மாதர்களும் இளஞ்சிறார்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதங்களைப் பற்றிச் சிந்தித்தார்கள். மற்றும் பல அவசரக்காரர்கள் இளவரசரை வரவேற்பதில் தாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், தஞ்சையிலிருந்து நாலா திசைகளிலும் சென்ற சாலைகளில் கொஞ்ச தூரம் முன்னதாகச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்கள். அப்படி முன்னதாகப் புறப்பட்டவர்களை வேறு சிலர் பார்த்துப் பரிகசித்தார்கள்.

புறநகரம் இந்தப் பாடு பட்டதென்றால், கோட்டைக்குள்ளேயும் ஏதோ முக்கியமான சம்பவங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன என்பதற்கு விரைவிலேயே அறிகுறிகள் தென்பட்டன.

காலையில் வழக்கம் போல் கோட்டை வாசல் திறந்தது. கறிகாய், தயிர், மோர் விற்பவர்களும் அரண்மனைகளில் அலுவல்களுக்குச் செல்வோரும் வழக்கம் போல் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். புயல் - மழையினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி முறையிட்டுக் கொள்ள விரும்பியவர்கள் இன்று ஒரு சிலர்தான் வந்தார்கள். அவர்களும் கோட்டைக்குள் சென்றார்கள். வழக்கம் போல வேளைக்காரப் படையும் கோட்டைக்குள் பிரவேசித்தது.

பின்னர், கோட்டை வாசற் கதவுகள் எல்லாம் சடசடவென்று சாத்தப்பட்டன. பெரிய பெரிய இரும்புத்தாள்களைக் கொண்டு கதவுகளை இறுக்கும் சத்தமும் பூட்டுக்களை மாட்டிப் பூட்டும் சத்தமும் கேட்கத் தொடங்கின. பிற்பாடு வந்தவர்கள் காவலர்களால் தடுத்துநிறுத்தப் பட்டார்கள். முற்பகல் நேரத்தில் இம்மாதிரி கோட்டைக் கதவுகளைச் சாத்தித் தாளிடும் காரணம் என்னவென்று ஜனங்கள் பேச ஆரம்பித்த சமயத்தில் இன்னொரு அதிசயம் நடந்தது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைக் கடப்பதற்கு ஏற்பட்ட பாலமும் தூக்கப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் கோட்டை வாசலை நெருங்குவதற்கே முடியாமல் போய் விட்டது.

கோட்டையின் பிரதான வாசலாகிய வடக்கு வாசலுக்குச் சமீபமாக இருந்தவர்கள் மேற்கு வாசலையும் தெற்கு வாசலையும் பற்றி விசாரித்தார்கள். அந்த வாசல்களும் வடக்கு வாசலைப் போலவே சாத்திப் பூட்டப்பட்டன என்றும், பாலங்கள் தூக்கி விடப்பட்டன என்றும் அறிந்ததும் மிக்க வியப்படைந்தார்கள்.

"இது என்ன? யுத்தம் ஒன்றும் நடக்கவில்லையே? பகைவர்களின் சைன்யங்கள் படை எடுத்து வருவதாகத் தெரியவில்லையே? அப்படிப் படை யெடுத்து வருவதற்கு ஆற்றல் வாய்ந்த பகைவர்கள் வடக்கே, தெற்கே, மேற்கே, கிழக்கே, - எங்கும் சமீபப் பிரதேசத்தில் இல்லையே? அப்படி ஒருவேளை வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து பகைவர்கள் திடீர்ப் பாய்ச்சலில் வந்து விடுவதாக இருந்தாலும் கொள்ளிடத்தையும் காவேரியையும் மற்றுமுள்ள நதிகளையும் தாண்டி இப்போது எப்படி வர முடியும்? அந்த மாநதிகளில் வெள்ளம் பூரணப் பிரவாகமாக அல்லவா போய்க்கொண்டிருக்கிறது?" - இவ்விதமெல்லாம் தஞ்சைக் கோட்டையின் புறநகரத்தில் வசித்த ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஒருவேளை பொன்னியின் செல்வரைக் கோட்டைக்குள் பிரவேசியாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று சிலர் கேள்விகளைப் போட்டுக்கொண்டு "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று மறுமொழி கூறிக்கொண்டார்கள். இந்த

வதந்தி பரவப் பரவ, நகர மாந்தரின் உத்வேகம் அதிகமாயிற்று. "விஜயாலய சோழரின் வம்சத்தில் வழி வழியாக வந்த இளவரசரைக் கோட்டைக்குள்ளே வராமல் தடுப்பதற்கு இந்தப் பழுவேட்டரையர்கள் யார்? அப்படிப் பழுவேட்டரையர்கள் உண்மையில் முயல்வதாயிருந்தால், கோட்டை மதில்களையே இடித்துத் தகர்த்துவிட வேண்டியதுதான்!" என்னும் தோரணையில் பேசுவோரும் இருந்தனர்.

வதந்தி என்னும் மாயா பூதம் எப்படிக் கிளம்புகின்றது, எப்படி அவ்வளவு விரைவில் பிரயாணம் செய்கின்றது என்பது யாராலும் கண்டுபிடிக்க முடியாத மர்மமான காரியந்தான். திடீரென்று இன்னொரு பயங்கரமான வதந்தி மக்களிடையே பரவத் தொடங்கியது. வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மரணம் நேர்ந்துவிட்டது என்பதுதான் அவ்வதந்தி. "சக்கரவர்த்தி காலமாகி விட்டாராமே? அது உண்மையா?" என்று முதலில் கேட்டார்கள். அன்று அதிகாலையில் வால் நட்சத்திரம் ஒரு நிமிடம் ஜோதி மயமாக ஒளி வீசிவிட்டுப் பூமியை நோக்கி விழுந்து மறைந்ததைப் பார்த்தவர்கள் சிலர், அதையே அத்தாட்சியாகக் கொண்டு சுந்தர சோழர் காலமானதை ஊர்ஜிதம் செய்தார்கள். "இது உண்மையாயின், மேலே என்ன நடக்கப் போகிறது?" என்பது பற்றிக் கவலையுடன் விவாதிக்கப்பட்டதும் இயல்பேயல்லவா? இராஜ்ய உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படுமா? சிற்றரசர்கள் இரு கட்சியாகப் பிரிந்து நின்று சண்டையிடுவார்களா? இத்தகைய உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சோழ சாம்ராஜ்யமே சின்னாபின்னமாகிவிடுமா? நூறு ஆண்டுகளாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வந்த சாம்ராஜ்ஜியத்தில் மீண்டும் பகைவர்களின் படைகள் உட்புகுமா?

இவ்விதமெல்லாம் ஜனங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே "அதோ படை வருகிறது!" என்ற கூக்குரல் ஒன்று எழுந்தது. பலரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்த்தார்கள். உயர்ந்த கட்டடங்களின் மீதும் உயரமான மரங்களின் மீதும் ஏறிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் கண்ட காட்சி ஒரேயடியாக வியப்பையும், திகைப்பையும் அளிப்பதாக இருந்தது.

தஞ்சையிலிருந்து மேற்கேயும், தென்மேற்குத் திசையிலேயும் புறப்பட்டுச் சென்ற மூன்று பெரிய சாலைகள் அக்காலத்தில் இருந்தன. ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் சாலை; மற்றொன்று மதுரை வழியாகத் தென் பாண்டிய நாட்டுக்குச் சென்ற சாலை; இன்னொன்று உறையூர் வழியாகக் கருருக்கும் சேர நாட்டுக்கும் சென்ற நீண்டு அகன்ற சாலை.

அன்று பிற்பகலில் மேற்கூறிய மூன்று சாலைகள் வழியாகவும் படைகள் அணி வகுத்து வந்துகொண்டிருந்தன. அவற்றில் முன்னால் வந்த அணிகள் கண்ணுக்குத் தெரிந்தனவே தவிர, பின்னால் வந்த அணி வரிசைகள் எங்கே முடிகின்றன என்பதே தெரியவில்லை. அவ்வாறு அப்படை வீரர்களின் அணிகள் பின்னால் பின்னால் பின்னால் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தன.

நல்லவேளையாக, அப் படைகளின் முன்னணியில் பெரிய புலிக் கொடிகள் பறந்து கொண்டிருந்தபடியால் பகைவர்களின் படைகள் என்று சந்தேகிக்க இடம் ஏற்படவில்லை. சோழ சாம்ராஜ்யத்துச் சைன்யங்கள்தான் அவை! ஆனால் எதற்காக வருகின்றன? எங்கிருந்து வருகின்றன?

இன்னும் சற்றருகில் அப் படைகள் நெருங்கி வந்தபோது, புலி உருவம் தாங்கிய கொடிகளில் சிறிய அளவில் பதித்திருந்த இலச்சினைகளும் கண்ணில் பட்டன. அவற்றிலிருந்து, கொடும்பாளூர் தலைமைக்கு உட்பட்ட பராந்தக சோழப்

பெரும் படையும், தென் பாண்டிய நாட்டிலிருந்த தெரிந்த கைக் கோளர் பெரும் படையும், ஈழத்துப் போரில் ஈடு பட்டிருந்த அரிஞ்சய சோழப் பெரும் படையும் சேர்ந்து வந்துகொண்டிருந்தனவென்று தெரிய வந்தது. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம், தென் திசைச் சேநாதிபதியான பூதி விக்கிரம கேசரியே மேற்கூறிய படைகளுடன் வந்து கொண் டிருக்கிறார் என்பது தஞ்சை நகர மாந்தர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. இதிலிருந்து, சைன்யங்கள் எதற்காக வருகின்றன என்பதை ஊகித்து உணர்வதும் எளிதாயிற்று. கொடும்பாளூர்ப் பெரிய வேளாரான பூதி விக்கிரம கேசரி, ஈழத்துப் பட்ட சிறிய வேளாரின் திருமகளாகிய வானதியைப் பொன்னியின் செல்வருக்கு மணம் புரிந்து கொடுத்து, அவரையே சோழ நாட்டுச் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க விரும்புகிறார் என்பது சோழ நாட்டில் எல்லாருக்கும் தெரிந் திருந்த செய்தியேயாகும். கிழக்கேயிருந்து இளவரசர் அருள் மொழிவர்மர் பொது ஜனங்களின் ஆரவாரத்துடன் அழைத்து வரப் படுவதும், மேற்கேயிருந்து சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி மாபெரும் சைன்யத்துடன் அதே சமயத்தில் தஞ்சையை நோக்கி வருவதும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருந்தன.

பழுவேட்டரையர்களும் அவர்களுடன் தோழமை பூண்ட சிற்றரசர்களும் மதுராந்தகருக்குப் பட்டம் சூட்டப் பிரயத் தனம் செய்கிறார்கள் என்பதை ஏற்கெனவே மக்கள் அறிந் திருந்தார்கள்.

ஆதலில் அவர்களுடைய அன்புக்கு உகந்த அருள்மொழிச் செல் வரைச் சிங்காதனம் ஏற்றுவதற் காகவே கொடும்பாளூர்ப் பூதி விக்கிரம கேசரி தமக்கு உட் பட்ட மாபெரும் தென்திசைப் படைகளுடன் வருகிறார் என்று தஞ்சை நகர மக்கள் ஊகித்துக் கொண்டார்கள். இதனால் அவர்



களுடைய உற்சாகம் மேலும் கரை புரண்டு ஓடத் தொடங்கியது. சமுத்திரம் போல் பொங்கி வந்த படை வீரர்கள் அனைவரையும் வரவேற்று உபசரிக்கவும் விருந்து அளிக்கவும் அவர்கள் சித்தமானார்கள்.

தஞ்சை நகரில் அக்காலத்தில் பல பெரிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்கள் இருந்தன. கொடும்பாளூர் மணிக் கிராமத்தார். திருப்புறம்பயம் வலஞ்சியர், உறையூர்த் தர்ம வணிகர், நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் ஆகிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்களில் அன்று பிற்பகலிலிருந்தே ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவு அளிக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

இதை அறிந்ததும் நகர மாந்தர்களின் உல்லாசம் அதிகமாகி விட்டது. அங்குமிங்கும் திரிவதும் கூடிக் கூடிப் பேசுவது மாக இருந்தார்கள். அவர்களில் நூற்றுக்கு நூறு பேரும் அருள்மொழி வர்மரின் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபடியால், வரப் போகும் சம்பவங்களைப் பற்றிப் பேசுவதில் ஒளிவு மறைவு ஒன்றும் அவசிய மாகக் கருதவில்லை. படை வீரர்கள் தஞ்சையை அணுகி வந்து ஆங்காங்கே கூடாரம் அடித்து முகாம் போடத் தொடங்கியதும், நகர மாந்தர்கள் அந்த முகாம்களுக்கே சென்று வீரர்களுடன் சல்லாபம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.



சூரியன் மறைந்து நன்றாக இருட்டுவதற்குள்ளே தஞ்சை நகரின் மூன்று பக்கங்களையும் சேனா வீரர்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். நாலாவது பக்கத்தில் வடவாறு தஞ்சைக் கோட்டையையொட்டிச் சென்றபடியாலும், வடவாற்றில் பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்தபடியாலும், அந்தப் பக்கம் வீரர்கள் போவதற்கு வசதியாக இல்லை. அதற்கு அவசியமுமில்லையென்று கருதி விட்டு விட்டார்கள்.

தஞ்சைக் கோட்டையின் பிரதான வடக்கு வாசலை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? முதன்முதலாக, நந்தினி தேவியைத் தொடர்ந்து வந்தியத்தேவன் கோட்டைக்குள் பிரவேசித்த வாசல் அதுவன்றோ? அந்தக் கோட்டை வாசல் கண்ணுக்குத் தெரியும்படியான இடத்தில் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியின் ஜாகை அமைக்கப் பட்டது.

இருட்டி ஒரு ஜாமம் ஆன பிறகு சேநாதிபதி கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தமது ஜாகைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்னாலேயே அங்கே ஏறக்குறைய நூறு பேர் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களில் வேளிர் படைத் தலைவர்களும், கைக் கோளர் படைத்தலைவர்களும், பாண்டிய மண்டலத்தின் தலைவர்களும் கொங்கு நாட்டுத் தலைவர்களும் இருந்தார்கள். ஈழ நாட்டுப் போரில் வெற்றி கண்ட சோழர் படைத் தலைவர்களும் பலர் இருந்தார்கள். இவர்களைத் தவிர பற்பல வர்த்தகர் மகா சபைகளின் தலைவர்கள் இருந்தார்கள். முக்கியமாக, 'நானா தேசத்திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்' என்று உலகமெல்லாம் புகழ் பெற்ற வர்த்தக மண்டலத்தின் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அயல் நாடுகளுடன் கப்பல் வாணிகம் செய்யும் பெரும் தன வந்தர்கள், வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைக் காவல் புரிவதற்காகத் தாங்களே யுத்தக் கப்பல்களை அனுப்பக் கூடிய வசதி வாய்ந்தவர்கள். இவர்களைத் தவிர, தஞ்சாவூர் நகரத்தைச் சேர்ந்த ஐம்பெருங் குழுவினரும் எண்பேர் ஆயத்தின் தலைவர்களும் அழைக்கப் பட்டு அந்தக் கூடாரத்தில் வந்து கூடியிருந்தார்கள்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

மந்திராலோசனை!

ஆரம்பத்தில் வழக்கமான யோக க்ஷேம விசாரணைக்குப் பிறகு கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறலுற்றார்:-

"நான் யார் யாருக்குத் தூது அனுப்பினேனோ, அவர்களில் ஏறக்குறைய எல்லாரும் வந்து இங்கே கூடியிருக்கிறீர்கள். திருக்கோவலூர் முதுகிழவரான மலையமான் அரசர் மட்டும் வரவில்லை. அவர் வர முடியாததற்குத் தக்க காரணம் இருக்கும் என்றே நினைக்கிறேன். மிகவும் அபாயகரமான காரியம் என்று பலரும் கருதக்கூடிய காரியத்தைப் பற்றி யோசிக்க நாம் இங்கே வந்திருக்கிறோம். சோழ குலத்தாரிடமும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடமும் நாம் எல்லாரும் எவ்வளவு பக்தி கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்தது. அதை எவ்வளவோ தடவை எவ்வளவோ காரியங்களில் நிரூபித்திருக்கிறோம். ஆனாலும் நாம் சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக இங்கே கூடியிருக்கிறோம் என்று நம் எதிரிகள் குற்றம் சாட்டக் கூடும். சக்கரவர்த்தியை எதிர்த்து யுத்தம் செய்யப் படை திரட்டி வந்திருக்கிறோம்

என்று கூட அவர்கள் சொல்லலாம். ஆனால் சக்கரவர்த்தியின் விருப்பம் இன்னதென்பதை நாம் நேர்முகமாகத் தெரிந்து கொள்வதற்குச் சில காலமாக வசதி கிடைக்கவில்லை. சக்கரவர்த்தியை நாம் தனிப்படப் பார்க்க முடிகிறதில்லை. அவருடைய அந்தரங்க விருப்பத்தை அறிய ஒரு நிமிஷங்கூட அவரிடம் தனித்துப் பேச முடியவதில்லை. ஏன் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. சக்கரவர்த்தியின் தேக சுகத்தை உத்தேசித்து அவரைத் தஞ்சைக் கோட்டையில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் பழுவேட்டரையர்கள் அவரைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் எல்லாரும் என்ன கருதுகிறீர்களோ, தெரியவில்லை...''

சேநாதிபதி இந்த இடத்தில் சிறிது நின்றதும், ''ஆம், ஆம்,'' ''அதுதான் உண்மை!'' ''சக்கரவர்த்தியைச் சிறையில் தான் வைத்திருக்கிறார்கள்'' என்று அக்கூட்டத்தில் பல குரல்கள் எழுந்தன.

''உங்கள் ஆமோதிப்பிலிருந்து நாம் எல்லோரும் உத்த உணர்ச்சியும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் என்று ஏற்படுகிறது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து எத்தனையோ ஆயிரமாயிரம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைப் போர்க்களத்தில் பலி கொடுத்து இந்தச் சோழ சாம்ராஜ்யம் இந்த மகோந்நத நிலைக்கு வந்திருக்கிறது. சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவே நமக்கெல்லாம் பெருமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் எவ்விதக் குறைவும் ஏற்படாமல் பாதுகாப்பதற்கே நாம் இங்கே கூடியிருக்கிறோம்; சக்கரவர்த்திக்கு எதிராகச் சதி செய்வதற்கு அல்ல. சக்கரவர்த்தியின் எதிரிகள் அவரை மூன்று வருஷ காலமாகச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவருக்கு உடல்நிலை சரியாக இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த திருமேனியரான விஜயாலய சோழர், எண்பதாவது பிராயத்தில் திருப்புறம்பயம் போர்க்களத்தில் வந்து இரண்டு கைகளிலும் இரண்டு கத்திகளை ஏந்திச் சக்ராகாரமாகச் சுழற்றி அவர் புகுந்து சென்ற விடமெல்லாம் எதிரிகளின் தலைகளை மலை மலையாகக் குவித்தார்! அத்தகைய வீரர் வம்சத்தில் பிறந்த சுந்தர சோழர் தேக அசௌக்கியத்தைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு வெளியில் வரவே மறுக்கிறார் என்றால், அது நம்பக்கூடிய காரியமா? சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருக்கும் துரோக சிந்தனையாளர், பில்லி சூனிய மாய மந்திர வித்தைகளைக்கொண்டு அவருக்குச் சித்தக் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டார்கள் என்று தோன்றுகிறது. சக்கரவர்த்தியின் சித்தம் சரியான நிலையில் இருந்தால், தமக்குப் பீமார் ஜுனர்களைப் போன்ற இரண்டு வீராதி வீரப் புதல்வர்கள் இருக்கும்போது, போர்க்களத்தையே கண்ணால் கண்டறியாத மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட விரும்புவாரா...?

இப்போது பலர் ஒரே சமயத்தில் ''சக்கரவர்த்தியின் விருப்பம் அது வென்று நமக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்கள்.

''நமக்கு நேர்முகமாகத் தெரியாது தான். பழுவேட்டரையர்கள் கட்டி விட்ட கதையாக இருக்கலாம். ஆனால் நம் முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர்கூட அதை நம்புகிறார்...''

''அநிருத்தரும் அவர்களோடு சேர்ந்திருக்கலாம்; யார் கண்டது?'' என்றார் கூட்டத்தில் ஒருவர்.

''அப்படியும் இருக்கலாம். அதன் உண்மையை அறிந்து கொள்வது நாம் இங்கே கூடியிருப்பதன் ஒரு முக்கிய நோக்கம். இன்றைய தினம் இத் தஞ்சை மாநகரில் உலாவி வரும் வதந்தியை நீங்களும் அறிந்திருப்பீர்கள். நான் அதை நம்பவில்லை. சக்கரவர்த்தியை உயிரோடு தரிசிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிடைக்கும் என்றே நம்பியிருக்கிறேன். அப்படி அவரைத் தரிசிக்கும்போது பட்டத்தைப் பற்றி அவருடைய விருப்பம் என்னவென்பதை நேரில் கேட்டுத் தெரிந்துகொள்வோம். ஒருவேளை சக்கரவர்த்தியே மதுராந்தகனுக்குப் பட்டம்

கட்டும் விருப்பத்தைத் தெரிவித்தார் என்றால், அதை நீங்கள் எல்லாரும் ஒப்புக்கொள்வீர்களா...?"

"மாட்டோம்! மாட்டோம்!" என்ற பெருங்கோஷம் எழுந்தது.

"நானும் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஏனென்றால், சக்கரவர்த்தி தெளிவுள்ள சித்தமுடையவராயிருந்தால் அவ்விதம் ஒரு நாளும் தெரிவிக்கமாட்டார். பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலேயே பட்டத்து உரிமை பற்றி விஷயம் தீர்ந்து முடிவாகி விட்டது. சுந்தர சோழரும் அவருடைய சந்ததிகளுமே தஞ்சைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று அந்த மன்னர் உயிர்விடும் தறுவாயில் கூறியதை நானே என் செவிகளினால் கேட்டேன். கேட்டவர்கள் இன்னும் பலரும் இங்கே இருப்பார்கள். காலஞ் சென்ற மகானாகிய கண்டராதித்தர் தம் குமாரனுக்கு இராஜ்யம் ஆளும் ஆசையே உண்டாகாத விதத்தில் அவனை வளர்க்க முயன்றார். அவருடைய தர்மபத்தினியாகிய பெரிய பிராட்டியார், - சிவபக்தியே உருக் கொண்டவரான செம்பியன் மாதேவடிகள், - மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டக்கூடாதென்பதில் பிடிவாதமாயிருப்பதை நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். அப்படியிருக்கும்போது, சுந்தர சோழர் ஏன் மதுராந்





தகனுக்குப் பட்டம் கட்ட ஆசைப்படுகிறார்? அவர் சித்தம் சரியாயில்லை என்பதற்கு இன்னும் ஓர் உதாரணமும் கூறுகிறேன். வீர பாண்டியனைக் கொன்று பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்த பிறகு, பாண்டியனுக்கு உதவி செய்ய முன்வந்து ஈழத்து அரசனைத் தண்டிப்பதற்காக என் சகோதரன் படை எடுத்துச்சென்றான். அவனுக்கு உதவியாகப் போதிய சைன்யங்களையும் தளவாடங்களையும் அனுப்பத் தவறி விட்டோம். அதனால் அவன் போர்க்களத்தில் வீர மரணம் எய்த நேர்ந்தது. சோழ நாட்டின் வீரப் புகழுக்கு நேர்ந்த அந்தக் களங்கத்தைத் துடைத்துக்கொள்ளும் பொருட்டு நானும் பொன்னியின் செல்வரும் சென்றோம். ஈழத்துப் படைகளை நிர்மூலமாக்கினோம். அநுராதபுரத்தைக் கைப்பற்றினோம். மகிந்தனை மலை நாட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளச் செய்தோம். தனாதிகாரி பழுவேட்டரையர் எங்களுடன் ஒத்துழைக்கவில்லையென்பது உங்களுக்கெல்லாம் தெரியும். உங்களில் இங்கே வந்திருக்கும் வர்த்தக மகா ஜனத் தலைவர்கள் உணவுப் பொருள்களை அனுப்பிப் பேருதவி செய்தீர்கள். ஆனாலும் நம் வீரர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தது. அவ்வளவையும் அவர்கள் பொறுத்துக் கொண்டு மகிந்தன் படைகளை நிர்மூலமாக்கியது எதனால்? சோழ குலத்து மாவீரர்களுக்குள்ளே ஈடில்லா மாவீரராகிய பொன்னியின் செல்வர் அளித்த உற்சாகத்தினாலேதான்! அப்படிப்பட்ட வீரப் புதல்வனுக்குத் தந்தையாகிய சக்கரவர்த்தி அளித்த பரிசு என்ன? இராஜத் துரோகம் செய்து விட்டதாக அபாண்டம் சுமத்தி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டதுதான்! சித்த சுவாதீனம் உடைய ஒருவர் இவ்வாறு கட்டளை பிறப்பித்திருக்க முடியுமா...?

"சேநாதிபதி! மறுபடியும் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பற்றியே பேசுகிறீர்கள். சக்கரவர்த்திதான் அக் கட்டளையை அனுப்பினார் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று சபையிலிருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"அதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை. அதன் உண்மையைப் பற்றி நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பியுந்தான் இங்கே நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். சக்கரவர்த்தியின் சம்மதமின்றி இத்தகைய கட்டளை பிறந்திருக்கக் கூடுமானால், இந்தச் சோழ சாம்ராஜ்யம் எவ்வளவு பயங்கரமான நிலைமையில் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பின்னால் நிகழ்ந்தவற்றையும் எண்ணிப் பாருங்கள். சிறைப்படுத்த வந்த வீரர்கள் இளவரசரைச் சிறைப்படுத்த மறுத்து விட்டார்கள். இளவரசர் தாமாகவே தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பார்த்திபேந்திர பல்லவனுடைய கப்பலில் ஏறி வந்தார். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கொண்டதாம். அப்போது இளவரசர் கடலில் மூழ்கி மாண்டதாக ஒரு வதந்தி புறப்பட்டது. இதை நான் நம்பவேயில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் அபகரித்திருக்க மாட்டான் என்று உறுதியாக நம்பினேன். அந்தக் கப்பலில் வந்த மற்ற எல்லாரும் உயிர் பிழைத்திருக்கும்போது இளவரசர் மட்டும் எப்படிக் கடலில் மூழ்கி மாண்டிருக்க முடியும்?– ஆகையால் இளவரசர் கரை ஏறியதும் அவரைச் சிறைப்படுத்தச் சதி நடந்திருக்க வேண்டும். அந்தச் சூழ்ச்சியை அறிந்துகொண்ட இளவரசர் தப்பிச் சென்று எங்கேயோ பத்திரமாயிருக்கிறார். சரியான சமயத்தில் வெளிப் புறப்பட்டு வருவார் என்று நம்பியிருந்தேன். உங்களில் பலரும் அப்படி நம்பியதாகத் தெரிவித்தீர்கள். நமது நம்பிக்கை நிறைவேறியது. நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று இளவரசர் வெளிப்பட்டார் என்பதாகவும், சோழ நாட்டு மக்கள் அவரை விஜய கோலாகலத்துடன் வரவேற்றுத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்பதாகவும் அறிந்தோம். அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கும் உத்தேசத்துடனேயே நாமும் இவ்விடம் வந்து சேர்ந்தோம். ஆனால் வஞ்சகச்

சூழ்ச்சிகாரர்கள் மறுபடியும் தங்கள் கை வரிசையைக் காட்டிவிட்டார்கள்...''

''என்ன? என்ன?'' என்று பலர் கவலைக் குரலில் கேட்டார்கள்.

''நான் இந்தக் கூட்டத்துக்கு வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் அச்செய்தி கிடைத்தது. இன்று காலையில் திருவாரூரிலிருந்து இளவரசர் புறப்படவிருந்த சமயத்தில், அவர் ஏறி வந்த யானைக்கு மதம் பிடித்து யானைப் பாகனைத் தூக்கி எறிந்து விட்டதாம். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் இளவரசரும் காணாமற் போய் விட்டாராம்...!''

''ஐயையோ!'' ''இது என்ன விபரீதம்?'' ''தெய்வமும் வஞ்சகர்களின் கட்சியில் இருக்கிறதா?'' – என்று இப்படிப் பலர் அங்கலாய்க்கத் தொடங்கினார்கள். அவர்களைச் சேநாதிபதி கையமர்த்தி



அமைதியாயிருக்கச் செய்தார்.

"செய்தியை முதலில் கேட்டதும் நானும் கதி கலங்கிப் போனேன். ஒருவாறு சமாளித்துக் கொண்டுதான் இந்தக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தேன். இளவரசர் அருள்மொழி வர்மர் போர் முனையில் எத்தகைய நிகரில்லாத வீரம் உடையவரோ, அப்படியே அறிவாற்றலிலும் நிகரற்றவர். வஞ்சகர்களின் சூழ்ச்சி வலையில் அவ்வளவு சுலபமாக அகப்பட்டுக் கொண்டு விட மாட்டார். சீக்கிரத்தில் அவரைப் பற்றி நல்ல செய்தி ஏதேனும் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்! அதற்கிடையில் நாம் என்ன செய்ய வேண்டும், இந்த இக்கட்டான நிலைமையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!"

இவ்விதம் சேநாதிபதி தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்துகள் முக்கியமான விஷயங்களில் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே இருந்தன. சில்லறை விவரங்களில் மட்டுமே மாறுபட்டன! அங்கே உள்ளவர்களின் பிரதிநிதிகள் நாளைய தினம் சக்கரவர்த்தியை நேரில் சந்தித்துப் பேச வசதி கோர வேண்டும் என்றும், அதற்கு வாய்ப்புக் கிடைத்தால் சக்கரவர்த்தியிடம் "மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுவதை நாங்கள் விரும்பவில்லை" என்று தெளிவாகத் தெரிவித்து விட வேண்டும் என்றும் பலர் கூறினார்கள். "ஒன்று, பழுவேட்டரையர்களுடைய சர்வாதிகாரப் பதவிகளிலிருந்து சக்கரவர்த்தி அவர்களை நீக்கி விட வேண்டும்; அல்லது சக்கரவர்த்தி தஞ்சாவூரை விட்டுப் பழையாறைக்குப் போய் விட வேண்டும்" என்று இன்னும் சிலர் வற்புறுத்தினார்கள்.

"ஆதித்த கரிகாலருக்கு ஏற்கெனவே யுவ ராஜ்ய பட்டாபிஷேகம் ஆகியிருப்பதால் அவரே அடுத்த பட்டத்துக்கு உரியவர். அவராகப் பட்டம் வேண்டாம் என்று மறுதளித்தால், அடுத்தபடி சிங்காதனத்துக்கு உரிமையாளர் அருள்மொழிவர்மர்தான். இதைச் சந்தேகத்துக்கு இடம் வையாமல் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவரையும் ஒப்புக்கொள்ளப் பண்ண வேண்டும்" என்றார்கள் வேறு சிலர். சக்கரவர்த்தியைச் சந்திப்பதற்கே வாய்ப்புக் கிடைக்காவிட்டால், கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்கு மறுத்தால், கோட்டையை முற்றுகையிட வேண்டியதுதான் என்று சிலர் சொன்னார்கள். "முற்றுகை எதற்காக? உடனடியாகக் கோட்டைக் கதவுகளையும் மதில்களையும் தகர்க்கும்படி வீரர்களை ஏவ வேண்டியதுதான்!" என்று இன்னும் சிலர் கூறினார்கள். இளவரசரைப் பற்றிச் செய்தி வரும் வரையில் காத்திருப்பது நல்லது என்றும் ஆதித்த கரிகாலருக்கு ஆள் அனுப்பி அவரையும் தருவித்துக் கொள்ள வேண்டும் என்றும் சிலர் கருதினார்கள்.

"அதற்காகவெல்லாம் காத்திருப்பதில் என்ன பயன்? பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலுள்ள சுந்தர சோழப் பெரும் படை கொள்ளிடத்துக்கு அக்கரையில் மழநாட்டில் இருந்து வருகிறது. தற்சமயம் கொள்ளிடத்திலும் மற்ற நதிகளிலும் பெரு வெள்ளம் போவதால் அப் படைகள் இங்கு வர முடியாது. ஆகையால் கோட்டையைத் தகர்த்துச் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்களின் சிறையிலிருந்து மீட்பதற்கு இதுவே தக்க சமயம்" என்று வற்புறுத்தினார்கள் வேறு சிலர்.

இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில், கூடாரத்தின் வாசலில் காவல் புரிந்துகொண்டிருந்த வீரன் ஒருவன் அவசரமாக உள்ளே வந்து சேநாதிபதியின் காதில் ஏதோ கூறினான். அவர் கூட்டத்தினரைப் பார்த்து, "இதோ வந்து விடுகிறேன். சற்றுப் பேசிக் கொண்டிருங்கள்" என்று சொல்லி விட்டு வெளியேறினார்.

(தொடரும்)

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும் ?



மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் சூரிய பகவான்.

ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் சூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர் : ஸங்கராந்தி சமயம் சூட்க்ஷமமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்படி) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷு	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷு	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

கரடி பாஷை!



"உங்க கம்பெனி சோப்பு மட்டும் எப்படி நிறைய விக்குது?"

"ஒரு டஜன் சோப்பு வாங்கினா ஒரு பக்கெட் தண்ணி இலவசமா தர்றோமே!"

— தஞ்சை தாமு

"இவ்வளவு நேரம் கரடியா கத்தறேனே, காதுல விழலையா உங்களுக்கு?"

"கரடி பாஷையெல்லாம் எனக்குத் தெரியாது சரசு!"

— சீர்காழி வி. ரேவதி





"அங்கே என்ன பிரச்னை?"

"இவர் ரொம்ப நேரமா ஈ மெயிலுக்கு எவ்வளவு ஸ்டாம்ப் ஒட்டணும்னு கேட்டு உயிரை வாங்கறார் சார்!"

— எல். கோபால கிருஷ்ணன்

"நீ நடிக்க ஆரம்பிச்சே மூணு மாசம்தானே ஆவுது; அதுக்குள்ள பிரஸ் மீட்டுக்கு ஏற்பாடு பண்ணச் சொல்றியே எதுக்கு?"

"நான் நடிக்க வந்து மூணு மாசம் ஆயிடுச்சு; என்னைப் பத்தி ஏன் இன்னும் கிசுகிசு எழுதலைனு கேட்கத்தான்!"

— சக்தி சரவணன்



"ஸார்,
எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. அப்புறமா discuss பண்ணலாம்."

"எனக்கு நாளைக்கு ஆபீஸ் இருக்கு. என்னால உங்களோட வர முடியாது. நீங்க போயிட்டு வாங்க."

இது போல நமக்குள்ள வேலைகள் பத்தியும், விசேஷங்களைப் பத்தியும் பேசறதுக்கு 'have'ங்கற வார்த்தையை use பண்ணலாம்.

❒ எனக்கு கொஞ்சம் முக்கியமான வேலையிருக்குங்கறதை I have some important workனு சொல்லுங்க.

❒ எனக்கு ஒரு அவசரமான வேலையிருக்குங்கறதை I have some urgent work னு சொல்லலாம்.

❒ எனக்கு நிறைய வேலை இருக்குங்கறதை I have a lot of workனு சொல்லலாம்.

❒ நாளைக்கு எனக்கு ஆபீஸ் இருக்கு. இதை I have office tomorrowனு சொல்லணும்.

❒ எனக்கு இன்னிக்கு பள்ளிக்கூடம் உண்டுங்கறதை I have school todayனு சொல்லலாம்.

❒ எனக்கு இன்னிக்கு O.T (overtime) இருக்குங்கறதை I have o.t todayனு சொல்லுங்க.

❒ இன்னிக்கு எனக்கு special class இருக்குன்னு சொல்லணும்னா I have a special class todayனு வீட்ல சொல்லிட்டுப் போங்க.

❒ எனக்கு சில பிரச்னைகள் உள்ளனங்கறதை 'I have some problem'sனு சொல்லுங்க.

வி. ராஜகோபாலன்

❒ எனக்கு ஒரு சந்தேகம்'னு சொல்லணும்னா 'I have a doubt'னு சொல்லுங்க.

சரி, எங்க வீட்ல நாளைக்கு ஒரு சின்ன function (விசேஷம்)னு எப்படி சொல்வீங்க?

"we have some guests at home" னா வீட்ல சில விருந்தாளிங்க வந்திருக்காங்கன்னு அர்த்தம்.

சரி, 'என்கிட்ட ரூ. 500/- இருக்கு'னு இங்கிலீஷ்ல சொல்ல நினைக்கிறீங்க.



இதை I have Rs. 500/-னு சொன்னால் போதும்.

இதுவரைக்கும் உங்ககிட்ட இருக்கறதைப் பத்தி சொன்னீங்க. உங்ககிட்ட இல்லாததை எப்படிச் சொல்வீங்க?

என்னது, எங்ககிட்ட இல்லாததா அப்படீன்னா... என்ன ஸார், குழப்பமா இருக்கேன்னு சொல்றீங்களா?

குழப்பமடையாதீங்க. உங்ககிட்ட பணம் ஏதுவும் இல்லைன்னு சொல்லணும்னா 'have' பக்கத்துல 'no'ங்கற வார்த்தையைச் சேர்த்து I have no moneyனு



ஆங்கிலமே, அருகில் வா!

சொல்லுங்க.

புதுசா வீடு கட்டியிருக்கீங்க. ஒருநாள் வந்து பாக்கணும்னு ஆசையாத்தான் இருக்கு. ஆனா பாருங்க I have no time, 'நேரமே இல்லை.'

ஸார்... ஸார்... ஒரு நிமிஷம், என்கிட்ட பணம் இல்லைங்கறதை I have no moneyனு சொல்லணும்னு சொல்றீங்க. ஆனா சில பேர் I don't have moneyனு சொல்றாங்களேன்னு உங்கள்ள சில பேர் கேப்பீங்க.

என்கிட்ட பணம் இல்லைங்கறதை have no moneyனு சொல்லலாம். இதையே I don't have moneyனும் சொல்லலாம்.

I have no timeனு சொல்லலாம். இதையே I don't have any timeனு கூடச் சொல்லலாம்.

எது ஈஸியா இருக்கோ அதை நீங்க use பண்ணலாம்.

இதேபோல எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லைங்கறதை I have no objection (ஐ ஹாவ் நோ அப்ஜக்ஷன்)னு சொல்லுங்க. இதையே 'I don't have any objection'னு கூடச் சொல்லலாம்.

எங்களது கம்பெனிக்கு வேறு எங்கும் கிளைகள் எதுவும் கிடையாதுங்கறதை 'We have no branches elsewhere'னு சில நிறுவனங்கள் விளம்பரம் செய்திருப்பதை கவனித்திருப்பீர்கள்.

ஆனா நம்ம விவேகானந்தா இன்ஸ்ட்யூட்டிற்கு தமிழ்நாட்டில் 30 கிளைகள் இருக்குங்க. Yes, we have 30 branches all over Tamilnadu.

மத்த விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.


அயல்நாடுகளிலிருந்து

"இருபத்தைந்து வருடங்களுக்கு முன், பெர்லின் நகருக்கு ஒருநாள் இரவு பதினோரு மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். எந்த ஓட்டலில் அறை இருக்கிறது என்று கேட்க வாய்ப்பில்லை; ஏர்போர்ட்டில் இருந்த ஓட்டல் கவுன்ட்டர்களைக் கூட மூடி விட்டார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு பெட்டிகள். ஒரு தோள் பை. டாக்ஸி ஒன்று கூட இல்லை. சிட்டி சென்டருக்கு வந்து ஏதாவது ஓர் ஓட்டலில் ரூம் கிடைக்குமா என்று தேட, பெட்டிகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடந்தேன். இரண்டு பெட்டிகளையும் ஒரே சமயத்தில் தூக்கிக் கொண்டு நடக்க முடியவில்லை. ஒரு பெட்டியைக் கொஞ்ச தூரம் தூக்கிக் கொண்டு போய் வைத்து விட்டு, அதில் ஒரு கண் வைத்தபடியே இன்னொரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய் வைப்பேன்! இப்படியே மூன்று, நான்கு ஓட்டல்களில் விசாரித்தும், எங்குமே இடம் இல்லை.

"அந்த நள்ளிரவில் திடீரென்று ஒரு நபர் 'மே ஐ ஹெல்ப் யூ?' என்று கேட்டார். ஓட்டல் அறை தேடுவதாகச் சொன்னேன். 'இடம் கிடைப்பது கஷ்டமாயிற்றே?' என்றார். ஒரு பெட்டியை அவரே எடுத்துக் கொண்டார். சற்றுத் தள்ளியிருந்த தமது கறுப்பு மெர்சிடஸ் பென்ஸ் காரில் வைத்து, என்னையும் ஏறிக் கொள்ளச் சொன்னார். ஒவ்வொரு ஓட்டலாய் விசாரித்து, கடைசியில் ஒரு பெரிய ஓட்டலில் ரூம் இருப்பதைத் தெரிந்து கொண்டு, என்னை அங்கே அறையில் விட்டு விட்டு, 'ஹேவ் எ நைஸ் டே!' என்று சொல்லி, தமது விஸிட்டிங் கார்டைக் கொடுத்தார். பார்த்தால் – கிழக்கு பெர்லின் நாட்டிலுள்ள ஜப்பானிய தூதரக உயர் அதிகாரி அவர். மினிஸ்டர் என்பார்கள். அந்த நள்ளிரவில் அவர் எனக்கு உதவியிருக்காவிட்டால் நான் தவித்துப் போயிருப்பேன். இதை நான் ஜப்பானுக்குப் போயிருந்த போது அவர்களிடம் சொன்னேன். 'ஆகா, எங்கள் நாட்டு அதிகாரி உங்களுக்கு உதவினாரா?' என்று சொல்லிச் சொல்லி சந்தோஷப்பட்டார்கள்."

— இதைச் சொன்னவர்

• உஸாகோஸில் (நமீபியா) விசுவநாதன்



என். விசுவநாதன் என்ற தொழிலதிபர். சமீபத்தில் நமீபியா போய் விட்டு வந்திருக்கிறார். மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சியாளராகச் சேர்ந்து, தமது உழைப்பாலும், திறமையாலும் இளம் வயதிலேயே ஜெர்மன் நாட்டு பிரபல நிறுவனம் BASF-ல் உயர்ந்த பதவியை வகித்த புதுக்கோட்டைக்காரர் இவர்.

ஜெர்மன் மொழியை வெகு சரளமாகப் பேசத் தெரிந்தவர்.

"இந்தியாவை விட, ஜெர்மனியின்



• காந்திசிலை (பீட்டர்ஸ்பர்க். தென் ஆப்பிரிகா)

ஆனந்தபுரம்!

ஒவ்வொரு நகரமும் என் உள்ளங்கை ரேகை போல் எனக்கு மிகவும் பரிச்சயம்!'' என்கிறார்.

"இந்த 45 ஆண்டுகளில் 55 நாடுகளுக்குப் போய் வந்திருக்கிறேன். கிட்டத்தட்ட 155 நகரங்களுக்குப் போயிருக்கிறேன்!'' என்கிறார்.

இப்படி, சமயம் கிடைத்தபோதெல்லாம் வெளிநாடுகளுக்குப் போய் வந்ததோடல்லாமல், அந்த நாட்டைப் பற்றி, மக்களைப் பற்றி, அவர்கள் வாழ்க்கை முறை, உணவு, பொருளாதாரம், அரசியல் என்று அத்தனை விவரங்களையும் எழுதி, சுவாரசியமாய்த் தொகுத்து 30 வால்யூம்களைப் புகைப்படங்களுடன் சேகரித்து வைத்திருக்கிறார்!

"திருவாரூருக்குப் பக்கத்தில் இருக்கிற கோவிலுண்ணி கிராமத்திலிருந்து புதுக்கோட்டைக்குக் குடிபெயர்ந்தவர்கள் என் முன்னோர்கள். வைதீசுவரன் கோயிலுக்கு, பரம்பரை பரம்பரையாக, என் மூத்த தலைமுறையினர் போய் வந்தது போலவே, நானும் போய் விட்டு வந்த பிறகுதான் தோன்றியது : நம் மூதாதையர் யார்? அவர்கள் எந்தக் கிராமத்தில் இருந்தார்கள்? அவர்கள் காலத்து அரசர் யார்? அப்போது பொருளாதாரம் எப்படி இருந்தது? எங்கள் ஆனந்தபுரம் கிராமம் அன்று எப்படி இருந்தது? என் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தா காலத்தில் குடும்பங்கள் எப்படி இருந்தன? பெண்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்? எந்தவிதமான கல்வி முறை? என்று தகவல்கள் கேட்டு எழுதி வைக்கத் தோன்றியது. மிகவும் வயதான உறவினர்களைத் தேடித் தேடிப் போனேன். ஒருவருக்கு 102 வயது!

'என்ன பண்ணப் போறே? எதுக்குக் கேட்கறே?' என்று கேட்டார்கள். 'எழுதப் போறேன்!' என்றேன். முதல் வால்யூம் என் முன்னோர்கள் பற்றியது. இளம் வயதில் விதவையான என் பாட்டி அன்றைய சமூகத்தில் எப்படிக் கொடுமைப்படுத்தப்பட்டார் என்பதைக் கூடக் குறித்திருக்கிறேன்... என் சந்ததியினர் என் கிராமத்தை, என் குடும்பத்தை அறிந்து கொள்ள வேண்டும். என் வேர் எங்கே இருந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இதை எல்லாம் தொகுத்து வைக்கிறேன்'' என்கிறார்.

சந்திப்பு : **சாருகேசி**

பா. ராகவன்

4

அலை உறங்கும் கடல்



அக்னி தீர்த்தக் கரையில் கடல் தன் நீலநிறம் மறைத்துப் பொன்னிறம் பூண்டிருந்தது. நுரைக் குமிழ் ஒவ்வொன்றிலும் சூரியனின் ஒரு சிறு துண்டு பொதிந்து, பொலிந்தது. மடி மோதும் கன்றுக்குட்டி போலக் கரையை வருடி வருடித் ததும்பி மீண்டது ஜலம்.

சூரியனின் கிரணங்கள் நிரம்பிப் பரவத் தொடங்கியிருந்த புலர் காலையில் அப்புசாமி தன் ஒயர் கூடையுடன் கரைக்கு வந்து சேர்ந்தார்.

எப்போதும் ராஜுவின் சங்குக் கடைக்கு நேரெதிரே மூன்றாவது படிக்கட்டில், கடலுக்கு முதுகு காட்டி அமர்வதுதான் அவர் வழக்கம். யாத்ரிகர்களின் வண்டி வரும்போது மாடுகளின் மேல் முட்டிக் கொள்ளாமல் எழுந்து ஓடிப் போய் மடக்குவதற்கு அதுவே சிறந்த இடம். தவிர படியின் காரை பெயர்ந்து மணற்பாங்கான சதுரமொன்றும் அங்கு உள்ளது. வேண்டுமோ, வேண்டாமோ, ஈரமணலைப் பிடித்து ஒரு சிறு கோபுரமும் லிங்கமும் பிள்ளையார் போன்றதொரு உருவமும் செய்து வைத்துத் துளி குங்குமம் இட்டால்தான் பெரும்பாலான யாத்திரிகர்களுக்கொரு திருப்தி பிறக்கிறது. குறிப்பாக ஓரிஸ்ஸாக்காரர்களுக்கு. நிலங்களை விற்றுப் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு வந்தேனும் பித்ருகாரியம் செய்யலாம் என்பது அவர்களது இயல்பாக இருக்கிறது.



குஜராத்திகள் சற்று வேறு மாதிரியான அணுகுமுறை உள்ளவர்கள். தம் பைஜாமாக்களைப் போலவே எதுவும் அவர்களுக்குப் பெரிதாக இருக்க வேண்டும்.

முந்தைய வாரம் அப்புசாமிக்கு ஒரு குஜராத்தி யாத்ரிகர் கிடைத்தார். எப்போதும் போலல்லாமல் இவன் பணக்காரனா, சுமாரான பணக்காரனா என்று கண்டுபிடிப்பதில் அவருக்குச் சிறு குழப்பம் உண்டானது. பணத்தின் களை அவன் முகத்தில் நிச்சயம் இருந்திருக்க வேண்டும். ஆனால் சுமார் பதினைந்து நாள் தாடி மீசையும் வாராத தலையும் பயணச் சலிப்பும் அதைச் சற்று மறைத்திருந்தன. கூடுதலாக, ஆடையில் ஏறியிருந்த காவிச் சாயம். கோதானம் செய்ய ஒப்புக் கொண்டவனிடம் முதலில் 'தோ ஹஜார் ருப்யே' என்று அப்புசாமி சொன்னார்.

குஜராத்திலெல்லாம் மாடு என்ன விலை விற்கிறதோ. அவன் மிகவும் சந்தேகப் பார்வையுடனே ஜிப்பாவி

லிருந்து பர்ஸை எடுத்து, பக்கத்தில் பயபக்தியுடன் நின்றிருந்த தன் மனைவியிடம் கொடுத்தான்.

அதன் அடர்த்தியை கவனித்த அப்புசாமி, தவறு செய்து விட்டதாக உணர்ந்து உடனே கோதானத்தின் பல வகைகளை அவனுக்கு விளக்கிக் கூற ஆரம்பித்தார். தென் தமிழ்க் கோடியில் உள்ள ஒரு சாஸ்திரிகள் தன் சொந்த மொழி பேசுவது கேட்ட அந்த குஜராத்தி வியப்புற்று நின்று கவனித்தான்.

மகராஜ் அவரை மன்னிக்க வேண்டும். இங்கே கோதானமென்பது பெரும்பாலும் ஒரு பாவனையாகச் செய்யப்படுவது. அதாவது, மாட்டுக்காரனிடம் இரண்டாயிரம் கொடுத்து விட்டு மாட்டை வாங்கிக் கோயிலுக்கு அர்ப்பணிப்பது போன்ற பாவனை. உண்மையில் மாடு விற்கப்படுவதில்லை. அர்ப்பணிப்பது எப்படி பாவனையாகிறதோ, அதே போலவே ஏற்பதுவுமாகிவிடக்கூடிய சாஸ்திர அபாயம் அதில் இல்லாமலில்லை. ஆனால் பாவம், ஏழைகள் வேறென்ன செய்ய முடியும்? பாவனையிலேயே அவர்கள் நம்பிக்கை கொண்டு விடுகிறார்கள். நம்பிக்கையின் வலிமையைப் பொறுத்துப் பலன் சித்திக்கிறது.

குஜராத்தி அவரைக் கை நீட்டித் தடுத்தான்.

“ஸுனோ, நான் நிஜமாகவே கோதானம் செய்ய விரும்புகிறேன். பாவனையாக அல்ல. நிஜமாகவே! விற்பனைக்கு இங்கு மாடு தருவார்களல்லவா?”

அப்புசாமி பளிரென்று முகம் மலர்ந்தார்.

“பைடியே” என்றவர் சுறுசுறுப்பாக எழுந்தார். திசைகளை நோக்கி, “சுப்பிரமணீ...” என்று குரல் கொடுத்தார்.

தமிழ்நாடு ஓட்டல் இருந்த திசையிலிருந்து ஒரு முகம் நின்று திரும்பிப் பார்த்தது. உடனே கால் சிகை தொட விரைந்து ஓடி வந்து மூச்சிறைக்க நின்றது.

“டேய், இவன் கோதானம் பண்றேங்கறான். யானையே கிடைச்சாலும் வாங்கி தானம் பண்ணத் தயாரா இருக்கான். நீ என்ன பண்றே...”

முடிப்பதற்குள் சுப்பிரமணி விரைந்தோடிப் போனான்.

அந்த குஜராத்தியின் மனைவி, ஃபிளாஸ்கிலிருந்து கொஞ்சம் காப்பி ஊற்றி அவனிடம் நீட்ட, ‘குடிக்கலாமல்லவா’ என்று அவன் அப்புசாமியிடம் கேட்டான்.

“தோஷமில்லே” என்று பொதுவாகச் சொன்னார் அப்புசாமி.

“தலைவருக்கு என்ன இருந்தாலும் இவ்வளவு பந்தா கூடாது.”
“ஏன்?”
“பிள்ளையை எல்.கே.ஜியிலே சேர்த்துவிட்டு போக்குவரத்திற்குப் பள்ளியில் ஹெலிகாப்டர் வசதி உண்டான்னு கேட்கிறாரே” - இரா. கணேசன்


காப்பியைக் குடித்துவிட்டு ஓர் உயர்ரகச் சுருட்டை எடுத்து - இம்முறை அனுமதி கேட்காமலேயே - பற்றவைத்துக் கொண்டான்.

ஆறடி தள்ளி அமர்ந்து ஒரு திருக்காட்டுப்பள்ளிக்காரனுக்கு பித்ரு தர்ப்பணம் செய்து வைத்துக் கொண்டிருந்த திலீப் சாஸ்திரிகள் திரும்பிப் பார்த்தான்.

வனவிருட்சங்கள் இன்பம் நிறைந்தவையாக இருக்கட்டும். சூரியன் இன்பம் தரட்டும். பசுக்கள் மதுரமான பாலை அளிக்கட்டும். ஹரித கோத்திரத்தினரான என் முன்னோருக்குத் தர்ப்பணம் செய்கிறேன் என்ற மந்திரத்தைச் சொல்லியபடி, “என்னவோய், சுதினமாச்சா இன்னிக்கு?” என்றான்.

அப்புசாமிக்கு அவனைப் பிடிக்காது, அவ்வளவாக. இளைஞன். துறுதுறுப்பானவன். மேலும் நல்ல வெள்ளைத் தோலும் வெண்கலக்குரலும் உள்ளவன். மந்திரங்களை மிக உரக்கத்தான் சொல்லுவான். உச்சரிப்பில் ‘ஷ’வும், ‘க்ஷ’வும் அத்தனை சுத்தமில்லாவிடினும் அந்த கம்பீரக் குரலால், அக்னிதீர்த்தத்துக்கு வருகிற அனைத்து யாத்ரிகர்களையும் கண்டியிழுத்து விடுபவன். இரண்டு மணி நேரம் உட்கார்ந்து விட்டு சந்தர்லால் கடையில் கணக்கெழுதப் போய் விடுவான். அதற்குள் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது எப்படியோ அவனால் சம்பாதித்து விட முடிகிறது.

தனக்குத்தான் பாழும் வயது, குரலை உயர்த்த விடாமல் மூச்சிறைக்கிறது. எத்தனைதான் அழுத்தித் தேய்த்தாலும் ஒழுகும் வியர்வையில் திருநீறு நின்று துலங்காமலாகி விடுகிறது. மிகுந்த உக்கிரம் மிகும் வேளையில் நீலுக் கிழவி சொல்லுவாள். தன் முகத்தில் நிரந்தரமானதொரு சவக்களை வந்து விட்டதாக. அது சவக்களை அல்ல; உழைத்த களைப்பும் உயிர்த்திருக்கும் சலிப்புந்தான் என்று தனக்குத்தானே சமாதானம் கூற முயன்றபடி நிலைக் கண்ணாடியின் முன் பல நிமிடங்கள் நின்று பார்ப்பார் அப்புசாமி. மந்திரம் சொல்லிப் பிழைப்பவனுக்குக் கூட முகலட்சணம் வேண்டியிருக்கிற காலம்.



மாட்டுக்காரப் பாண்டியனை சுப்பிரமணி அழைத்து வந்தபோது மணி ஏழரை ஆகி விட்டிருந்தது. கடல் சற்றே உள்ளிறங்கி, ஒரு குட்டையின் தோற்றத்துக்கு மாறிக் கொண்டிருந்தது.

"சீக்கிரம், சீக்கிரம்" என்றார் அப்புசாமி.

பாண்டியன் அலட்சியமாகத் தலை கோதியபடி பன்னிரண்டாயிரம் என்று விலை சொன்னான்.

மாடு பார்க்க வத்தலாயிருந்தது. இதையே தான் சென்ற வாரம் ஒரு வங்காளிக்கு விற்று, பின் தானம் செய்யப்பட்டது. அப்போது உடன் ஒரு கன்றுக்குட்டியும் இருந்ததால் இருபதாயிரம் பேசி, பதினைந்துக்கு வந்து முடிந்தது.

"கன்னு எங்கேடா?" என்று அப்புசாமி கேட்டார்.

"அந்தா மோகன் சாஸ்திரியாண்டகுது பாரு ஐரே!" என்றான் பாண்டியன்.

கன்றை மட்டும் யாரும் தானம் தருவதில்லை. ஆனால் கோ பூஜைக்குக் கன்று தோஷமில்லை.

அலட்டிக் கொள்ளாமல், பேரம் பேசாமல் பன்னிரண்டாயிரம் எடுத்துக் கொடுத்தான் குஜராத்தி.

உடனே அப்புசாமி சுறுசுறுப்பானார். மாடு மஞ்சள் பூசி, பொட்டிட்டுக் கொண்டது. குஜராத்தியைச் சுற்றி வரச் சொல்லாமல் மாட்டைத் திருப்பி அதன் பின்புறம் அவனெதிரே வருமாறு நிற்கச் செய்தார்.

ஆவேசம் வந்தவர் போல உரக்க மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்.

உன்னைப் பிடித்திருக்கக்கூடிய சர்ப்ப சாபம் நீங்கட்டும். தேவ சாபம் நீங்கட்டும். பிரும்ம சாபம், விஷ்ணு சாபம், சூர்ய சாபங்கள் நீங்கட்டும். ருத்ரனின் சாபமும் இஷ்ட தேவதையின் சாபமும் உண்டானால் அதுவும் நீங்கட்டும். புனித அம்சங்கள் தேகமெங்கும் நிரம்பிப் படர்ந்த பசுவை தானம் செய்வதன் மூலம் தெய்வ தோஷங்கள் விலகட்டும். இனிமை ததும்பும் மங்களம் சூழட்டும். ஓம் ஓம் ஓம்.

கோயிலுக்கு ஓட்டிச் செல்லப்பட்டு, கட்டப்பட்ட பசு, மாலை பாண்டியன் வீட்டுக்குத் திரும்பி விட்டது. பங்குகள் போக நிகரமாகக் கிடைத்த மூவாயிரம் ரூபாயில் ஐம்பதை மட்டும் வைத்துக் கொண்டு மீதியை காப்பி கொண்டு வந்த உமாவிடம் கொடுத்தார் அப்புசாமி. மாலை சந்நிதித் தெரு அபிராமி ஓட்டலில் ரவா ரோஸ்டும் பாம்பே அல்வாவும் சாப்பிட்டு விட்டுத் திருப்தியாக வீடு திரும்பினார்.

ஆனால் என்றும் இது போல வாய்ப்பதில்லை. பெரும்பாலும் மணலில் கிறுக்கிக் கொண்டே பொழுது ஓடுகிறது. வெறும் சங்கல்பத்துக்காக வருபவர்கள் கூட இளமையான சாஸ்திரிகளாகத் தேடுகிறார்கள். வெயிலுக்குக் குடைபிடித்து அமர்ந்திருப்போரை ஏனோ பித்ரு காரியம் செய்ய வரும் மக்கள் விரும்புவதில்லை. உயிருடன் உறவாகி விட்ட பொடி போடும் பழக்கமும் பலருக்குச் சகிக்க முடியாததாயிருக்கிறது. சரிகைக் கச்சமும், தளுக்கும், பூசி மெழுகிய புன்முறுவலும், யாத்ரிகர்களின் அவசரத்துக்கேற்ப சுக்லாம் பரதரத்துடனேயே முழு உபா கர்மாவையும் முடித்துக் கொள்ளும் சாலாக்கும் கண்டியிழுக்கும் அளவுக்குத் தன் பாச்சா பலிப்பதில்லை.

அப்புசாமிக்குக் கொஞ்சநாளாகவே தொழில் சலிப்பூட்டத் தொடங்கி விட்டிருந்தது. அதிகம் வேண்டாம். வசமாக ஐந்து பெரிய ஹோமங்கள் கிடைத்தால் போதும். ஒரு லட்சம். மூட்டை கட்டிக் கொண்டு ஒரு வருடம் ஓய்வாகப் போய் விடலாம். வட்டிக்கு விட்டு பிழைப்பைப் பார்த்துக் கொள்ள முடியும்.

தவிரவும் உமாவுக்குத் திருமணம் என்று யோசிக்க இன்னும் சில ஆண்டுகள் கடத்த முடியும். அதற்குள் உலகம் அழிந்தாலும் அழியலாம். தனக்கே விடிந்தாலும் விடியலாம்.

யோசனையைக் கலைத்தபடி எதிரே ஓர் உயரமான உருவம் நிற்கக் கண்டவர் "வாங்கோ" என்றார். பிறகு சற்றே மாற்றிக் கொண்டு, "உட்காருங்கோ" என்று இயல்புப்படி தரையைக் காட்டினார்.

அமர்ந்தவன், 'இங்கு என்னென்ன தோஷங்களுக்கு நிவர்த்தி செய்யலாம்?' என்று ஹிந்தியில் கேட்டான். "எல்லாத்துக்கும் நிவர்த்தி உண்டு. அதது தன்மைக்கேற்ப தட்சிணை" என்றார் அப்புசாமி. அவன் சற்று நேரம் மௌனமாகவே அமர்ந்திருந்தான்.

எண்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு கடல் டூர்!

ஓஷன் மெஜஸ்டி. இது ஒரு ஐந்து நட்சத்திர சொகுசுக் கப்பல். எட்டு அடுக்குகள் கொண்ட இந்தக் கப்பலில் உணவகங்கள், நூல் நிலையம், அழகு நிலையம், உடற்பயிற்சி ஜிம், சினிமா தியேட்டர், டிஸ்கோ கிளப், பார்கள், வரி ஏதுமின்றி பொருட்களை விற்கும் டியூட்டி ஃப்ரீ கடை, நீச்சல் குளம் என்று எல்லாம் இருக்கிறது.

இந்த சொகுசுக் கப்பலை ஆறு மாதங்களுக்கு இந்தியன் ஓஷன் குரூஸ்லைன் என்ற இந்தியக் கம்பெனி வாடகைக்கு எடுத்து, இந்துமாக்கடலில் உலவ விடப் போகிறது. இந்தியத் துறைமுகங்களிலிருந்து, ஸ்ரீலங்கா, மியன்மர், வளைகுடா நாடுகள், மாலத்தீவுகள், அந்தமான், லட்சத்தீவு, சிங்கப்பூர் என்று பல இடங்களுக்கும் கடல்வழி சுற்றுலா நடத்தப்படவுள்ளது.

இக்கப்பல் பயணிகள் வரும் புத்தாண்டை நடுக் கடலில் கொண்டாட திட்டமாம். இதற்கான கட்டணம் இரண்டு பேருக்கு எண்பதாயிரம் ரூபாய்!

– எம்.



"சொல்லுங்கோ. என்ன பண்ணணும்?" என்று அப்புசாமி கேட்டார்.

அப்போதும் பதில் சொல்லாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தவன், சட்டென்று, ''ப்ரும்மஹத்தி தோஷத்துக்கு?'' என்று கீழ்க் குரலில் கேட்டான். அப்புசாமி திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தார். அவன் உட்கார்ந்திருந்ததே நிற்பது போலிருந்தது. கொலை செய்யக்கூடிய ஆகிருதிதான் என்று எண்ணியவராக, கைகளைச் சேர்த்து மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, "இருக்கு. பண்ணலாம். ஹோமம் பண்ணணும். லட்சத்தெட்டு ஆவர்த்தனம் ஜபம் பண்ணணும். கோதானம், பூதானம், அன்ன தானம் எல்லாம் பண்ணணும்..."

''செய்து விடுங்கள்'' என்று அவன் சொன்னான். சொல்லும்போதே ஒரு கற்றை நோட்டை கணக்குப் பார்க்காமல் எடுத்து அவர் கையில் கொடுக்கவும் அக்னிதீர்த்தமே ஒருகணம் அமைதியாகித் திரும்பிப் பார்த்தது. அப்புசாமி பரபரப்பானார். ''ரெண்டு நாள் இருக்கலாமோல்லியோ?'' என்று கேட்டார். அவன் தலையாட்டினான். சட்டென்று எழுந்து, "வாங்கோ" என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். சுப்பிரமணி பின்னாலேயே ஓடி வர, "நீ மின்ன ஓடி அதிதி வரான்னு ஆத்துல போய்ச் சொல்லு" என்று உத்தரவிட்டார்.

மிகுந்த பரவசமும் படபடப்புமாக வழியிலேயே நான்கு சாஸ்திரிகளிடம் தகவல் சொல்லிவிட்டு ராஜ கோபுரத்தருகே வரும் போது கன்னத்தில் போட்டுக் கொண்டு வலப்புறமாகத் திரும்பி, போலீஸ் ஸ்டேஷன் தாண்டி இடப்பக்கம் நடக்க ஆரம்பித்தார். நீலுப் பாட்டி, வாசலிலேயே நின்றிருந்தாள். தகவல் சொல்லப் போன சுப்பிரமணியும் அருகே நிற்க, கிட்டத்தில் அந்த உயரமான மனிதனைப் பார்த்ததும் சந்நதம் வந்தவள் போலப் பாட்டி இரைந்தாள். "இவனை உள்ளே கூட்டிண்டு வந்தியோ, இங்க ஒரு கொலை விழும்! போடா வெளியே!"

அவள் நாசி துடித்துக் கொண்டிருந்தது. அவளது ஆவேசம் அச்சமூட்டுவதாயிருந்தது. அப்புசாமி ஒருகணம் தயங்கினார்.

(தொடரும்)



பாவம் பட்டினத்தார்!

சோழவள நாட்டின் தலைநகராக விளங்கிய கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டிணத்தில் (பூம்புகார்) பிறந்து, பின் இல்லறத்தைத் துறந்த பட்டினத்தார், தனது இறுதி நாட்களில் வாழ்ந்து மறைந்தது சென்னை திருவொற்றியூரில்தான். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி மறைந்த தலை சிறந்த தத்துவச் சித்தரான இவர், அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இவருக்கொரு கோவில் உள்ளது. ஆயிரம் ஆண்டு பழைமையானது இந்தக் கோவில்.



• சீனிவாசன்

உடனே, கல்லிலே கலைவண்ணம் மிளிர விண்ணை முட்டும் கோபுரம் கண்ணைக் கவருமோ என்று கற்பனை விரித்துக் கொண்டால் நமக்கு மிஞ்சுவது ஏமாற்றம்தான்.

காரணம், ஒரு சின்ன ரைஸ்மில் போல ஓடுவேயப்பட்ட கூரையோடு பரிதாபமாக நிற்கிறது இந்தக் கோயில். பட்டினத்தார் ஒரு சைவத் தொண்டர் என்பதால் இந்த கோவிலின் கருவறையில் லிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மற்றபடி பட்டினத்தாருக்குத் தனி சிற்பத்திருமேனி கூட இங்கே இல்லை.

இதைவிடப் பரிதாபம், இந்தக் கோவில் கருவறைகோபுரம் எட்டடி உயரத்தில் செட்டிநாட்டு சமாதிபாணியில் மிகப் பழைமையானதாக உள்ளது. சுண்ணாம்பும், செங்கல்லும் அரைத்து கட்டப்பட்ட கோவிலாகவே இத்தனை நூற்றாண்டுகளைக் கடந்து நின்று கொண்டிருக்கிறது.

இத்தனைக்கும் கடந்த 1987ஆம் ஆண்டு இந்து அறநிலையத் துறை தனது கட்டுப்பாட்டில் இந்தக் கோவிலை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் சுண்ணாம்பு கூட அடிக்கவில்லையாம்.

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பல பக்தர்கள், ஐயாயிரம், பத்தாயிரம் என்று தம் சொந்த வைப்பு நிதியைக் கோவிலுக்குக் காணிக்கை ஆக்கியுள்ளனர். அதில் வரும் வட்டியைக் கொண்டே இங்கு பூஜைகள் நடத்தப்படுகின்றன என்கிறார், கோவிலுக்கு அருகில் குடியிருக்கும் சீனிவாசன்.

"நான் சிறுவனாக இருக்கும்போது ஒவ்வொரு வருடமும் சீர்காழி கோவிந்தராஜன் வந்து பாடுவார். பத்து நாள் திருவிழா நடக்கும். பிறகு எல்லாம் போச்சு! திருவிழா நடந்து பல மாமாங்கம் ஆகிவிட்டது" என்றார்.

"**இ**ன்று மீனவ மக்கள், தங்கள் வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக்கவும், இந்தக் கோவில் பயன்படுகிறது. அதைவிடக் கொடுமை, மழைபெய்தால் கோவில் முழுக்க ஒழுகும். வெள்ளம் சூழ்ந்து விடும்.

"யாருக்கும், எதற்கும் பயப்படாமல் எதையும் உள்ளது உள்ளபடி விமர்சனம் செய்தவர் பட்டினத்தார். அதனால்தானோ என்னவோ இந்த அரசுக்கும், சமுதாயத்திற்கும் பட்டினத்தார் மீது கோபம் இன்னும் போகவில்லை போலிருக்கிறது" என்கிறார் சீனிவாசன்.

- ஜெயன்

படங்கள்: **வெங்கடேஷ்**



• பட்டினத்தார் கோயில்

முதலைக்கு நாக்கு



சென்னை நகரில் க்விஸ் நிகழ்ச்சியில் பங்கேற்க ஆர்வம் கொண்டவர்கள் இத்தனை பேரா? என்று பிரமிப்பு ஏற்பட்டது. சுமார் எண்ணூறு அணிகள். ஒரு அணிக்கு மூன்று பேர். தகுதிச் சுற்றில் நாற்பது கேள்விகள் கேட்டு, விடை எழுதச் சொல்லி எட்டு அணிகளை இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்தார்கள். க்விஸ் ஏற்பாடு: லேண்ட் மார்க் புக் ஷாப்.

இந் நிகழ்ச்சியைப் படு சுவாரசியமாக நடத்தியவர் இந்தியாவின் மிகப் பிரபலமான க்விஸ் மாஸ்டர்களுள் ஒருவரான டெரிக் ஓ ப்ரையன். இவரது 'போன்விடா க்விஸ் காண்டஸ்ட்' வெகு பிரசித்தம். இப்போது டிஸ்கவரி சானல் உட்பட பல டி.வி. சானல்களிலும், வருகிறார். பல்வேறு அமைப்புகளுடைய அழைப்பின் பேரில் பல்வேறு ஊர்களில் க்விஸ் நடத்துகிறார்.

டெரிக் ஓ ப்ரயனை அவர் தங்கியிருந்த ஓட்டலில் சந்தித்தோம். முப்பத்தெட்டு வயது பெங்காலி. இலேசான தாடி, மண்டை முழுக்க புத்திசாலித்தனம். நகைச்சுவை உணர்வு.

"ஒரு வெற்றிகரமான க்விஸ் நிகழ்ச்சியின் பார்மூலா 51 சதவித புத்திசாலித்தனம்; 49 சதவீதம் நடத்துகிற விதம்'' என்கிறார்.

பள்ளிக்கூட நாட்களிலிருந்தே க்விஸில் ஏக ஆர்வம். காரணம், இவர் அப்பாவும் க்விஸ் மாஸ்டர் தான். "பள்ளியில் க்விஸ் நிகழ்ச்சிகளில் பங்கேற்று, சலித்துப்போன நான், க்விஸ் மாஸ்டர் ஆக விரும்பினேன். நானும், என் நண்பன் ஒருவனுமாக அவனுடைய அப்பாவிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க, அவர் கொஞ்சம்கூட யோசிக்காமல், 'அவ்வளவுதானே! உங்கள் பள்ளியிலேயே ஒரு க்விஸ் போட்டிக்கு ஏற்பாடு செய்யுங்கள். செலவு முழுவதையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் இரண்டு பேரும்தான் க்விஸ் மாஸ்டர்ஸ்' என்றார். எங்கள் இரண்டு பேருக்கும் ஏக குஷி! என்று பழைய நினைவுகளில் ஆழ்ந்து போகிறார் டெரிக்.

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, பத்திரிகையாளராக ஒரு வருடம் வேலை பார்த்தேன். அப்புறம் எட்டு வருடங்களுக்கு விளம்பர நிறுவனம் ஒன்றில் பணி. அவ்வப்போது க்விஸ் மாஸ்டராகவும் இயங்கினேன்.

''ஒரு கட்டத்தில் என் வேலையை ராஜினாமா செய்துவிட்டு 'இனிநான் முழு நேர க்விஸ் மாஸ்டர்!' என்றபோது என் நண்பர்கள் 'முட்டாள்தனமான முடிவு' என்றார்கள். ஆனால் நான் மனம் தளரவில்லை. உடல் நலம் சம்பந்தப்பட்ட க்விஸ் ஒன்றை துர்தர்ஷனுக்காக நடத்த வாய்ப்பு வந்தது. வேண்டாம் என்று சொல்லி விட்டேன். பாராளுமன்றம் பற்றி ஒரு க்விஸ் நடத்த அணுகினார்கள். மறுத்து விட்டேன். பளீரென்று, அனைவர் கவனமும் கவரும்படியான நிகழ்ச்சி மூலம் அறிமுகமாக வேண்டும். அதற்கு எவ்வளவு காலம் ஆனாலும் காத்திருப்பது என்பதில் உறுதியாக இருந்தேன். பாடா - நார்த் ஸ்டார் க்விஸ் வாய்ப்பு வந்து கதவைத் தட்டியது. ஒப்புக் கொண்டேன். அப்புறம் போன்விடா க்விஸ். பிறகு கிடுகிடு முன்னேற்றம்தான்!

"க்விஸ் நிகழ்ச்சிகளுக்காக உங்களை எப்படித் தயார் படுத்திக் கொள்ளுவீர்கள்?''

''வருடம் முழுக்க உழைக்கிறேன். எங்கே போனாலும், ஏதாவது சுவையான தகவல் கிடைக்குமா? கண்ணில் படுமா? என்று பார்த்துக்கொண்டே இருப்பேன்.

தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு தேவைப்பட்டபோது, பயன் படுத்திக் கொள்வேன். உதாரணமாக, என் குழந்தையுடன் கிண்டி பாம்புப் பூங்காவுக்கு போயிருந்தேன். சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தபோது அப்பப்பா! பாம்புகள் பற்றி எத்தனை வகையான தகவல்கள்! முக்கியமான வற்றைக் குறித்துக்கொண்டே, முதலைகள் இருக்கும் இடம் வரை வந்தேன். திறந் திருந்த முதலை வாயைப் பார்த்துவிட்டு என் பெண் கேட்டாள். 'அப்பா! முத லைக்கு நாக்கு கிடையாதா? நான் உடனே கவனித்தேன். முதலையின் வாய்க்குள் நாக்கு இல்லை. அப்போதுதான் முத லைக்கு நாக்கு இல்லை என்பதே எனக் குத் தெரிந்தது. இதை, என் சைக்ளோபீடி யாவில் சரி பார்த்துக் கொண்டபின் தக்க சமயத்தில் கேள்வியாக மாற்றிப் பயன் படுத்திக் கொள்ளுவேன்'

புரோகிராம் நடத்த துபாய் சென்று வருவேன். பல வருடங்களாக இது தொடர்கிறது. இந்தத் தடவை போயிருந்த போது, நிகழ்ச்சி நடந்த அரங்கில் என் னைச் சந்தித்த ஒரு துபாய் போலீஸ்காரர், உடைந்த ஆங்கிலத்தில் தாடி வைத்த இளைஞனே! நீ பாட்டுப் பாடுவதில்லை! டான்ஸ் ஆடுவதில்லை, கவர்ச்சி டிரஸ் இல்லை! ஆனாலும் இத்தனை ஜனங் களையும் மூணு மணி நேரத்துக்குக் கட்டிப் போட்டு விடுகிறாயே! என்னத்தான் செய்கிறாய் நீ?' என்று கேட்டார்!''

– சிரித்தபடி சொன்ன ப்ரையனிடம் கேட்டோம். ''உங்கள் வெற்றியின் ரகசியம்தான் என்ன?''

உண்டா?



பேட்டியின் இடையே, அங்கு வந்த ஒரு பாட்டி, ''டெரிக்! நான் உன் பரம ரசிகை. வயசு எழுபத்தெட்டானாலும், உன் புரோகிராம் என்றால், குழந்தை போல, டீ.வி முன் உட்கார்ந்து விடு வேன்'' என்று உச்சி மோந்து விட்டுப் போனார்.

''இது போல ஏகப்பட்ட பாராட்டுகள்! நான் வருடம் மூணு தடவை க்விஸ்

''கடவுளின் அருள், பெற்றோரின் பரிபூரணமான ஆசி, கடுமையான உழைப்பு அப்புறம் கொஞ்சம் அதிர்ஷ் டம்...''

விரைவில் தமிழ் மற்றும் வங்காள மொழியில் க்விஸ் நடத்தும் முயற்சியில் இறங்கப் போகிறார் ப்ரையன்.

— மௌலி

படம்: யோகா



போட்டிக் கதை–1

"என்ன வெயிலு; பூமிக்கடியில யாரோ விறகு வச்சு எரிக்கற மாதிரி இந்த சூடு சுடுது..." தனக்குத் தானே சொல்லிக்கொண்டு நடையை எட்டிப் போட்டவாறே புங்கமரத்திட்டை நோக்கி வேகமாக நடந்தார் வாங்கிலி.

ஏற்கெனவே புங்க மரத்திட்டில் பத்து, பதினைந்து பேர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த சித்திரை மாதத்து வெயிலுக்குப் புங்க மர நிழலில் தூங்குவ்தற்கு இடம் கிடைப்பது, சொர்க்கத்தில் இடம் கிடைப்பதற்குச் சமம்.

மிச்சமிருந்த ஒரு சிறிய இடத்தில் வாங்கிலி அமர்ந்தவாறே உடலிலிருந்து வழியும் வியர்வையை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார். நடந்த வேகம் சற்றே மூச்சு வாங்கியது.

சேதுவின் டி.வி.எஸ் 50 புங்க மரத் திட்டை நெருங்கியதும், சரியாக சொல்லி வைத்தாற்போல் ரிசர்வ்வில் விழுந்தது.

"என்ன மாப்ள, உங்க வண்டிக்குக்கூட புங்க மர நிழல தாண்டி போறதுக்கு மனசில்லப் போல... எங்க, டவுனுக்குப் போயிட்டு வர்றீங்க போலிருக்கு..."

"ஆமாம் மாமா..." பேசிக்கொண்டே சேதுவும் வந்து திட்டில் அமர்ந்தான்.

"சாக்குப்பை வச்சிருக்கிறத பார்த்தா... தேங்கா கொண்டு போனாப்ல தெரியுது..."

"ஆமாம் மாமா."

"தேங்கா இப்ப எப்படி, ரொம்ப சம்பல்தானே...?"

"அதையேன் கேக்கறீங்க, காய் ஒரு ரூபாய்க்குக்கூட கேக்கறதுக்கு நாதியில்ல, அதுக்கு மேல கேட்டா இந்த காய்க்கு இதே அதிகம், கொடுத்தாக் கொடுங்க. இல்லாட்டி வேற பக்கம் வாங்கிக்கிறேன்னு சொல்றாங்க..."

"அவங்கள சொல்லியும் தப்பில்ல மாப்ள, முன்ன காய் எவ்வளவு பெரிசா இருந்தது. இப்பதான் நோய் விழுந்து சொறி பிடிச்ச மாதிரி, நம்ப ஏரியா காயெல்லாம் சிறுத்துப் போச்சே..."

"மனுசனுக்குத்தான் புதுசு, புதுசா வியாதி வருதுன்னு பார்த்தா, இப்ப மரத்துக்குக்கூட வர ஆரம்பிச்சிருச்சு...அத விடுங்க மாப்ளே...!"

"அமராவதிய பொண்ணுகேட்டுப் போனீங்களே, என்னாச்சு மாப்ள...?"

"எனக்குக் கொடுக்கலைன்னு சொல்லிட்டாங்க... நான் விவசாயம் பார்க்கறது அவங்களுக்குப் பிடிக்கலையாம்."

"நானே உங்கக்கிட்ட இதைப்பத்திக் கேக்கணும்ன்னு நினைச்சேன். ஏன் மாப்ள நீங்க படிச்ச படிப்புக்கு, ஒரு நல்ல தொழிலா பாத்து போகலாமில்ல... அத விட்டுட்டு விவசாயம்தான் பார்ப்பேன்னு, இந்தக் கிராமத்தில உக்காந்துக்கிட்டு ஏன் அவஸ்த

மண்வாசம்

படறீங்க...?''

"ஏன் மாமா விவசாயம் ஒரு தொழில் இல்லையா...? எம்.எஸ்.சி படிச்சா விவசாயம் பார்க்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா...?''

''அப்படியில்ல மாப்ள... நீங்களும் கஷ்டப்பட்டு,

இராம. மணிவேல்

இந்த வருஷம் அஞ்சு ஏக்ரா வயலடிச்சு நாத்து நட்டீங்க... பூட்ட வாங்கற சமயம் பாத்து தண்ணி பத்தாம பாதி காய்ஞ்சு போச்சு... மீதி இருக்கறது போட்ட



முதலுக்கே தேறாது போல...''

''அது என்னோட தப்பு. இந்த வருஷம் தண்ணீர்ப் பஞ்சம் வரும்னு முதல்ல சொன்னாங்க. அதைக் கேக்காம நான்தான் போன வருஷம் மாதிரியே, இந்த வருஷமும் செஞ்சு, மாட்டிக்கிட்டேன்.''

''இந்த வருசத்த விடுங்க மாப்ள... போன வருசம் என்ன மிஞ்சுச்சு...? நம்ம முனுசாமி மவனப் பாருங்க உங்களவிடக் குறைஞ்ச படிப்புதான். ஏதோ ஏஜென்ஸி எடுத்து, இன்னைக்குக் கை நெறைய வருமானம் வருது. கார்கூட வாங்கிட்டான். நீங்க என்னடான்னா உங்க அப்பா வச்சு ஓட்டிக்கிட்டு இருந்த காரையும், அவங்க செத்த பிறகு வித்திட்டீங்க...''

அவர் சொல்வதிலும் ஓரளவு நியாயம் இருக்கத்தான் செய்தது. இந்த நான்கு, ஐந்து வருடங்களாய், விவசாயம் அவ்வளவாக ஒன்றும் சரியில்லைதான். டீசல், உரம், மருந்து, ஆள்கூலி, விதைகளின் விலை ஏறின அளவுக்கு, விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை ஏறவில்லைதான். இலாப, நஷ்டம் கருதி விவசாயம் செய்த காலம் போய், இன்றைக்கு ஆத்ம திருப்திக்காக விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது.

''பத்து வருஷத்துக்கு முன்னாடி அமராவதியோட அப்பா சண்முகம் என்ன நிலைமையில இருந்தார்னு தெரியுமில்ல... இன்னைக்குச் செங்கல் சூளை வச்சு பெரிய ஆளாயிட்டான். உங்களோட விவசாயமும் வசதியும் கம்மிதான். இன்னைக்கு விவசாய சங்கத் தலைவரு, பேங்க்குல தலைவரு, உங்கப்பா முன்னாடி கை கட்டிக்கிட்டு நின்னவனெல்லாம் இன்னைக்கு உங்களுக்குப் பொண்ணு தர மாட்டேன்ங்கறான்... உங்க அழகுக்கும், குணத்துக்கும் நிச்சயமா இதவிட நல்ல பொண்ணு கிடைக்கும். ஏன் மாப்ள... உங்களுக்கும், அமராவதிக்கும் ஏதோ காதல், கீதல்னு சொல்றாங்களே நெசமா...?''

''அப்படி ஒண்ணும் இல்ல மாமா... சின்ன வயசிலேருந்து தெரிஞ்ச பொண்ணாச் சேன்னுதான் கேட்டேன். சரி நேரமாச்சு நான் வரட்டா மாமா...''

''எப்படிப் போறீங்க?''

''கோயில் வழியாத்தான்...''

''அப்படியே என்னையும் இறக்கி விட்டுருங்க...''

கோயில் முன்புறம் நின்ற ஒலிபெருக்கி கட்டிய காரில் ஏதோ பாட்டு பாடிக் கொண்டிருந்தது. நாலைந்து பேர் சுற்றி நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

''என்ன மாப்ள காரு நிக்கிது... என்ன விசயம்?''

''தெரியலயே... மாமா...!''

யாரோ இவர்களைக் கை தட்டி அழைத்தனர்.

இவர்கள் காரை நெருங்கவும், ஒலிபெருக்கியில் பாட்டு நின்று, அமராவதியின் தந்தை சண்முகம் பேசுவதற்கும் சரியாக இருந்தது.

''காலை முதல் மாலை வரை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, வயலில் அயராமல் உழைக்கும் விவசாய பெருங்குடி மக்களே... வருகிற பத்தாம் தேதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணியளவில், நம் உழைப்புக்கு ஏற்ற ஊதியமாய், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் தருமாறு கோரி... சர்க்கரை ஆலை முன் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற இருப்பதால், தாங்கள் அனைவரும் போராட்டத்தைச் சிறப்பித்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

யார் யாரையோ தாக்கிப் பேசினார். முத்தாய்ப்பாக விவசாயிதான் இந்த நாட்டின் முதல் குடிமகன் என்றார். இந்த நாட்டின் முதல் குடிமகனுக்கு அவரது மகளைத் தர மறுத்ததைத் திருப்பிக் கேட்க வேண்டும் போல் தோன்றியது சேதுவுக்கு.

அதற்குள் சேதுவும், வாங்கிலியும் அருகில் நிற்பதைப் பார்த்துவிட்டு மைக்கை அணைத்தார்.

''சேது கண்டிப்பா போராட்டத்திற்கு வந்திடணும்.''

சேது அமராவதியைப் பெண் கேட்டுப்

''பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்''ங்கற பழமொழியைப் பற்றி என்ன நினைக்கிறே?''

''பசியின் கொடுமையை விளக்கும் அருமையான பழமொழி. எதுக்குக் கேக்கறே?''

''பர்மிஷன் இல்லாம நீ கொண்டு வந்த டிபனைச் சாப்பிட்டுட்டேன்!''

— தெ. சுந்தரமகாலிங்கம்



போவதற்கு முன்பு, சண்முகம் சேதுவை எங்கு பார்த்தாலும், மாப்பிள்ளை என்று தான் அழைப்பார். சேதுவும் மாமா என்று தான் கூப்பிடுவான். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இருவரும் எவ்வித உறவு முறையும் இல்லாமல் வாங்க, போங்க என்று அழைப்பது வழக்கமாகிவிட்டது.

வானம் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. மழை வரும் போல் தோன்றியது. சேது கிணற்று விளிம்பில் நின்று எட்டிப் பார்த்தான்.

தண்ணீர் கொஞ்சமாகத்தான் கிடந்தது. மழைக்காலத்தில் அமுத சுரபி போல் நிரம்பி வழியும் கிணற்றில், இப்பொழுது தண்ணீரைத் தேட வேண்டியிருந்தது. கனத்த மழை ஒன்று பெய்தால் நன்றாக இருக்கும்.

வறட்சி இப்பொழுது புற்களின், நுனிகளைக்கூட, ஊசியின் முனைகளைப் போல், சாணை பிடித்து வைத்திருக்கிறது.

கரும்புத் தோட்டம் வந்ததும் சேது நின்று தோட்டத்தின் சனி முனையைப் பார்த்தான். அந்த இடத்தில் மட்டும் கரும்புப் பயிர், மற்ற எல்லா இடங்களையும்விட, ஒருவித செழிப்புடன் இருந்தது. சேதுவின் அப்பா இறந்தபொழுது, அவரின் விருப்பப்படி அவரை அங்குதான் புதைத்தது. சேதுவுக்கு இலேசாகக் கண்களில் நீர் துளித்தது.

அதற்கு மேல் நடக்க சேதுவுக்கு விருப்பம் இல்லை.

அப்பாதான் அடிக்கடி சொல்வார் "இந்த மண்ணு நமக்கு ஆத்தா மாதிரி சேது, ஆத்தாள் நாம பத்திரமா கவனிச்சுக்கிட்டா தான் அவ நம்மள பத்திரமா பார்த்துக்குவா... அத விட்டுட்டு பாவிக ஏரியில இருக்கற மரத்தையெல்லாம், திருட்டுத்தனமா வெட்டி வித்துட்டாங்க சில பெரிய மனுசங்க... ஒரு காலத்தில் சோலையா இருந்த ஏரி இப்ப பொட்டல் காடா கிடக்கு... மண்ணுக்குத் துரோகம் செஞ்சா, அது மனுசனுக்கு நிச்சயம் திருப்பிச் செய்யும்..." – அந்தத் துரோகம் இதுதானா...?

அம்மன் கோவிலில் மணியடிக்கும் ஓசை கேட்டது. இன்றைக்கு வெள்ளிக்கிழமை, இது அமராவதி கோவிலுக்கு வரும் நேரம். வந்ததும் கண்களால் துழாவுவாள். துழாவி விட்டுப் போகட்டும்.

வாங்கிலி மாமாவிடம், தனக்கும், அமராவதிக்கும் காதல் இல்லையென்று பொய் சொல்லியது நினைவுக்கு வந்தது. இனி அமராவதியைப் பார்க்கக் கூடாது. பேசக் கூடாது. யாருக்கும் தெரியாமல், இதற்காக நடு இரவில் தலையணையில் முகம் புதைந்து அழுவான்.



"'ஏட்டய்யா, ஏன் அவனை இப்படி அடிக்கிறீங்க...?"

"'காவலர் குடியிருப்பு'ங்கறதுக்குப் பதிலா 'காதலர் குடியிருப்பு'ன்னு போர்டு எழுதிக் கொடுத்திருக்கான்!"

— கே.என். பாலகிருஷ்ணன்

சினிமாவில் வருவதைப் போல அனைவரும் தூங்கிப் போன பின்பு, நடு இரவில் வீட்டை விட்டு ஓடி வரும் தைரியம் அவளுக்கில்லை. அவளைக் கூட்டிக் கொண்டு ஓடும் அளவுக்குத் துணிவும் தனக்கில்லை.

அதற்குள் மேக மூட்டமாய் இருந்த வானத்திலிருந்து, ஓரிரு மழைத்துளிகள் சேதுவின் நெற்றிப் பொட்டிலும், உடம்பிலும் விழுந்தன. சேது அண்ணாந்து வானத்தைப் பார்த்தான். கொழுத்த கருத்த மேகம் ஒன்று, தென்திசை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அதை யாராவது இங்கேயே பிடித்து இழுத்து நிறுத்தினால் தேவலாம் என்று தோன்றியது.

களத்து மேட்டில் காலையில் உளுந்து காய வைத்தது ஞாபகம் வந்தது. வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, களத்துமேடு நோக்கி வேகமாக ஓடினான் சேது.

அவசர அவசரமாக உளுந்து குவித்ததில் மூச்சு வாங்கியது. உடலெங்கும் வியர்வைத் துளிகள் பூத்து வழிந்தன.

பக்கத்தில் எங்கோ மழை பெய்து கொண்டிருந்ததில், அந்தப் பகுதி முழுவதும் மண்வாசனை நிரம்பி இருந்தது. சேது ஒருமுறை ஆழமாய் மூச்சு இழுத்து விட்டான். அவனது மூச்சுக்கூடு முழுவதும் மண்வாசனை நிரம்ப ஆரம்பித்தது.

"காலை முதல் மாலை வரை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த வயலில் அயராமல் உழைக்கும் விவசாய பெருங்குடி மக்களே..." தூரத்தில் எங்கோ ஒலிபெருக்கியிலிருந்து காற்று வாக்கில் வார்த்தைகள் கசிந்துகொண்டிருந்தன – சண்முகத்தின் குரலில்! ●

ஸ்ரீலங்காவின் திருமதி 'B'

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவை 'ஜெ' என்பதுபோல இலங்கையில் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயகவை திருமதி 'பி' என்றுதான் அழைப்பார்கள். எண்பத்து நாலு வயது பெண்மணியான இவர் ஜனாதிபதி பதவியிலிருந்து சமீபத்தில் ராஜினாமா செய்தார். உடல்நிலை காரணமாக அரசியலிலிருந்தும் ஓய்வு பெற்று விட்டார்.

அடுப்பங்கரையிலிருந்து, அரசியலுக்கு வந்தவர் இவர். 1959ல் கணவர் சாலமன் வெஸ்ட் ரித்வே டயஸ் பண்டார நாயகவின் படுகொலையை அடுத்து அதிரடியாக அரசியலில் நுழைந்து, அடுத்த ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில், அனுதாப அலையில் அமோக வெற்றி பெற்று பிரதமரானவர். உலகின் முதல் பெண் பிரதமர் என்று உலக சரித்திரத்தில் இடம் பிடித்தவர். மூன்று தடவை பிரதமரானதும் சரித்திர சாதனைதான்.



• இளமையில் திருமதி பண்டார நாயக

குழந்தைப் பருவத்தில் வயதுக்கு மீறின புத்திசாலித்தனத்துடன் விளங்கினாள் ஸ்ரீமாவோ. தினமும் ஆயாவுடன் மாட்டு வண்டியில் பக்கத்து ஊரிலிருந்த பள்ளிக்குச் சென்று வருவாள். வி.ஐ.பி. வீட்டுக் குழந்தை என்பதால், வண்டியில் போகும் ஸ்ரீமாவோவுக்கு, வழி நெடுக ஏகப்பட்ட 'கும்பிடு'கள் கிடைக்கும்.

ஒரு நாள், பள்ளிக்கூடம் செல்கிறபோது மாட்டு வண்டியின் அச்சுமுறிந்து, குடை சாய்ந்து விட்டது. ஆயா அலறிக் கொண்டு விழ, ஸ்ரீமாவோ, தரையிலிருந்து எழுந்து நின்று மண்ணைத் தட்டிக் கொண்டு, 'பள்ளிக்கு லேட்டாகிறது. போகலாமா?' என்று கேட்டாள்.

ஸ்ரீமாவோவின் அம்மா ஒரு ஆயுர்வேத வைத்தியர். அவரிடம் வரும் நோயாளிகளின் காயங்களைச் சுத்தம் செய்து கட்டுப் போடுவது, மருந்துகள் அரைத்துத் தருவது, நோயாளிகளுக்குத் தண்ணீர், உணவு தருவது, என்று பலவித பணிகளைப் பொறுமையுடன் செய்வாள் ஸ்ரீமாவோ. சில சமயம், அம்மா தரும் மருந்துகளை, நோயாளிகளின் வீடு தேடிப்போய், கொடுத்துவிட்டு வருவாள்.

ஒரு தடவை, அம்மாவும், அப்பாவும் வெளியூர் போயிருந்தபோது வீட்டின் அவுட் ஹவுஸில் திடீரென்று ஒரு தீவிபத்து. பணியாட்கள் செய்வதறியாமல் திகைத்து நிற்க, சிறுமி ஸ்ரீமாவோ, கிடுகிடுவென்று பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து தீயணைப்பதில் இறங்கினாள். வேலையாட்களையும் அப்படியே செய்யச் சொன்னாள். தீ அணைந்தது. வீடு திரும்பிய பெற்றோர்க்கு மகளின் சமயோஜிதம் குறித்து ஒரே சந்தோஷம்.

உயர்நிலைப் பள்ளியில் இசை நிகழ்ச்சி நடந்தபோது, தான் ஒருத்தியாகவே அரங்கில் ஐந்நூறு நாற்காலிகளைப் போட்டு, இதர ஏற்பாடுகளையும் செய்து, பள்ளி ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றவர் ஸ்ரீமாவோ. அதுமட்டுமில்லை, பள்ளிக் கூடத்தில் படிப்பு, பாட்டு, நடனம், இசை என அனைத்திலும் இவர்தான் நெம்பர் ஒன்!

தொகுப்பு : **கௌதம்**

கை கொடுக்கும் கோபால்!



கற்பனை: மாதுரி

நடக்கும் என்பார் நடக்கும்!

ஆகஸ்ட் 23 முதல் 29 வரை

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்களோட திறமை அதிகரிக்கும். பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. எதிர்ப்புகள் இருக்காது. வீட்ல விசேஷத்துக்கு ஏற்பாடு நடக்கலாம். விஞ்ஞானம், கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம். ஜாலியா சுத்தறதுக்கு வாய்ப்பிருக்கு. பேச்சில் நிதானம் அவசியம். சின்னச் சின்ன பிரச்னைகள் வந்து இம்சை பண்ணலாம். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வர வாய்ப்பிருக்கு. வீட்ல பெரியவங்களோட உடல்நலத்துல கவனம் வையுங்க. வீண் அலைச்சலைத் தவிர்த்துடுங்க.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

எந்தக் காரியத்தைப் பண்ணினாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசிச்சுப் பண்ணுங்க. அரசியல்வாதிகள் வளர்ச்சி காண்பாங்க. அரசாங்கத்துல வேலைப் பாக்கறவங்களோட எதிர்பார்ப்பு நிறைவேறும். வீடு மனை வாங்கறதுக்கு வாய்ப்பு இருக்கு. வியாபாரிகள் எச்சரிக்கையா செயல்படணும். அகல கால் வைக்க வேண்டாம். புது முயற்சிகளைத் தள்ளிப் போடுங்க. சாப்பாடு விஷயத்துலயும் கவனமா இருங்க. உடல் உபாதை வர வாய்ப்பிருக்கு.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்க திறமை வெளிப்படற நேரம் இது. ஓவியம், எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஓரளவு பலன் உண்டு. வீட்ல வீண் வம்பு சண்டை வர வாய்ப்பிருக்கு. மௌனம் காப்பது நல்லது. குடும்பத்துல செலவு எகிறும். வெளியூர் பயணம் போனா எச்சரிக்கை அவசியம். புதுசா வர்றவங்ககிட்ட பழகும்போது கவனமா பேசுங்க. கொடுக்கல், வாங்கலில் ஜாக்கிரதையா இருங்க.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரம் நீங்க 'பளிச்'சுனு தெரிவீங்க. பணப் பிரச்னை இல்லை. பேச்சில இனிமை அதிகரிக்கும். பெரியவங்க உங்களுக்கு உதவ முன்வருவாங்க. பெண்கள் தம் நிலை உயரப் பெறுவாங்க. உடல் நலன்ல கவனம் தேவை. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. வெளியூர் பயணம் இப்ப போறதா இருந்தா தள்ளிப் போட்டுடுங்க. சிலருக்குப் புகழ் பாராட்டுக் கூடும். எதுலயும் அவசரம் வேண்டாம்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

இந்த வாரம் உங்களுக்குச் சுமாரான வாரம். தடைகள், இடையூறுகள் அடிக்கடி இருக்கும். சிலருக்கு எதிர்பாராத டிரான்ஸ்பர் வரலாம். யார்ட்டயும் வெளிப்படையா பேச வேண்டாம். செலவுகள் அதிகரிக்கும். மனசுல ஏதாவது குழப்பம் இருந்துட்டே இருக்கும். கணவன் மனைவிக்குள்ள பிரச்னை வர வாய்ப்பிருக்கு. விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. வார பின் பகுதியில சிலருக்குப் புதிய பதவி பொறுப்பு வரலாம். வியாபாரிகள் அகல கால் வைக்க வேண்டாம்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் நீங்க எந்தக் காரியத்தில் இறங்கினாலும் வெற்றிதான். திறமையா முடிப்பீங்க. அரசு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் ஏற்படும். எதிரிகள் ஓடு

வாங்க. சிலருக்குப் புதிய பதவி பொறுப்பு வர வாய்ப்பிருக்கு. குடும்பத்துல அமைதி கூடும். எழுத்து, பத்திரிகை துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. சிறு சிறு சங்கடங்கள் ஏற்படலாம். பயணத்துல பாதுகாப்பு அவசியம்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

உங்களோட திறமை வெளிப்படும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றி அடைவீங்க. புதிய பதவி பட்டங்கள் கிடைக்க வாய்ப்பிருக்கு. ராணுவம், காவல் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் செழிப்பான நேரம் இது. அரசியல்வாதிகள் தங்கள் திட்டங்களுக்கு வரவேற்பைப் பெறுவாங்க. ஒரு சில லட்சியங்கள் இப்ப நிறைவேறும். எதிரிகள் விலகி ஓடுவாங்க. எதிர்பார்த்திருந்த பணம் இப்ப கைக்குக் கிடைக்கலாம். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். அலைச்சலைத் தவிர்த்திடுங்க. ஏதாவது நோய் வரலாம்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

குடும்பத்துல சின்னச் சின்னப் பிரச்னை இருந்துட்டே இருக்கும். பேச்சுல நிதானம் அவசியம். சாப்பாடு விஷயத்துல கவனம் வேணும். வீண் விவகாரங்கள்ல ஈடுபட வேண்டாம். அறிமுகமில்லாதவங்ககிட்ட பழகும் போது எச்சரிக்கை அவசியம். பயணத்தைத் தவிர்த்திடறது நல்லது. கலைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. சுப காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் கூடி வரும்.



கன்னி ராசிக்காரரான தாமரைக்கனி எம்.எல்.ஏ.வுக்குப் புதிய பதவி, பொறுப்பு வர வாய்ப்பிருக்காம்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்களோட அறிவாற்றல் பிரகாசிக்கும். உழைப்புக்கேத்த பலனைப் பெறுவீங்க. விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும். எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்க திறமைக்கான பலனை அனுபவிப்பீங்க. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. பொருளாதாரம் ஏற்ற இறக்கமாவே இருக்கும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். எதிலயும் நிதானம் அவசியம். வீட்ல சின்னச் சின்னப் பிரச்னை தலை தூக்கும். வாயைக் கட்டிட்டு கம்முனு இருங்க. கன்னாபின்னான்னு செலவு பறக்கும். உஷாரா இருக்கறது நல்லது.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க திறமை வெளிப்படும். பொருளாதாரப் பிரச்னை இல்லை. கொடுக்கல் வாங்கல்ல ஆதாயம் இருக்கு. உங்களோட எண்ணங்கள் இப்ப நிறைவேறும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி இருக்கு. சிலருக்கு வெளிநாடு போற சான்ஸ் இருக்கு. எல்லார்ட்டயும் சுமுகமா பழகுங்க. இதனால சில சங்கடங்கள்ல இருந்து தப்பிக்க முடியும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பிருக்கு.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் குறையும். கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல வெற்றிக்கான வாய்ப்பிருக்கு. கம்ப்யூட்டர், விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு லாபம் கிடைக்கலாம். வெளிநாட்டு தொடர்பு நல்ல பயனைக் கொடுக்கும். எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. பண விஷயம் ஏற்ற இறக்கமாவே இருக்கும். சிக்கனம் அவசியம். வீண் செலவுகளைத் தவிர்த்திடறது நல்லது. அரசியல்வாதிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கு.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க உழைப்புக்குரிய பலன் கிடைக்கும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். உடல்நலன்ல கவனம் அவசியம். மாணவர்கள் திறமை வீண் போகாது. சுத்தறதை தவிர்த்துடுங்க. கணவன் மனைவிக்குள்ள பிரச்னை வரலாம். வீண் வம்பு பண்ண வேண்டாம். அது பெரிய பிரச்னையா மாற வாய்ப்பிருக்கு.

கால் மணி நேரக் கவிதைகள்!

பொழுது புலர்ந்துவிட்டது. ஆனாலும் அறையில் மின் விளக்கின் மென்மையான ஒளி படர்ந்திருக்கிறது. களைப்புடன் கட்டிலில் அமர்ந்திருக்கிறாள் மல்லி. நேற்றைய இரவை அவளுடன் செலவிட்ட, இளைஞன் நிலைக் கண்ணாடி முன்பு நின்று உடைகளை சரி செய்தபடி சொல்கிறான்.

"இப்போல்லாம் நீதான் எனக்கு ஒரே ஆறுதல்."

"ஏன் இரண்டாம் கல்யாணம் செய்துக்க வேண்டியதுதானே?" - மல்லி.

"செத்துப்போன என் மனைவி மாதிரி நல்ல பெண்ணா கிடைக்கணுமே?"

"என்னையெல்லாம் பார்த்தா உனக்கு அப்படித் தோணலியா? விருப்பப்பட்டா இதுக்கு வந்தேன்?" பாவமாய்க் கேட்கிறாள். அவளைப் பரிவுடன் பார்க்கிறான் இளைஞன்.

அதற்குள் வெளியே ஒரு ஆண் குரல்:

"மல்லி குளிச்சு ரெடியாகும்மா கஸ்டமர் வந்துட்டாங்க." அவள் கண்களில் கண்ணீர் ததும்புகிறது. இளைஞன் வெளியேறுகிறான். மறுநாள் வந்த அவன் இப்படிச் சொல்வான் என்று மல்லி எதிர்பார்க்கவே இல்லை.

"உன்னைக் கல்யாணம் செய்துக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன்" - இந்த முறை அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.



• மாதவகிருஷ்ணன்



• கிருத்திகா



• பகவத்சிங்

ஒரு கோவிலில் எளிய திருமணம். புதிய வாழ்க்கை. ஈரம் சொட்டிக் கொண்டிருக்கும் கூந்தல். மஞ்சள் குளித்த நெற்றியில் குங்குமம் சகிதமாய் ஸ்கூட்டரில் ஆபீஸ் புறப்படும் கணவனுக்குத் தெருவில் நின்று கையசைக்கிறாள் மல்லி.

மாலை வீடு திரும்பும் கணவனது காதுகளில், தான் கர்ப்பமான செய்தியைக் கிசுகிசுக்கிறாள். மல்லியின் சந்தோஷத்தில் பங்கு கொள்ளும் அவன், அவளின் அடிவயிற்றில் பாசமாய்த் தொட்டுப் பார்க்கிறான். சிலிர்ப்பில் மல்லி திடுக்கிட்டு விழிக்கிறாள். எல்லாம் கனவு! கட்டிலில் அமர்ந்தபடி ஒரு பகல் கனவு. கண்ணாடி முன் தலை சீவிக் கொண்டிருந்த அவன், சிகரெட் புகைத்தபடி வெளியேறுகிறான். வெளியே குரல். "மல்லி சீக்கிரம் குளிச்சு ரெடியாகும்மா." அந்த அறை முழுக்க இருள் பரவுகிறது.

வறண்டு, வெடித்துக் கிடக்கிறது, அந்தக் கிராமம். கோவில் மேடையில் பஞ்சாயத்துக் கூட்டம். "எவனோ ஒரு கொடும்பாவி இந்த ஊர்ல இருக்கான். அவனைத் துரத்தி அடிச்சுட்டா மழை பெய்யும்."



• மல்லி படத்தில்...



• அரவாணியாக அஜித்மணியன்

"யார்யா அவன்" - பஞ்சாயத்துத் தலைவர் கோபமாய்க் கேட்கிறார்.

"வேற யாரு, சுயம்புதான்" - சுயம்புவின் உருவம் கொடும்பாவியாகச் செய்யப்படுகிறது. அதை அவனை(ளை)க் கொண்டே இழுத்து வருகிறார்கள். தெரு நெடுகிலும் அவன்மீது, கற்களையும், குப்பைகளையும் வீசி எறிகிறார்கள் மக்கள். ஊர் எல்லையில் கொடும்பாவி எரிக்கப்படுகிறது. கொடும்பாவியாக யார் உருவம் எரிக்கப்பட்டதோ,

அவா ஊருக்குள் திரும்பவும் வரமுடியாது.

ஓடும் ரயிலில் தான் பெற்றோரால் கைவிடப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்கிறான் சுயம்பு. டீ கடையில் கையேந்துகிறான். கைதட்டி பிச்சை கேட்கச் சொல்கிறார்கள். அவன் அறிந்திருக்கவில்லை. விரட்டியடிக்கப்படுகிறான். ஆணும் பெண்ணுமற்ற அரவாணியான அவனது வாழ்க்கை உரிமையை ஒவ்வொரு நிலையிலும் பறிக்க நினைக்கிறது சமூகம். இறுதியில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றம் அழைத்து வரப்படும் ஓர் அரசியல் தலைவருக்காக, ஒரு தொண்டனைப்போல் தீக்குளிக்கிறான். அதுவும் வேலை கிடைக்காத ஒரு பட்டதாரி இளைஞன் இரண்டு லட்ச ரூபாய்க்காகத் தீக்குளித்து உயிர்விட இருந்த தருணத்தில் அவனுக்காக சுயம்பு எரிகிறான். அதற்கு முன் பார்வையாளர்களைப் பார்த்து கேட்கிறான். "என்னை வாழ வையுங்கன்னா கேட்கிறேன்; வாழ விடுங்கன்னுதானே...?"

அவள் ஓர் ஏழைப் பெண். மணமாகதவள். தன் குடும்பத்திற்காக, பணம் கிடைக்கிறதே என வாடகைத் தாயாகிறாள். பணக்கார குடும்பத்தின் வாரிசை சோதனைக் குழாய் மூலம் வயிற்றில் சுமக்கிறாள். பத்து மாதங்கள் பறந்து போகின்றன. பிரசவ அறைக்கு வெளியே பிள்ளைக்கு ஏற்பாடு செய்த செல்வந்தனும், அவனது மனைவியும் காத்துக் கிடக்கிறார்கள். பூமியைத் தொட்ட குழந்தை வீறிட்டு அலறுகிறது. ஆவலாய் உள்ளே போகும் அவர்களுக்கு அதிர்ச்சி. குழந்தை ஊனம். அதை அனாதை இல்லத்தில் விட முடிவு செய்கிறார்கள். ஏழைப் பெண் மறுக்கிறாள். குழந்தையோடு தன் வீட்டிற்கு நடக்கிறாள்.

பிரசார தொனியோ, உயர் தொழில் நுட்பமோ இல்லாமல் இயற்கை ஒளியில், உணர்வுபூர்வமான கலை அம்சத்தோடு, இந்தக் குறும் படங்களை எடுத்திருப்பவர்கள் தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர்கள். சுமார் கால் மணி நேரமே நீடிக்கும். மல்லி, கல்லறைப் பூக்கள், வளர்பிறை ஆகிய இந்த மூன்று படங்களுக்கும் முதல் முறையாக மாநில அரசின் விருதுகள் கிடைத்திருக்கின்றன. மிக நீண்ட போராட்டத்திற்குப் பிறகு தமிழ்நாடு திரைப்பட கல்லூரியின் இயக்குனர் அமிர்தத்தின் தீவிர முயற்சியில் இந்த விருதுகள் கிடைத்திருக்கின்றன என்கிறார்கள் மாணவர்கள்.

விலை மாது ஒருத்தியின் நியாயமான ஏக்கத்தை, மூன்றாவது வரியில் தீமர் அதிர்வை



ஏற்படுத்தும் ஒரு நல்ல ஹைக்கூ கவிதையைப் போல, மல்லியை படமாக எடுத்திருக்கும் மாதவ கிருஷ்ணன் ஒளிப்பதிவுத் துறை மாணவர். கடந்த ஆண்டின் சிறந்த குறும் படமாக தேசிய விருது பெற்ற கையோடு, சிறந்த ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு ஆகியவற்றுக்காக இரண்டு மாநில விருதுகளை மல்லி படம் பெற்றிருப்பதில் இவருக்கு இரட்டிப்பு சந்தோஷம். தற்போது மத்திய அரசுக்காக தமிழகத்தில் வாழும் ஒன்பது பழங்குடி இன மக்களைப் பற்றிய டாகுமெண்டரியை எடுத்து வருகிறார். சந்தோஷ் சிவன், ராஜீவ் மேனன், வரிசையில் சினிமா எழுத்தும், ஒளிப்பதிவும் இணைந்த கலைஞனாக வர வேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருக்கிறார். மல்லி படத்தின் சிறந்த ஒலிப் பதிவுக்காக மாநில விருது பெற்றிருப்பவர் சக்திகுமார்.

'கல்லறைப் பூக்கள்' படத்தில் அரவாணியாகவும், அவனது அண்ணாகவும் நடித்து (வாழ்ந்து) சிறந்த நடிப்புக்கான மாநில விருதைப் பெற்றிருக்கும் அஜித் மணியன் கண்ணூரைச் சேர்ந்தவர்.

"சிறு வயது முதலே என்னை ஒரு நடிகனாக உருவாக்க வேண்டும் என்று அப்பா விரும்பினார். அதற்குக் காரணம் எனது ஆர்வம்தான். எனக்கு நடிப்பைத் தவிர வேறு எதுவும் தெரியாது. என் விருப்பம் போலவே தரமணி திரைப்படக் கல்லூரியின் நடிப்பு பிரிவில் இடம் கிடைத்தது" என்று சொல்லும் இவர், இப்போது மத்திய அரசின், தகவல் ஒளிபரப்புத் துறையின், இசை நாட்டியப் பிரிவில் தொழில் முறை நடிகராகப் பணியாற்றுகிறார்.



"அவர் ரொம்பவும் ஜால்ரா!"
"அப்படியா?"
"தூக்கத்துல ஏன் சிரிச்சீங்கனு கேட்டால் கூட மானேஜர் வந்து கனவுல அருமையான ஜோக் சொன்னார்னு சொல்றாரே!"
— அம்பை தேவா

சிறந்த இயக்குனர் விருதும் பெற்றிருக்கும் கல்லறைப்பூக்கள் படத்தை இயக்கியிருப்பவர் திருமலைக்குமார்.

வளர்பிறை படத்திற்குச் சிறந்த படத் தொகுப்புக்கான விருது பெற்றிருக்கும் கிருத்திகா சென்னைக்காரர். தற்போது சன் தொலைக்காட்சியில் படத் தொகுப்பாளினி. வளர்பிறை குறும் படத்தின் படத் தொகுப்பை பன்னிரண்டு மணி நேரத்தில் செய்து முடித்ததாகக் கூறும் இவரது தாத்தா சினிமா கவிஞர் உளுந்தூர்பேட்டை சண்முகம். பள்ளியில் படித்தபோது ஸ்கௌட்டில் குடியரசுத் தலைவர் விருது பெற்றேன். அந்த விருதுதான் திரைப்படக் கல்லூரியில் இடம் கிடைக்கக் காரணமாக இருந்தது. இப்போது எனது டிப்ளோமா படத்துக்கும் விருது கிடைத்திருக்கிறது என்று சொல்லும் இவரது சித்தியும் ஒரு படத் தொகுப்பாளராம்.

"இருபத்தோரு வயதாகும் என்னை நம்பி, இப்போது யாரும் சினிமா துறையில் வாய்ப்புத் தர மாட்டார்கள். ஆனால் சினிமாவில் பெயர் வாங்காமல் விடமாட்டேன்" என்று சவால் விடுகிறார் கிருத்திகா. வளர்பிறை படத்திற்காக பகவத்சிங் சிறந்த புராசஸிங் விருது பெற்றிருக்கிறார்.

"**எ**ங்களைச் சுற்றி நடந்த விஷயங்களையே நாங்கள் குறும்படங்களாக எடுத்தோம். நாங்கள் சினிமாவுக்கு வரும்போது சமூகப் பிரச்னைகளே எங்கள் களமாக இருக்கும்" என்கிறார்கள் இந்த மாணவப் படைப்பாளிகள். சினிமா வியாபாரிகள் இவர்களை விடுவார்களா?

— விஷ்வல்தாசன்

மனநிழலில் இளைப்பாறி...

“சில மாதங்களுக்கு முன்புதான் திருமணம் செய்து கொண்டேன். ஆனால் இல்லறத்திலிருந்து விடுதலை வேண்டும்... வழியிருக்கிறதா?” என்று கேட்ட இளைஞரின் கலங்கிய கண்களை ஊடுருவி நோக்கினார் ரமண மஹரிஷி.

“பழம் கனிந்தால் தானாக உதிர்ந்து விடும். இதில் கவலைப்பட என்ன இருக்கிறது?” – ரமணரின் இந்த பதிலைக் கேட்டு இளைஞரின் முகத்தில் வெளிச்சம் பரவியது.

இச்சந்திப்பு நிகழ்ந்தது 1920ல்– திருவண்ணாமலை ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரமத்தில்.

பின்னாளில் அந்த இளைஞரே ஐந்து பெண்களுக்கும் தமிழில் புதுக் கவிதைக்கும் தந்தையானார்– அவர் ந. பிச்சமூர்த்தி.

பாரதி தமது வசனக் கவிதை மூலம் புதுக் கவிதைக்கு வித்திட அதை விருட்சமாக்கிக் காட்டியவர் ந.பிச்சமூர்த்தி. இவரது நூற்றாண்டு விழா சுதந்தர தினத்தன்று சென்னை திருவல்லிக்கேணி பாரதி நினைவு இல்லத்தில், கவிஞர் ஞானக்கூத்தன் முயற்சியில் சத்யம் ஆன் லைன் உதவியுடன் தமிழ் அன்பர்கள் எடுத்த இவ் விழாவில் கவிஞரின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி. பிச்சமூர்த்தியின் முதல் கவிதைத் தொகுப்பான ‘குயிலின் ஸ்ருதியை’ப் பதிப்பித்தவர் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தியின் தந்தை தீரர் சத்தியமூர்த்திதான்.

மூப்பனார் முன்னிலையில், பிரபஞ்சன், வல்லிக்கண்ணன் போன்ற மூத்த எழுத்தாளர்கள் பங்கேற்க இளைய தலைமுறைக்குப் பிச்சமூர்த்தியின் சாதனைகள் வெளிச்சமாயின.

சட்டம் பயின்று வழக்கறிஞராகவும் பின்னர் அறநிலையத் துறை அதிகாரியாகவும் பணியாற்றியவர் பிச்சமூர்த்தி. நவ இந்தியா பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியையும் வகித்தவர். முதன் முதலில் இவர் எழுதிய புதுக் கவிதை ‘காதல்’– 1934ல் மணிக்கொடி இதழில் வெளியாயிற்று.

127 சிறுகதைகள், ஒரு குறுநாவல், 11 நாடகங்கள், கணக்கற்ற கவிதைகள் எழுதியிருக்கும் பிச்சமூர்த்தி புதுமைப்பித்தன், மௌனி வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர் என்பதை எடுத்துச் சொன்னார் ஞானக்கூத்தன்.



• விழாவில்

பிச்சமூர்த்தியின் கவியுள்ளமும் கற்பனை நோக்கும் அவரது சிறுகதைகளுக்குத் தனித்தன்மையும் தனி மொழியும் அளித்திருப்பதைச் சுட்டிக்காட்டினார் வல்லிக்கண்ணன்.

பிச்சமூர்த்தியின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என எடுத்துச் சொன்னவர் பிரபஞ்சன்.

பிச்சமூர்த்தியின் ஐந்து புதல்விகளுள் ஒருவரான மீனாட்சி சுப்ரமண்யம் தங்களுடன் நண்பரைப் போல் பழகிய தந்தையை நினைவுகூர்ந்தார்:

“ஏலக்காய் கலந்த பாக்குத்தூள் போடுவதில் அலாதி விருப்பம் அவருக்கு; இயற்கையோடும் பறவைகளோடும் கலந்து வாழ்ந்தவர்... இறுதிவரை எளிமையாகவே வாழ்ந்தார்...”

இந்த எளிமையும் கவித்துவமும் கலந்து பிச்சமூர்த்தி தீட்டிய சொற்சித்திரங்கள் ‘மனநிழல்’ என்ற புதிய இலக்கிய வடிவமாக உருப்பெற்றன என்பது காலஞ்சென்ற தஞ்சை பிரகாஷின் கருத்து. அந்த ‘மனநிழலில்’ இளைப்பாறி புதுக்கவிதைகளைப் பொழியும் இன்றைய எழுத்தாளர்கள் பிச்சமூர்த்திக்குக் கடன் பட்டவர்கள்.

— ஜெ.

படம்: வெங்கடேஷ்

தமிழகத்தில் முதல் முறையாக...!

மாபெரும் இஸ்லாமிய கலாச்சாரக் கண்காட்சி

நூற்றாண்டு கண்காட்சி மண்டபம்
மியூசியம், எழும்பூர்,
சென்னை – 600 008.

26, 27, 28, 29 ஆகஸ்ட் 2000
காலை 9 முதல் 6 வரை

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சியை தவறவிடாதீர்!

அனுமதிக் கட்டணம்: பெரியவர் ரூ.5, சிறுவர்-மாணவர் ரூ.2

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்
சென்னை – 600 002.
தொலைபேசி: 8594110

வட்டமேஜை

அவ்வப்போது ஆட்களை கடத்தி, ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் வீரப்பனை பிடிக்க ராணுவம் அழைக்கப்பட வேண்டும் என்று தலையங்கத்தில் கூறியிருப்பதை வரவேற்கிறேன்.

கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி

"ஆட்டிப் படைக்கும் வீரப்பன்" தலையங்கத்தைப் படித்தேன். வீரப்பனைப் பிடிக்க இந்திய ராணுவத்திடம் பொறுப்பை ஒப்படைப்பது தான் வழி என்று கூறியிருக்கிறீர்கள். ராணுவம் எல்லா சிவில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டால் நாட்டின் பாதுகாப்புப் பணிகளுக்குத் தடங்கல்கள் ஏற்படும்.இது உசிதமல்ல.

சென்னை-73, கே.வி.ராமன்

அரசு மருத்துவமனையில் இன்னொரு அக்கிரமம் படித்தேன். இதைத் தவிர்ப்பதற்கு வழியே கிடையாதா?

திருப்பத்தூர், புதூர்.சு.முருகையன்

'குபேரன்' என்ற கைதிக்கு கல்கி என்ற நீதிபதி அளித்தத் தீர்ப்பு மிகவும் அருமை. தராசு முள் போன்று நடுநிலையோடு சொல்லப்பட்ட தீர்ப்பை பார்த்துதான் படத்திற்குப் போகலாமா வேண்டாமா என்று தீர்மானிக்கிறோம்.

திருச்சி-17, உஷாமுத்துராமன்

பலருக்குப் பாடம்!

சிவசங்கர் பாபா பற்றி தங்கள் கருத்து எதுவாக இருந்தாலும், பாபா சமர்க்ஷணா ஆசிரமத்தில் பல சுய தொழில் வகுப்புகள் இலவசமாக நடத்துகிறார். தொழில் வாய்ப்புகளும் பெற்றுத் தருகிறார் என்ற செய்தியை வெளியிட்டதற்கு நெஞ்சு சார்ந்த நன்றி.

கோயமுத்தூர், ரேவதி

சமத்துவ பூமி கதை நிகழ்ச்சிகள் கண்ணீரை வர வைத்தன. அக்ஷரலட்சம் பெறும் அருமையான கதை. இன்றைய சமத்துவபுர பூமிகள் இவ்வாறு அமையாமல் இருக்க வேண்டும்.

மேட்டூர் அணை, தா.இல. ராசன்

பெரியார் ரேஞ்சில், சிவசங்கர் பாபாவைக் கேள்விக் கணைகளால் திக்குமுக்காடச் செய்திருக்கும் 'கல்கி'க்குப் பகுத்தறிவு சல்யூட்ஸ்!

அம்பத்தூர், கே.கே.பாலசுப்ரமணியன்

மறைந்த அமைச்சர் நாஞ்சில் மனோகரன் பற்றிய கட்டுரையில் தன் மகன்களை அரசியலுக்கு அறிமுகப் படுத்தக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தார் என்ற வரி முத்தான வரி; முத்திரை வரி. பலருக்குப் பாடமும் கூட.

சென்னை-14, இராயப்பேட்டை

தங்க மங்கை பி.டி. உஷாவின் தடகளப் போட்டி ஒலிம்பிக் சாம்பியன்ஷிப்புக்கு



அஸ்திவாரம் போட்ட மாமரம், மகத்தான மரம் தான்! தாயகத்துக்காகத் தங்க மாம்பழம் காய்த்துக் கொடுத்துள்ளதே!

திருவண்ணாமலை, ஆர்.ஆர்.சாமி

சிவசங்கர் பாபா அவதார புருஷரா, இல்லையா என்பது இருக்கட்டும், கல்கி, அவரைப் பேட்டி கண்டு அவரை அசாதாரண புருஷராக அல்லவா ஆக்கி இருக்கிறது.

பெங்களூர், என்.ராஜா

விமானப்
பயணிகளுக்காக
விமானங்களில் அந்தந்த
விமான நிர்வாகத்தின்
பத்திரிகைகளை
வைத்திருப்பார்கள்.
பெரும்பாலும் கலர்
கலர் படங்களாக
மட்டுமே
நிறைந்திருக்கும்
அந்தப்
பத்திரிகை
களில்,
அபூர்வமாகத்
தான் சிரிப்பு
முத்துக்கள் தென்படும்.
ஜெட் ஏர்வேஸின் ஜெட்
ஏர்லிங்க் பத்திரிகையி
லிருந்து சில
முத்துக்கள் இதோ :



ஒரு சிறுமிக்குப் பள்ளி செல்ல மனமில்லை. ஆனால் விடுப்பு எடுக்க வேண்டுமானால் அவள் பெற்றோர் தொலைபேசியில் அவசியம் தெரிவிக்க வேண்டும். எனவே பெற்றோர் அலுவலகம் போன பிறகு தொலைபேசியில் ''ரீட்டா இன்று பள்ளி வரமாட்டாள். அவளுக்கு ஜுரம்'' என்று அவளே சொல்ல, மறு முனையில் ''சரி. நாங்கள் குறித்துக் கொள்கிறோம். நீங்கள் யார் பேசுவது?'' என்று கேட்க,

''..........ம்..........என் அம்மா!''

●



ஒரு கடை வாசலில் ஒரு பூனை மிகப் பழைய சாசர் ஒன்றில் பால் குடிப்பதைக் கவனித்தார் பழமை பொருட்களைச் சேகரிக்கும் ஒருவர். சாசரை நேரடியாக விலைக்குக் கேட்டால் அதன் முக்கியத்துவம் தெரிந்து விடுமோ என்ற அச்சத்தில் பூனையை இருநூறு ரூபாய்க்கு விலை பேசினார் கடைக்காரர் முதலில் கொஞ்சம் பிகு பண்ணிக் கொண்டாலும் பிறகு கொடுத்து விட்டார் பூனையை எடுத்துக் கொண்டு ''இந்த சாசரால உங்களுக்கு இனி உபயோகம் இல்லை. நிச்சயம் தூக்கி எறியப் போகிறீர்கள். எனக்காவது உப

பூங்கொத்து விற்பவன் ஒரு ஆளை வசமாகப் பிடித்துக் கொண்டான். "ஒரு பூங்கொத்து வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் அன்பான மனைவிக்கு."

"எனக்கு மனைவியே இல்லை."

"அப்படியானால் உங்கள் ஆசை காதலிக்கு ஒரு பூங்கொத்து வாங்கிக் கொள்ளுங்கள்."

"எனக்குக் காதலியே இல்லை."

"அப்படியானால் இரண்டு பூங்கொத்து வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் அதிர்ஷ்டத்தைக் கொண்டாடுவதற்கு."

●





ஒரு இளம் தம்பதிக்குக் குழந்தை பிறந்தது. அடிக்கடி சிறுநீர் கழிக்கும் குழந்தைக்கு ஜட்டி மாட்டி விடுவதில் கணவன் உதவ வேண்டும் என்று மனைவிக்கு ஆசை. கேட்டதற்கு 'அடுத்த முறை நிச்சயம் உதவுகிறேன்' என்று சொல்லி தப்பித்துக் கொண்டான் கணவன். கொஞ்ச நேரத்திலேயே குழந்தை சிறுநீர் கழிக்க அதைத் தூக்கி அவனிடம் கொடுத்தாள் மனைவி. "நோ... நோ... அடுத்தது என்றால் அடுத்தக் குழந்தையைச் சொன்னேன்!'' என்றான் கணவன்.

ஒரு கடையில் எக்கச்சக்கமாகத் தள்ளுபடி விற்பனை என்ற விஷயம் காட்டுத்தீயாய்ப் பரவ, அந்தக் கடையில் ஏகப்பட்ட கூட்டம். குள்ளமான ஒருவர் க்யூவில் நிற்காமல் முன்னே போக, பின்னால் இருப்பவர்களால் பலமாக 'கவனிக்க'ப்பட்டார். அவர் எழுந்து மறுபடியும் முன்னே போக முயற்சி செய்ய, திரும்பவும் தர்ம அடி! வலி பொறுக்க முடியாமல் கத்தினார் :

"எப்படியோ எக்கேடு கெட்டுப் போங்கள். நான் கதவை திறக்கப் போவதில்லை!"

மெலட்டூர். இரா. நடராஜன்

ஆரோக்ய சிரிப்பு!

...யோகமாக இருக்கட்டும்'' என்று சொல்லி அதை எடுக்க முயல, "ஸாரி. அந்த சாசர் உங்களுக்கு கிடைக்காது. அதை வைத்துத் தான் இதுவரை அறுபது பூனைகள் விற்றுள்ளேன்." என்றார் கடைக்காரர்.

பார்த்திபனுக்கு அனிதாவின் மீது கோபம் கோபமாக வந்தது. அவள் செய்த காரியத்தில் ரவி சாருக்குக் கெட்ட பெயர். அதைப் பற்றி மனசு தாளாது புலம்பினால் உடையாத பொருளைக் கீழே தூக்கிப் போட்டு வாழ்க்கை இவ்வளவுதான் என்கிறார். பார்த்திபனுக்கு வீட்டில் வகையான திட்டு கிடைத்தது. அரிச்சந்திரா, சம்பூர்ண ராமாயணம் என்று பார்க்கப் போயிருந்தால் திட்டு கிடைக்காமல் இருந்திருக்குமோ என்னவோ?

கடிகாரத்தைக் கழற்றி விட்டு அனிதாவின் பிம்பம் பார்க்கும் செயலைத் தவிர்த்தான். அவளை நேரடியாகப் பார்க்க நேர்ந்த போது அவள் பக்கவாட்டில் முறுவலித்துக் கொண்டிருந்தாள். மனத்தின் பெரு விருப்பம் பார்த்துக் கண் விழுங்க சதா ஆசை கொண்டிருந்தது.

பேசவென அவள் நெருங்கி வந்த போது முகத்தைப் பாறையென வைத்திருந்தான். அது எந்தக் கணத்திலும் நுரையெனவும் வழியலாம்.

"கோபமா?" என்றாள் அனிதா.

"ஆமா, நீ என்னோட பேசாதே."

"சரி" என முகத்தை முப்பது டிகிரி திருப்பிக் கொண்டு போய் விட்டாள். பிரகாஷும் மோகனும் இணைத்து வைக்கிறோம் பேர்வழிகள் என அர்த்தமற்ற செயல்கள் புரிந்து வந்தனர்.

"அனிதா! எக்ஸ்க்யூஸ் கேட்டு ஒரு லெட்டர் எழுதிக் கொடு. ப்ளீஸ்"

"எதுக்கு நான் எக்ஸ்க்யூஸ் கேக்கணும்? அதெல்லாம் முடியாது."

பார்த்திபனால் தொடர்ந்து 'காய்' விட்டுக் கொண்டிருக்க முடியாதென்பது அனிதாவுக்குத் தெரியும். அனி இருக்கக் காய் கவருமா என்ன?

மதிய உணவு இடைவேளையின் போது கதவு தாண்டிப் பிரியும் கடைசிக் கணத்தில் ஏக்கமே ஏக்கமாய் ஏன் பார்க்கிறானாம். ரவியிடம் பார்த்திபன்,

"சார், அந்தப் பொண்ணுகிட்டே நான் பேசறதில்லை" என்றான்.

"ஏம்ப்பா?"

"சினிமாவுக்குப் போனதைச் சொல்லிட்

கானல் தெரு



டாள்ல்ல?"


"ச்சே. அதுல என்ன தப்பு? அக்க றையுள்ள யாரும் அதத்தான் செய் வாங்க."

"ஏன் சார், சினிமாவுக்கு அனுப்பினீங்களே. உங்களுக்கு மட்டும் அக்கறையில்லையா?"

நாற்காலியில் அமர்ந்திருந்த ரவி நன்கு நிமிர்ந்து,

"நல்லாப் பேசறியேடா" என் றார். பார்த்தி அமைதியாக இருக்க ரவி தொடர்ந்து, "திராணி உள்ள பையங்களா வளரணும்னு நெனக்கிறேன்டா. பல சமயம் இது வம்புல முடியுது. அத விடு. இந்த ஞாயித்துக்கிழமை சைக்கிள் பயணம் முடிஞ்ச உங்க வீட்டுக்குப் போவம் என்ன... ஆனா நீ அந்தப் பொண்ணு கூடப் பேசிடு."

மதிய உணவு நேரத்தின் கடைசி நிமி டங்களின் போது வகுப்பு பதினொரு நபர்களை மட் டுமே கொண்டிருந்தது. அனி தாவின் அருகில் அமர்ந்திருந்த ஜோதி கை சொடுக்கி, "பிரகாஷ், பார்த்தி இரண்டு பேரும் வாங்க!" என்று கூப்பிட்டாள்.



இப்போது மறுப்பதற்கில்லை. இதோ அனிதாவிடம் பேசி விடலாம் என பார்த்திபன் பூரித்தான். திக்கற்றுத் திரியும் போது தேவதையே எதிர்வரு கிறது. அனிதாவை எதிரெதிராகப் பார்த்து கால் மடித்து ஒரு டெஸ்க்கில் அமர்ந்தான் பார்த்திபன். ஜோதி, அனிதாவை முழங்கை கொண்டு விலாவில் இடித்தாள். அனிதா இரு பையன்களையும் மலங்கலாகப் பார்த்தாள். பின் பார்த்திபனிடம், "ஒரு குட் நியூஸ்" என்றாள்.

"என்ன?"

"அடுத்த வாரம் இலக்கிய மன்ற விழா."

"தெரியுமே. இதுல என்ன குட்



10

க.சீ. சிவகுமார்

நியூஸ்?"

"எங்க அப்பாதான் தலைமை."

"அப்படியா?" எனப் புன்னகை செய்தான் பார்த்திபன். பிரகாஷின் புன்னகையோ வெடித்து விட்டது. சிரிசிரியெனச் சிரித்து, "இந்த வருஷம் இவரு மாட்டிக்கிட்டாரா?" என்றான். நால்வரும் சிரித்தார்கள். அனிதாவுக்கு லேசான சங்கடமிருந்தது. பிரகாஷ் சிரிப்பைத துவக்கியதில் அர்த்தம் உண்டு என்றோ அர்த்தம் இல்லை என்றோ கொள்ள முடியாது.

பள்ளியில் எப்போதும் இலக்கிய மன்ற விழா அப்படித்தான். இதுவரை அதற்குத் தலைமை ஏற்றவர்கள், காவல் துறை துணை ஆய்வாளர்கள், வங்கி மேலாளர்கள், மின் துறை, தொலைத் தொடர்புத் துறை பொறியாளர்கள் இப்படித்தான்.

மொழி என்பது கட்டுப்பாடு, கட்டுமானம், பொருளாதாரம் எனப் பல வகைகளில் மேன்மையுறுவது இப்படித்தான் சாத்தியம். இவர்கள் தலைமையில் பக்கம் பாட்டிலுள்ள பள்ளித் தமிழாசிரியர்கள் வந்து ஏதாவது தலைப்பில் ஒன்றிலிருந்து ஒன்றரை மணித்தியாலங்கள் பேசுவார்கள். போன ஆண்டு காவல் துணை ஆய்வர் தலைமையில். பார்த்திபனும் மோகனும் ஜாக்கிசானின் போலீஸ் ஸ்டோரி பார்க்கப் போய் விட்டார்கள். பிரகாஷ் பாவம். அரவைத் தமிழ் ஆசான் ஆறு. கோவிந்தனின் 'இலக்கியத்தில் நிலவு' கேட்க வேண்டியதாகி விட்டது. அவர் நிலவின் துணையாலேயே முனைவர் பட்டம் பெற்றிருந்தார். இலக்கியத்தில் வந்த முப்பத்தெட்டு நிலவுகள் பற்றி அற்றைப் பகலில் பேசினார். இலக்கிய நிலவுக்கு தேய்பிறை கிடையாது. தவிர வளங்குன்றாத் தமிழில் இன்னும் ஈராயிரம் ஆண்டு பன்னிப் பன்னியும் செப்பிச் செப்பியும் மகிழ, கிள்ளிகளைக் கிழார்கள் ஒரு பாடு பாடி வைத்துள்ளார்கள்.

இந்த ஆண்டு இருந்து இலக்கியம் பருக பார்த்திபன் தீர்மானித்தான். அன்று விழா நாளில் நடேசன் வந்தார். நன்றாகப் பேசினார். எட்டே நிமிடங்கள். பள்ளி மற்றும் மாணவர்களை வாழ்த்தித் தலைமைச் செவ்வனே முடித்தார்.

அனிதாவையும் நடேசனையும் மாறி மாறிப் பார்த்து முறுவலித்து பார்த்திபன் உட்கார்ந்திருந்தான். நெகிழ்ச்சி, புளகாங்கிதம். எனது பொருள் படைத்தளித்த எம்மான் நீ வாழ்க! சிலையைத் தவிர்த்து விட்டு சிற்பியை வணங்கினான் ஒரு பொற்கணம்.

பரமசிவ அர்ஜுன்!

தமிழிலும் தெலுங்கிலும் வெற்றிகரமாய் வலம் வந்து கொண்டிருந்தாலும், கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட அர்ஜுன் கன்னடப் படவுலகில் கிளிக் ஆகவில்லை. இப்போது, பெருத்த நம்பிக்கையுடன் ஒரு கன்னடப் படம் பண்ணுகிறார். அடிதடி ஆக்ஷன் ரோல் இல்லை. பரமசிவன் ரோல்! படம்: ஸ்ரீமஞ்சுநாதா. கர்நாடகாவில் மிகப் பிரபலமான புனித ஸ்தலமான தர்மஸ்தலாவில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானின் மகிமையைச் சொல்லும் புராணப் படமாம் இது!

— எம்

ஞாயிற்றுக் கிழமை...

அதிகாலையில் சைக்கிளை எடுத்து அதை ரவி சார் வீட்டுக்கு ஓட்டி வந்து சேர்ந்தான் பார்த்திபன். பிரகாஷும் வந்து விட்டிருந்தான். மோகன், லோகு, செந்தில் குமார், ஆனந்தன் சிற்சில இடைவெளிகளில் சைக்கிள் சகிதம் வந்தனர். சைக்கிள் பயணம் தங்கராஜ் இல்லாமலா? வந்து விட்டான் அவனும். ரவி வீட்டில் காப்பியைக் குடித்து விட்டு சைக்கிள் அணி வடக்குக் கிளம்பியது. காலையில் பரமத்தியில் அன்னை உணவகத்தில் டிஃபன் எனத் திட்டம். மதிய உணவுக்குச் சின்னதாராபுரத்துக்கே வந்து விடுதலாம்.


முதலில் சைக்கிள் படை போனது ஸ்கூலுக்குப் பின்னே உள்ள வெப்பிலி மேடு தான். கற்கள் பரவியிருந்த காட்டில் வாதற்காச்சி மரத்தின் கீழிருந்து ரவி கேட்டார்,

"நவமணிகள் பேரை யாராவது சொல்லுங்க."

"தங்கம்" என ஆனந்தன் ஆரம்பித்தான்.

"அல்ல."

எல்லோரும் கூடி ஏழு பெயர்கள் சொன்னதுக்குப் பிறகு செந்தில், "நீலம், புஷ்பராகம்" என இரண்டு பெயரைச் சொல்லிப் பட்டியலை நிறைத்தான். ரவி வெப்பிலி மேட்டில் இதைக் கேட்கக் காரணமிருந்தது. அந்த மேட்டில் நீலக் கற்கள் கிடைத்து வந்தன. வெப்பிலி மேட்டில் கற்கள் தோண்டுவதை விவசாயமென பல குழுக்கள் செய்து



வந்தன. அதன் மதிப்பறிந்து பல பேர் பணக்காரர்களானார்கள். 'மணி'களுக்கு நிலையான விலை ஒன்றும் இல்லை. சமீபத்தில் கற்கள் பறிக்கும் வேலை ஓய்ந்து விட்டது. அந்தக் கற்களின் ஞாபகத்தில் வெங்கிடாபுரம் கபாடி அணி 'நீல வைரம்' எனப் பெயர் வைத்திருக்கிறது.

வெப்பிலியிலிருந்து புறப்பட்ட சைக்கிள்கள் கரூர் மெயின் ரோடு வந்து கிழக்கு உருண்டு அகிலாண்டபுரம் பிரிவில் வடக்குத் திரும்பின. பரமத்திக்குப் போகுமுன் ஆண்டிசெட்டிபாளையத்தில் மின் பகிர்மாண அலுவலகமும் செயலகமும். அங்கே பத்து நிமிடங்கள். மின்சாரத்தைக் கண்டுபிடித்தது யார் என்பதிலிருந்து அது துவங்கி பரமத்தி போகும் போது சம்சாரம் அது மின்சாரத்தில் முடிந்திருந்தது.

காலை உணவை பத்தரை மணிக்குச் சாப்பிட்டார்கள். அதன் பின் அந்த ஊரின் பள்ளி வளாக மைதானத்தில் போய் அமர்ந்த போது, "சார்! வெய்யிலுக்கு முன்னாடி போய்டுவோம்" என்றான் ஆனந்தன்.

"நல்ல வெய்யில்ல பன்னெண்டு மணிக்குப் போகப் போறோம். வெய்யில்னா என்னன்னு தெரிய வேணாமா?"

பிரகாஷ், "இன்னிக்கு ராத்திரி சூடு பிடிக்கப் போவுது" என்றான்.

அந்த அமர்வில் பார்த்திபனை மெல்லிய ஏக்கம் சூழ்ந்தவாறிருந்தது. இன்று புதிதாய் வந்த செந்திலிடமும் ஆனந்தனிடமும் கூட ரவி, பார்த்திபனையும் பிரகாஷையும் போல நடத்தியும் பேசியும் வந்தார்.

தனக்கான இடம் அவ்வளவு பிரத்யேகமானது இல்லையோ எனக் கேள்வி வந்தது.

ஒரு ஆசிரியர் அனைவரிடமும் அப்படித்தான் இருக்க முடியும் எனச் சமாதானம் வந்தது. புரிந்து கொள்ள முடிந்த ஒன்றை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதுதான் மனப்போராட்டத்தின் விதி.

மரத்தடியில் ரவிசாருக்கு தனது முகம் பக்கவாட்டுத் தோற்றம் கொள்ளும்படிதான் அமர்ந்திருந்தான்.

ரவி, "திரும்பி உட்காரு பார்த்தி" என்றார். நேர் பார்த்து அமர்ந்தவனின் கண்களை உற்று நோக்கினார். "உலகம் எல்லோருக்காகவும்தான்."

வெள்ளி ஆவியானால் எப்படி இருக்குமோ அவ்விதம் எரிந்து கொண்டிருந்தது வெய்யில். பரமத்தியில் புறப்பட்டதும் மேற்கே தென்னிலை. அங்கே தங்கராஜின் அக்கவுண்டில் தேநீர், வடை. கார்வழி முக்கில் உள்ள டீக்கடையில் நின்றவாறு ஒரு கைகாட்டி மரத்தைக் காட்டி ரவி தங்கராஜிடம்,

"அந்த இடமா?" என்றார். வெட்கத்துடன் தலையசைத்தான் தங்கராஜ்.

அந்தக் கை காட்டி மரத்தருகே நின்றுதான் மாணவிப் பயணிகளை அவன் எதிர்கொள்வது.

இது விஷயமாக ஆசிரியர் என்ற முறையில் தங்கராஜ் மீது ரவிக்குக் கோபம் இருக்க வேண்டும். அது ஏன் என ஒருநாள் கேட்க வேண்டும் என பார்த்திபன் நினைத்தான். 'உலகம் இவ்வளவுதான்' கோட்பாட்டில் எல்லாமே எளிய விஷயங்களோ என்னவோ.

தங்கராஜ் தென்னிலையிலேயே தங்கி விட்டான். வீட்டுக்குப் போய் சைக்கிளின் ஃப்ரீ வீலுக்கு எண்ணெய் விடுவானாயிருக்கும்.

சைக்கிள் அணி சின்னதாராபுரத்தில் மதிய உணவுக்குப் பின் அணைப்பாளையம் அணைக்கட்டுப் பகுதிக்குச் சென்றது.

அதே நேரம் பள்ளியின் ஆறு-பி சுவரில் எழுதிக் கொண்டிருந்தது. கரிக்கையின் வலது கரம் ஒன்று. அந்தக் கைகள் குறித்து வர்ணனை ஏதுமில்லை. அவனது கால்கள் 13.8 செகண்டுகளில் நூறு மீட்டர்கள் கடக்க வல்லவை.

(தொடரும்)

— மனம் திறக்கிறார் ரோஜா

"எதற்கும் அஞ்சமாட்டேன்!"



நீதிமன்ற வழக்கைத் தாண்டி தமிழக அரசின் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றிருக்கிறார் ரோஜா. விருது வழங்கு விழாவில், 'நீதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்த விருதைப் பெறுவதற்கு' என்று முதல்வர் கருணாநிதி கூறியது நிம்மதியான டானிக்காகி இருக்கிறது அவருக்கு. ஒரு காலைப் பொழுதில் அசோக் நகரில் உள்ள அவரது வீட்டில் சந்தித்தோம்.

தமிழ்நாடு அரசும், கோர்ட்டும் சேர்ந்து, சிறந்த நடிகைக்கான விருதை வழங்கியதில், உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியா?

எந்த ஒரு நடிகை ஆனாலும், இது போன்ற அங்கீகாரம்தானே ஊக்கமும், உற்சாகமும் அளிப்பது. என்ன பிரச்னையென்றாலும், அதையெல்லாம் மீறி மனப்புண்ணுக்குப் போடப்படும் மருந்து போன்றவை இத்தகைய பரிசுகள். ஆனால், ஒரு படம், வெற்றி பெற்று, நன்றாக ஓடுவதும், அதில் நடிப்புக்குப் பாராட்டு கிடைப்பதும்தான் முதல் சந்தோஷம்.

அடுத்த இலக்கு தேசிய விருதா?

எனக்கு ஆசைதான்! ரோஜா என்றாலே கிளாமர் என்கிற முத்திரை குத்திவிட்டார்கள். அதை உடைத்து, என்னால் எல்லாவிதமானக் கேரக்டர்களிலும் பிரகாசிக்க முடியும் என்பதை நிரூபிப்பது அத்தனை சுலபமான விஷயமில்லை. இப்போது, வெரைட்டியான வேடங்களில் நடிக்கக் கூப்பிடுவது ஆரோக்கியமான மாற்றம். ஏழையின் சிரிப்பில் படத்தில், பிளாக்கில் டிக்கெட் விற்கிற பெண்ணாக நடித்தபோது பலரும் பாராட்டினார்கள். தெலுங்கிலும், இது போன்ற வித்தியாசமான ரோல்கள் வருகின்றன. கிளாமர் முத்திரையை உடைத்து, மாநில விருது பெற முடிகிறபோது, தேசிய விருதும் பெற முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நீங்களாகவே ஏற்றுக் கொண்டதால்தானே கிளாமர் முத்திரை விழுந்தது? அப்போதே மறுத்திருந்தால், நடிப்புத் திறமையை நிரூபித்திருக்கலாம் இல்லையா?

அதற்கு என்னுடைய மெச்சூரிடி இல்லாமைதான் காரணம்! சில படங்களை நான் இப்போது பார்க்கிறபோது, எதற்காக இதில் எல்லாம் நடித்தோம் என்று தோன்றுகிறது.

அந்த மாதிரியான இம்மெச்சூரிடிக்கு என்ன காரணம்? நீங்கள் படித்த பெண்தானே?

ஆமாம்! ஆனால் நான் நடிக்க வந்தபோது அதில் எனக்கு இஷ்டமில்லை! அப்போது ஆந்திராவில் நான் கல்லூரியில் முதல்



* முதல்வரிடமிருந்து விருது பெறுகிறார் ரோஜா



வருடம் படித்துக் கொண்டிருந்தேன். என் அப்பாவின் நண்பர் ஒருவர், தன் படத்தில் நடிக்க புதுமுகம் தேடிக் கொண்டிருந்தபோது, என் அம்மா பிரின்ஸ்பாலாக இருந்த நர்சிங் காலேஜுக்கு வந்திருந்தார். அங்கே மாணவிகள் யாரும் அவருக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் கிடைக்கவில்லை. எதேச்சையாய் என் போட்டோவைப் பார்த்துவிட்டு, என்னை நடிக்க வைக்கலாமே என்றார். நெருக்கமான குடும்ப நண்பரின் வேண்டுகோளை என் பெற்றோரால் மறுக்க முடியவில்லை. என் பேரில் அக்கறை கொண்டவர்கள் என் பெற்றோர். கேட்பவர் எங்கள் குடும்ப நண்பர் என்பது தவிர, இந்த ஒரே ஒரு படம் நடித்துவிட்டு, நீ நிறுத்திக் கொள்ளலாம்; தொடர்ந்து படிக்கலாம் என்று சொன்னதாலும் நான் நடிப்பதற்குச் சம்மதித்தேன்.

மேக் அப் போட்டு, கேமரா முன் நின்றபின், உங்களுக்கே சினிமா மீது ஆர்வம் ஏற்பட்டு, தொடர்ந்து நடிக்க முடிவு செய்தீர்களாக்கும்?

இல்லை... இல்லை. அந்தப் படத்தில் நடித்த ஒரு முன்னணி நட்சத்திரம், என்னை இன்சல்ட் பண்ணியதுதான், நான் சினிமாவில் தொடரக் காரணம்.

இன்சல்ட்டா?

சினிமாவில் நடிப்பதற்கு உன்னை எல்லாம் எப்படி செலக்ட் பண்ணி

னார்களோ! சினிமா ஸ்டார் என்றால் நல்ல கலராக இருக்கனும் என்று நேரடியாகவே என்னை மட்டம் தட்டிப் பேசி, மனத்தை நோகடித்தார் அந்த நடிகை. நான் சிவப்பாக இல்லையென்றால் என்ன? அதையும் மீறி சினிமாவில் நிலைத்துக் காட்ட வேண்டும் என்கிற வெறியை அது எனக்குள் ஏற்படுத்தியது. முதல் படம் முடிந்த பின்னும் தொடர்ந்து நடிக்க படங்களை ஒப்புக் கொண்டேன். அந்தக் குறிப்பிட்ட நடிகையுடன் நடிப்பதற்கு வாய்ப்புகள் வந்தபோது, மறுத்தேன். ஒன்றல்ல இரண்டல்ல, எட்டு படங்களில். அவர் நடிக்கிறார் என்கிற ஒரே காரணத்துக்காக, வெளிப்படையாக அந்தக் காரணத்தையே சொல்லி, நடிக்க மறுத்தேன். அதற்கு என் தன்னம்பிக்கைதான் காரணமே யொழிய கர்வம் அல்ல;

சவாலில் ஜெயித்த கையோடு, சினிமாவுக்குக் குட்பை சொல்லி விடலாம் என்று தோன்றவில்லையா?

இல்லை... அதுதான் சினிமாவின் சக்தி. சினிமாவால் கிடைக்கும் புகழ், பணம், பாபுலாரிடி எல்லாம் எனக்குப் பிடித்துவிட்டது. ஒரு சாதாரண பெண் என்றால், எனக்கு இத்தனை பேரும் புகழும் பணமும் கிடைத்திருக்குமா? ஒரு தொழிலதிபர், ஒரு அரசியல் தலைவரை விட, சினிமா நட்சத்திரங்களுக்குத்தானே இன்று அதிக பாபுலாரிடி! அதற்கான வாய்ப்பு, கஷ்டப்படாமலேயே வெகு எளிதில் எனக்குக் கிடைத்திருப்பது பெரிய அதிர்ஷ்டம்! அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஒதுங்குவது புத்திசாலித்தனம் இல்லை என்பது என் எண்ணம்.



பணம், புகழ் எல்லாம் சரி! ஆனால் ஆணாதிக்கம் மிகுந்த சினிமா உலகில், நடிகைகளுக்கு முக்கியத்துவம் கிடைப்பதில்லையே! திரும்பத் திரும்ப அழுகை, சென்டிமென்ட், பாட்டு, டான்ஸ் இவைதானே! நடிப்பு போரடிக்கவில்லையா?

சலிப்பு என்பது எதில்தான் இல்லை. தினமும் காலையில் எழுந்து இதே பல்லைத்தானே பிரஷ் பண்ணுகிறோம். இதே குளியல், இதே உணவு, போர் என்றால் எல்லாம் போர்தான்! எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, அவசியமானபோது, சிற்சில மாற்றங்கள் செய்து, அனுபவித்து, சந்தோஷப்படுவதுதானே வாழ்க்கை! சினிமாவிலும் அப்படித்தான்! வெவ்வேறு கதை, கேரக்டர், லொக்கேஷன், ஹீரோ, டைரக்டர், கம்பெனி... என்று ஒன்றுக்கொன்று எத்தனை வித்தியாசங்கள்? அதை நான் ரசிக்கிறேன்.

உங்களைச் சந்தோஷப்படுத்துவது பணமா?

இல்லை... எனக்குப் பிரச்னை வந்ததே பணத்தால்தான்! அதிரடிப்படை என்று படம் ஒன்று தயாரித்தேன்! அதன் பின்தான் அமைதியாய்ப் போய்க் கொண்டிருந்த என் வாழ்க்கையில் அடுக்கடுக்காய்ப் பிரச்னைகள்.

திரையுலகில் சொந்தப்படம் எடுக்கிறேன் என்று ஆழம் தெரியாமல் காலை விட்டு, அழிந்து போனவர்கள் எத்தனையோ பேர்! அவர்களைப் பார்த்து நீங்கள் பாடம் கற்றுக் கொள்ளவில்லையா?

நம்பிக்கை... மற்றவர்களுக்கு அப்படி நடந்தாலும் நமக்கு நடக்காது என்கிற நம்பிக்கை... விமான விபத்து நடக்கிறது. ஆனாலும் மக்கள் விமானப் பயணம் மேற்கொள்ளாமலா இருக்கிறார்கள்? நாம் போகிற விமானம் விபத்துக்குள்ளாகாது என்கிற நம்பிக்கையில்தானே! அது போலத்தான் படம் எடுத்தேன். எதிர்பார்த்தது நடக்கவில்லை! அதற்கு என்ன செய்ய? பைனான்சியரிடம் கடன் வாங்கிப் படம் எடுப்பது; படம் தோல்வியடைந்து; கடனை அடைக்கக் கஷ்டப்படுவது எல்லாம் சினிமா உலகில் சகஜம் தானே! ஆனால் என்னை மட்டும் கோர்ட்டுக்கு இழுக்கும்படி... விதி என்று நொந்து கொள்வதைத் தவிர வேறு என்ன செய்வது?

அப்படியென்றால், சந்தோஷம் இழந்து தவிக்கிறீர்களா நீங்கள்?

அப்படிச் சொல்ல மாட்டேன். பிரச்னை என்று மூலையில் உட்கார்ந்து கொண்டு

அழுது கொண்டிருந்தால், தீர்ந்து விடப் போகிறதா என்ன? எனக்கென்று சின்னச் சின்ன சந்தோஷங்கள் உண்டு. அடுத்தவர்கள் கட்டாயத்துக்காக எதையும் செய்யாமல், என் இஷ்டப்படி, நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்யப் பிடிக்கும். நல்ல தூக்கம் போடுவது எனக்குப் பிடித்த விஷயம். தனிமையான பீச் பகுதிக்குப் போய் நீச்சலடிக்கப் பிடிக்கும். ஒரு விதத்தில் பார்த்தால், நான் 'டோன்ட் கேர்' டைப்! எதற்கும் அஞ்ச மாட்டேன்!



அப்படியென்றால், பத்திரிகைகளில் வரும் கிசுகிசுக்கள் உங்களைப் பாதிப்பது இல்லை – உங்களுக்கு எய்ட்ஸ் என்ற வதந்தி உட்பட....

பொதுவாக நான் கிசுகிசுக்களைக் கண்டு கொள்ளுவதே இல்லை. பத்திரிகைகள் வியாபார நோக்கத்தில், இல்லாததையும், பொல்லாததையும் எழுதிக் கொள்ளுகிறார்கள் என்று நான் உதாசீனப்படுத்தி விடுவேன் என்றாலும், எதற்கும் ஒரு லிமிட் உண்டு. அதை மீறி விட்டார்கள் இந்த விஷயத்தில். எய்ட்ஸ் புரளி என்னை ரொம்பவே பாதித்துவிட்டது. எழுதுவதற்கு முன்னால், என்னிடம் நேரே வந்து, 'உங்களுக்கு எய்ட்ஸாமே?' என்று கேட்டிருந்தால், இல்லையென்பதை நிரூபிக்க ரத்தப் பரிசோதனை செய்து கொள்ளவும் நான் சம்மதித்திருப்பேன். எந்தவித ஆதாரமும் இல்லாமல், இப்படி ஒரு பயங்கர கற்பனை மூலம் பரபரப்பு ஏற்படுத்தியது என்னை ரொம்ப கலங்க வைத்தது. நல்லகாலம்! இதய நோயாளியான என் அம்மாவுக்குத் தமிழ் தெரியாது! அவர் படித்திருந்தால், அதிர்ச்சியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்திருந்தால், பொய் எழுதிய பத்திரிகையா உயிரை மீட்டுக் கொடுப்பார்கள்? (குரலில் கோபம் தொனிக்கிறது)

அந்தக் காலத்தில் சாவித்ரி, பத்மினி, சரோஜாதேவி போன்றவர்கள் எல்லாம், திரையுலகில் நீண்ட காலம் நிலைத்து இருக்க முடிந்தது. இப்போது வருகிறவர்கள் எல்லாம், இரண்டொரு ஆண்டில் காணாமல் போய் விடுகிறார்களே! இதற்கு என்ன காரணம்?

சினிமாவுலகில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. தேவைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. நாங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் அறிமுகமாகியிருந்தால், அவர்களைப் போலவே நீடித்து நின்றிருப்போம். அவர்கள் இந்தக் காலத்தில் அறிமுகமாகி இருந்தால், சீக்கிரமே ஓரங்கட்டப்பட்டிருப்பார்கள்! சாவித்ரியை எடுத்துக் கொண்டால், அறிமுகமான சில வருடங்களில் எவ்வளவு குண்டாகக் காட்சியளித்தார்! ஆனாலும் தொடர்ந்து நடித்தார். அது போல இன்றைக்குச் சாத்தியமா?

நடிப்பதற்கு வந்திருக்காவிட்டால்...?

இந்தப் பதிலை நடிகைகள் வழக்கமாகச் சொல்வதுதானே என நினைக்காதீர்கள். நர்ஸிங் காலேஜ் பிரின்ஸிபாலான என் அம்மா நான் ஒரு டாக்டராக வேண்டும் என்று விரும்பினார். ஆனால் எனக்கு சின்ன வயசு முதலே ஏர் ஹோஸ்டஸ் ஆக வேண்டும் என்று கனவு. ஆக, நடிக்க வராமல் போயிருந்தால், ஏர் ஹோஸ்டஸ் ஆகியிருக்காவிட்டாலும் நிச்சயம் டாக்டராகி இருப்பேன்.

அதெல்லாம் சரி! உங்கள் படங்களில் எல்லாம் நீங்கள் காதலிக்கிற ஹீரோ, கிளைமாக்ஸில் உங்களைக் கைபிடித்து விடுகிறார். ஆனால் நிஜ வாழ்க்கையில் உங்கள் ஹீரோ ஆர்.கே. செல்வமணியை எப்போது கைபிடிக்கப் போகிறார்?

நானும் அவரும் காதலிப்பது ஊரறிந்த விஷயம். என் குடும்பத்தில் நான்தான் இப்போது சம்பாதிக்கிறவள். எனக்கு இரண்டு அண்ணன்கள். அவர்கள் நல்லபடியாய் செட்டில் ஆக வேண்டும். இருக்கிற இதர பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். அதெல்லாம் முடிக்காமல், நான் திருமணம் செய்து கொள்ளுவது சாத்தியமில்லை. எல்லாம் நல்லபடியாய் முடியட்டும். இதுவும் நல்லபடியாய் முடியும்!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
அட்டை, வண்ணப்படங்கள்:
தர்ட் ஐ பிரகாஷ்
விழா படம்: **யோகா**

குழி

பிரகாஷ் ஷர்மா

சாலை நெடுகக் குழி வெட்டிக் கொண்டிருந்தார்கள். "என்னத்துக்கு இப்படி ரோட்டைப் பிளந்து போட்டுண்டு குழியை வெட்டிண்டு கிடக்கிறா! ஜனங்களுக்கு எத்தனை தொல்லை?"- பாக்கியம் மாமி... காலையில் தள்ளுவண்டி காய்கறிக்கார னிடம் காய் வாங்கும்போது கேட்டாள்.

'எதனால் குழி வெட்டுகிறார்கள்!' என் எனக்கும் தெரியவில்லை.

"அது மாமி... டெலிபோன் லைனுக் காகத்தான் இவ்ளோ பெரிய குழி. இந்தியா வுலயே டெல்லிக்கு அப்புறம் நம்ம ஊர்ல தான் இந்தமாதிரி 'டெக்னிக்' பண்றாங்க. இந்த 'லைன்' போடறதுனால டெலிபோன் கட்டணம் கூட குறையுமாம்."- காய்கறிக் காரன் சொன்னான். காய்கறிக்காரனுக்குத் தெரிந்தது கூட நமக்குத் தெரியவில்லையே... என வெட்கமாக இருந்தது எனக்கு.

"வீட்டு வாசல்ல கோலம் போட முடியலை" என என் மனைவி வருத்தப் பட்டாள். காலையில் வாக்கிங் போக ரொம்பவும் சிரமப்பட்டார் வயதான என் அப்பா. இரண்டு நாள் தெருவே அல்லோல கல்லோலப்பட்டது. நாலு அடி ஆழமும்... இரண்டு அடி அகலமுமான குழி... குழியில் கிடந்த மண்ணைத் தோண்டி வெளியே கொட்டியிருந்தார்கள். இது இல்லாமல்... புதிதாக வேறு நான்கு லோடு மணலும்... ஜல்லியும் வந்து இறங்கியது.

எனக்கு மனத்தில் அந்த 'ஐடியா' உதித் தது. ரொம்ப நாளாய் மேல் மாடியில் சீலிங் ஒழுகிக் கொண்டே இருக்கிறது. பழைய காலத்து காரை சுவர். அந்த 9 அடிக்கு 9 அடி "சீலிங்"கைப் பறித்துவிட்டு... மணலும்... ஜல்லியுமாக சிமெண்ட் கலந்து பூசினால் ஒழுகல் நின்றுவிடும். வீட்டு வாசலிலேயே மணலும், ஜல்லியும் கேட்பாரற்றுக் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. எதற்குக் காசு செலவு பண்ணுவானேன்? இங்கே இருக்கிற மணலையும் ஜல்லியையும் இரவு 12 மணிக்குமேல் உரச் சாக்குகளில் அள்ளி வீட்டுக்குள் வைத்துவிட்டால் காசு மிச்சம். அப்புறமா ஒரு மேஸ்திரியைக் கூப்பிட்டு சிமெண்ட் மட்டும் ரெண்டு மூட்டை வாங்கினா போதும். சிமெண்ட் செலவும் கூலியும் மட்டும்தான். மனத்துக்குள் கணக்குப் போட்டேன். மனக் கால்குலேட்டர் மொத்தமாக ரூ.1500 மிச்சம் என்று சொல்லிற்று.

"அடே.... கிராதகா! கவர்மெண்டு சொத்து... கை வைக்கலாமா?" என்றது ஆழ்மனம். நியாய... தர்மம் பார்த்தால் வேலைக்காகாது. இரவு மூட்டைகளை எடுத்துப் போட்டால் முதுகுவலி வந்துவிடும். நாளைக்கு ஒரு நாள் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட வேண்டியது தான். முடிவு செய்தேன்.

மனைவி சுமதியிடம் கூடச் சொல்ல வில்லை. சாயங்காலம் ஆபீஸ் விட்டு வந்ததும் சொல்லிவிடலாம். இப்போதே சொன்னால் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் எல்லாம் எனது புத்திசாதுர்யத்தைப்(?) பெருமையடித்துக் கொள்வாள். இரவு 12 மணிக்கு மேல் எல்லோரும் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டால்.. வம்பு!

ஆபீஸிலும் இதையே யோசித்துக் கொண்டிருந்தேன். "டூட்டி டைம்ல என்னப்பா சிந்தனை?" என்றார் மேனேஜர். தலை கவிழ்ந்து வேலையைப் பார்த்தேன்.

மாலை 6 மணிக்கு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வீட்டின் முன் கூடத்தில் நாலைந்து சுடப்பாரை. நல்ல தரமான பீவிசி ப்ளாஸ்டிக் குழாய்கள். இன்னும் நிறைய சாமான்கள் ஒரு மூலையில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"என்ன சுமதி... இதெல்லாம்?"- மனைவியிடம் கேட்டேன்.

"டெலிபோன் லைனுக்காக குழி வெட்டிண்டு இருக்காளே... அந்தக் காண்ட்ராக்டர் சாயந்தரம் நம்ம வீட்டுக்கு வந்தார். இன்னிக்குக் காலையில



நீங்க ஆபீஸ் போகும் போது உங்களைப் பார்த் தாராம். "தெருவுலயே உங்க குடும்பம்தான் நல்ல குடும்பமா தெரிஞ்சதும்மா. உங்க வீட்ல இந்தப் பொருள்களையெல் லாம் வெச்சா பத் திரமா இருக்கும்னு சொல்லி வெச்சுட் டுப் போயிருக்காரு!'' என்று சுமதி சொன் னாள்.

இரவு வாசலில் படுத்துக் கொண்டு தெருவில் மண லையோ... ஜல்லியையோ யாரும் களவாடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்தேன். ●



பஞ்ச
மசிய



சிக்கலில் மனீஷா!

நடிகை மனீஷா கொய்ராலாவுக்கு வக்கீல் நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது. இதுகுறித்து பல மும்பைத் தயாரிப்பாளர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். உடனே இதையும் ஒரு 'ரோஜா-போத்ரா' விவகாரம் என்று நினைக்க வேண்டாம். இதன் பின்னணியில் இருப்பது மேனகா காந்தி!

திரைக் காட்சிகளில் மிருகங்கள் வதைபடுவது சகஜமான ஒன்று. கதாநாயகனின் தங்கை பாத்திரம் பலாத்காரம் செய்யப்படுவதைக் காட்ட தரையில் ஒரு மீனை வீசி அது துடிதுடித்து ஓய்வதைக் காட்டுவார்கள். ஒரு சினிமாவில் வில்லன் நடிகர் ஒருவர் புறா ஒன்றின் இறகுகளை ஒவ்வொன்றாகப் பிய்ப்பது போன்ற காட்சியை அமைத்திருந்தார்கள் – கதாநாயகியை அப்படிப் பாடுபடுத்தப் போகிறாராம்!

குதிரை மீது ஏறி கதாநாயகன் புரியும் சாகசக் காட்சிகளில், காட்டிலும் மேட்டிலும் பயணம் செய்யும்போது அந்தக் குதிரை கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்ட சம்பவங்கள் உண்டு. பிறகு வேறொரு குதிரையை வைத்துப் படப்பிடிப்பைத் தொடருவார்கள். தேவர் தயாரித்த ஒரு படத்தில் வெயில் தாங்காமல் அடுத்தடுத்து நாகப் பாம்புகள் இறந்து விட, ஒரே ரோலை ஐந்து நாகங்கள் அந்தப் படத்தில் ஏற்றனவாம்.

திரையிடத் தயாராக உள்ள ஒரு இந்திப் படம் 'ராஜா கோ ராணி ஸே ப்யார் ஹோ கயா' (ராஜாவுக்கு ராணியிடம் ஆசை வந்திருச்சு). ஆனால் படத்தில் ராணிக்குத்தான் யானைக்குட்டியிடம் ஆசை இல்லை போலும். அந்தப் படத்தில் இடம்பெறும் நான்கு மாத யானைக் குட்டியின் வாலைப் பிடித்து மனீஷா இழுப்பது போன்ற காட்சி படத்தில் இடம்பெற்றது. அதோடு யானைக்குட்டிக்குக் கடுமையான பயிற்சிகள் கொடுத்து சில காட்சிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்த விஷயம் மேனகா காந்தியின் காதுகளை எட்ட, அவர் அதை மத்திய சென்ஸார் போர்டின் கவனத்துக்கு எடுத்துச் சென்று நியாயம் கேட்டிருக்கிறார். இந்த சென்ஸார் அமைப்பின் தற்போதைய தலைவரான ஆஷா பரேக் ஒரு முன்னாள் நடிகை. மனீஷாவுக்கு மட்டுமல்ல, படத்தின் தயாரிப்பாளர் மோகன் என்பவருக்கும் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து திரைப்படங்களில் மிருகங்களைப் பயன்படுத்துவது குறித்து சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று அறிவித்திருக்கிறார் மேனகா.

இவர் யார் இதையெல்லாம் கூற? என்று மும்பை தயாரிப்பாளர்கள் போர்க்கொடி பிடித்திருக்கிறார்கள். என்றாலும் வழக்கம் போல மிருக அபிமானிகளின் ஆதரவு மேனகாவுக்கு.

'சிம்பாலிக்காகத்தானே காட்டக்கூடாது' நிஜ காட்சிகளையே காட்டுகிறோம்'என்று இயக்குனர்கள் ஆரம்பிக்காமல் இருந்தால் சரிதான்!

— ஜி.

"முழு உடலையும் ஒரு சிடி ஸ்கேன் செய்து பார்த்துவிடுவது" என்ற போக்கு அமெரிக்காவின் கலிபோர்னியாவாசிகளிடம் அதிகரித்துக்கொண்டு வருகிறதாம். ஏதோ நோயால் அவதிப்படு பவர்கள்தான் என்றில்லை, முழு ஆரோக்கியத்துடன் இருப்பவர்களும்கூட இப்படி ஒரு மருத்துவ பரிசோதனையை செய்து கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

உடலில் ஏதாவது கட்டிகள் ஆரம்பக் கட்டத்தில் இருந்தாலேகூட அவற்றை இந்த முறையில் கண்டுபிடித்து, நீக்கி வருமுன் காப்பதே நல்லது என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம்.

சிறந்த ஐடியாதானே என்று கூறுபவர்களுக்குச் சில எச்சரிக்கை மணிகளை ஒலிக்கிறார்கள் பிரபல மருத்துவர்கள் சிலர். சிடி ஸ்கேன் என்ற சாதனத்தின் மூலம் உடலின் மிக நுட்ப மான பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கண்டறிய முடியும் என்பது உண்மைதான். ஆனால் இதில் வேறு சில எதிர்பாராத நிகழ்வுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

சில வகைத் திசுக்களில் தழும்புகள் ஏற்பட்டிருந்தால் கூட, சி.டி. ஸ்கேன் அதை "என்னவோ ஏதோ"



ஸ்கேன் எச்சரிக்கை!

என்று நினைக்க வைத்து விடும். உடனே உடலுக்குள் நவீனக் குழாய்களை செலுத்தியெல்லாம் அதை உறுதி செய்து கொள்ள முடிவெடுப்பார்கள் மருத்துவர்கள். குறிப்பிட்ட பகுதியில் அசௌகரியம் ஏற்பட்டு அந்தப் பகுதியை மட்டும் ஸ்கேன் செய்வது வேறு. ஆரோக்கியமானவர்கள்கூட முழு உடல் ஸ்கேனிங்கை செய்துகொண்டு மேற்படி அவஸ்தைகளுக்கு உள்ளாவது வேறு இல்லையா? எனவே "உடல் முழுவதும் ஸ்கேனிங்" என்பது தேவையில்லாத விஷயம் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

இந்தச் சமயத்தில் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் நடைபெற்ற ஒரு கூத்து நினைவுக்கு வருகிறது. எக்ஸ்-ரே கருவிகளைப் பயன்படுத்திக் கொள்வது என்பதைச் செல்வந்தர்கள் ஒரு பெருமையாக நினைத்திருந்த காலம் அது. "உடம்பு முழுக்க ஒரு எக்ஸ்-ரே" என்று எடுத்துக்கொண்டார்கள். பிறகுதான் எக்ஸ்-ரே கதிர்களால் உண்டாகக்கூடிய ஆபத்துகள் விளக்கப்பட்டு இப்படி எக்ஸ்-ரேக்களை எடுத்துத் தள்ளிய ஃப்ளுரோஸ்கோப் என்ற கருவிகள் தடை செய்யப்பட்டன.

— ஜி.எஸ்.எஸ்



முகாரித்தேன்

மா மரத்தில்
கிளையோடு கிளையாக இருந்து
குயிலொன்று
கூவிக்கூவி நிறுத்துகிறது.
அதன் குரல் இடியுடன்
இரவெல்லாம் பொழிந்த மழையை விட
அதிக பட்ச ஈரமாயிருக்கிறது.
தன் கணவனை
கவனம் தவறிய வேளையில்
ஆலமரத்தில் முந்நாளில் சுட்டவன்
யாரெனக் கூவி
அது அழுகிறது.
ஆனாலும் இசையாகிறது.
நானும் அழுகிறேன்
ஆனால்
நாராசமாயிருக்கிறது.
இதயம் பிளக்கும் ஒலி.
ஆறாத புண் மேல்
பனிக்கட்டியால் அடிப்பது போல.

— பா. சத்திய மோகன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

வீட்டின் அழகு **கதவில்** தெரியும் !

Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka